**வில்பத்து வர்த்தமானி பிரகடனம்:**

## நல்லாட்சி அரசாங்கத்தின் அப்பட்டமான இனவாதம்

10



07



நேர்காணல்: அமீன் இஸ்ஸதீன்
துணை ஆசிரியர், சண்டே டைம்ஸ்

**ஊடகங்கள் பிரிந்து செயற்படுகின்றபோது ஐக்கியத்தை கட்டியெழுப்ப முடியாமல் போகிறது**

03



**SAITM அரச ஊழலில் பகடைக்காய்**


# மீள்பார்வை

මීල්පාර්වෙ
සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

Registered as a newspaper in Sri Lanka
GPO-QD/75/NEWS/2017 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
www.meelparvai.net

இதழ் - 366 • 07 ஏப்ரல் 2017 வெள்ளிக்கிழமை • ரஜப் 1438 • விலை 40.00







# முஸ்லிம்களின் காணிகள் பறித்தெடுப்பு முஸ்லிம் அமைப்புக்கள் களத்தில் குதிப்பு



மன்னார் முசலிப் பிரதேச சபைக்கு உட்பட்ட 22 முஸ்லிம் கிராமங்கள் ஜனாதிபதியினால் இந்த மக்களிடமிருந்து பறித்தெடுக்கப்பட்டுள்ளன. தமிழ்ப் பயங்கரவாதப் புலிகள் விரட்டியடித்ததால் 1990 ஆம் ஆண்டில் அங்கிருந்து வெளியேறிய முசலிப் பிரதேச மக்கள் அங்கு வந்து தமது சொந்த நிலங்களில் மீளவும் குடியேறிக் கொண்டிருக்கும் வேளையில் அரசாங்கம் அவர்களின் நிலங்களைப் பறித்தெடுத்து வன விலங்குகளுக்கு வழங்கியுள்ளது. இந்த அப்பட்டமான அநியாயம் தொடர்பில் முஸ்லிம் சமூகத்தின் தலைமைகளும் சிவில் அமைப்புக்களும் தற்போது ஒன்று திரண்டு செயற்பட்டு வருகின்றன.

## ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கவில்லை

**மௌலவி எம்.எம்.ஏ. முபாரக் -**
பொதுச் செயலாளர், அகில இலங்கை ஜம்மியதுல் உலமா



முசலிப் பிரதேச மக்களின் விவகாரம் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் சக்திக்கு அப்பாற்பட்டது. ஜனாதிபதிக்கு அழுத்தங்கள் கொடுக்கின்ற நிலையில் ஜம்மியதுல் உலமா இல்லை. இது ஒரு சமூகப் பிரச்சினை என்ற வகையில் ஜனாதிபதியின் செயலாளருடனான சந்திப்பில் நாங்களும் பங்கெடுத்தோம்.

இந்தப் பிரச்சினையில் முஸ்லிம் அரசியல்வாதிகள் செய்ய வேண்டிய பெரியதொரு பங்களிப்பு இருக்கிறது. முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இந்த விவகாரத்தில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என நாங்கள் அவர்களுக்கு மீளவும் வலியுறுத்துகிறோம்.

## நல்லாட்சி விழுமியங்களுக்கு எதிரானது

**நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் ஊடக அறிக்கை**




2012 ஆம் ஆண்டு கடந்த அரசாங்கத்தினால் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அடிப்படையில் வில்பத்து சரணாலயத்துக்குச் சொந்தமில்லாத, எனினும் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்து வந்த தமது குடியிருப்புக் காணி, விவசாயக் காணி, மேய்ச்சல் காணி என்பவை அரசாங்கத்தினால் கையகப்படுத்தப்பட்டது.

2012 ஆம் ஆண்டு குறித்த வர்த்தமானி அறிவித்தலானது ஒரு வர்த்தமானி அறிவித்தலை உத்தியோகபூர்வமாக அறிவிப்பதற்கு முன் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் எதுவும் பின்பற்றப்படாமலேயே வர்த்தமானி அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டது. (பக்.14)

## போதைப் பொருளைக் கட்டுப்படுத்தவே படையினரால் முஸ்லிம்களின் காணிகள் அபகரிப்பு



மன்னார் முசலிப் பிரதேச சபைக்குட்பட்ட முஸ்லிம்களின் ஒரு இலட்சம் ஏக்கர்களுக்கும் அதிகமான காணிகள் அரசாங்கத்தால் பறித்தெடுக்கப்பட்டுள்ள நிலையில், மன்னார் சிலாவத்துறையில் படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகள் அங்கு போதைப் பொருள் கடத்தல் இடம் பெறுவதனாலேயே கையகப்படுத்தப்பட்டதாக தமக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதாக பிரதமர் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். (பக்.14)

## அனுமதியில்லை

**-செயலாளர், தேசிய சூறா சபை**

NSC

முசலிப் பிரதேச முஸ்லிம்கள் தொடர்பில் தேசிய சூறாவின் நிலைப்பாடு என்ன, அது தொடர்பில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என தேசிய சூறா சபையின் பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் மிப்லி அவர்களைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, இது தொடர்பில் உத்தியோகபூர்வமான கருத்துக்களை வெளியிடுவதற்கு அனுமதியில்லை என்று தெரிவித்தார்.

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து முசலி விவகாரம் தொடர்பில் காத்திரமான சந்திப்பொன்றை தேசிய சூறா சபை செய்த போதும் இது தொடர்பில் முஸ்லிம் சமூகத்தை அறிவூட்டும் வகையில் எந்த ஊடக அறிக்கையும் அவர்களால் இது வரை வெளியிடப்பட வில்லை.

## தான் செய்தது சரி என்ற நிலைப்பாட்டிலேயே ஜனாதிபதி இருக்கிறார்

**அமைச்சர் ரிஷாத் பதியுதீன்**
அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்



1990 ஆம் ஆண்டு வெளியேற்றத்துக்கு முன்னர் மாவில்லு, வெப்பல், மறிச்சுக்கட்டிக் காணிகள் அரச காணிகளாகவே இருந்தன. வனப்பகுதிகளாக இருக்கவில்லை. அது காடாக வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்படவுமில்லை. தற்போது வர்த்தமானியில் இது காடாகப் பிரகடனப்படுத்த முன்னர் 14 நாட்கள் முன்னறிவித்தல் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

இந்தப் பிரதேசத்தில் ஏதும் நிலம் காடாகப் பிரகடனப்படுத்தப்படுவதாக இருந்தால் அது தொடர்பில் இந்தப் பிரதேசத்தின் அரசியல்வாதிகள், பொது மக்கள், அரசாங்க அதிபர்களின் கருத்துக்கள் பெறப்பட வேண்டும் என நாங்கள் மாவட்ட அபிவிருத்திக் குழு (DCC) கூட்டத்தில் முடிவெடுத்திருந்தோம். இந்த முடிவின்படி ஜனாதிபதியின் செயலாளர் செயற்படவில்லை. எந்த அபிவிருத்தி முயற்சிகள் நடப்பதாக இருந்தாலும் அனைத்து (பக்.14)

## நாங்கள் தேசிய சூறா சபையுடன் இணைந்து பணியாற்றுகிறோம்

**அப்துல் மஜீத்-** தவிசாளர், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமையில் ஒரு தூதுக் குழு ஜனாதிபதியின் செயலாளரைச் சந்தித்துப் பேசியுள்ளது. சூறா கவுன்ஸில் நடத்திய கூட்டத்தில் நாம் எமது கருத்துக்களை தெரிவித்துள்ளோம். இதில் இரண்டு விடயமுள்ளது. ஒன்று இது முஸ்லிம் சமூகம் சம்பந்தப்பட்ட பிரச்சினை. இதில் எல்லோரும் ஒன்றிணைந்து ஒரே கருத்துடன் செயற்பட வேண்டும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

## பல முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன

**என்.எம்.அமீன்,**
தலைவர், ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சில்



இந்தக் காணிகளை வனஜீவிகள் சட்டத்தின் கீழ் கொண்டுவரும் வகையில் வர்த்தமானி அறிவித்தல் வெளிவரப் போவதாக எமக்குத் தகவல் கிடைத்தது. வனஜீவராசிகள் சட்டத்தின் கீழ் வருவது சர்வதேச நியமங்களின் கீழ் வருவதாகும். இப்படி வந்தால் எம்மால் எதுவும் செய்ய முடியாது. இதனால் நாங்கள் ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு முயற்சித்தோம். ஆனால் அதற்குரிய அவகாசம் கிடைக்கவில்லை. அஸாத் ஸாலி ஜனாதிபதியைச் சந்தித்து முஸ்லிம்களது எதிர்ப்பையும் தெரிவித்து ஒரு பாரிய ஆர்ப்பாட்டத்துக்கு முஸ்லிம்கள் (பக்.14)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடிக்கொண்டிருக்கும் அரசாங்கம்

- ரிஸ்வான் ஷஹீத் -



29 வருஷத்துக்கு முன் உடுத்த துணியோடு துரத்தப்பட்டோம் என்று கண்ணீர் மல்க வசனம் பேசிப் பேசியே கோடிகளில் புரளும் அமைச்சராகட்டும்,

சோனக உரிமைக்காக உருவாக்கம் பெற்று பணம் பதவிகளை மட்டுமே பெற்று, தனித்துவம் விற்று சாணக்கியம் பேசும் தலைமையாகட்டும்,

வெட்டினாலும் பச்சையென்ற முஸ்லிம்களின் முட்டாள்தனத்தை முதலீடாக வைத்து மாமாத்தனம் செய்யும் பச்சை அரசியல்வாதிகளாகட்டும்,

அளுத்கமயில், தம்புள்ளயில், ஹலால் பிரச்சினையில் இணைந்து செயல்படாமல் நீங்கள் தத்தமது ஈகோவையும் கட்சிக் கொடிகளையும் தூக்கிப் பிடித்து வெவ்வேறு திசைகளில் பயணித்ததை, முன்னைய எதிர்க்கட்சியான தற்போதைய அரசு அவதானித்ததன் பிரதிபலனே ஜனாதிபதியின் ரஷ்ய பயணத்தின்போது அறிவித்த கெசட் அறிவிப்பு.

முஸ்லிம் அரசியல்வாதிகளே! உங்கள் மரணத்தின் பின், நீங்கள் வகித்த பதவி, உங்களின் பொறுப்பு சம்பந்தமாக அல்லாஹ் கேள்வியெழுப்ப மாட்டான் என்றா எண்ணியுள்ளீர்கள்?

பலவீனர்களாவே எழுப்பப்படுவீர்கள் உங்களை சுற்றி உதவிக்கு யாரும் இல்லாமல் தனித்துத் தவிக்க வேண்டிய நிலையை உருவாக்காதீர்கள்.

புலிகளிடமிருந்து எல்லாவற்றையும் இழந்து வந்த ரிஷாட் பதியுத்தீன்,

சந்திரிகா காலத்தில் இரவோடிரவாக கார், பதவி பறிக்கப்பட்ட ரஊப் ஹக்கீம்,

17 வருடம் எதிர்க்கட்சியில் குப்பை கொட்டி அமைச்சர்களான யானைகளே!

'நீங்கள் மீண்டு வரவில்லையா?'

உங்களுக்கான கடைசி வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

அல்லாஹ்வை பயந்தவர்களாக 'மரிச்சுக் கட்டி' என்ற புள்ளியிலாவது இணைந்து உங்களை சுத்தப் படுத்திக்கொள்ளுங்கள்.

ஆடிக்கொண்டிருக்கும் அரசாங்கம், அல்லாஹ்வை மனதில் நிறுத்தி ஒன்றாக பலத்தை பிரயோகித்துப் பாருங்கள்.




- அஷ்ரப் சிஹாப்தீன்

ஜனாதிபதி மைத்ரியின் வன பரிபாலன அறிவிப்பானது எண்பதுகளில் முஸ்லிம்களைச் சட்டை செய்யாத ஜே.ஆர். - ராஜிவ் ஒப்பந்தத்தை விடவும் மோசமானது.

ஜே.ஆர் - ராஜீவ் ஒப்பந்தமே இலங்கை முஸ்லிம்களை ஓர் அரசியற் குடையின் கீழ் கொண்டு வந்தது. நனையாமல் காயாமல் காப்பாற்றும் நிலையில் குடை இப்போது இல்லை.

வன பரிபாலன அறிக்கையானது விழித்துக் கொண்டிருப்பவனின் முழிகளை உயிருடன் பறித்த கதையாகியிருக்கிறது.

இதற்கான விளைவு அடுத்த தலைமுறையில் வேறொரு கோணத்தில் உருவெடுக்க இடமுண்டு. அந்நேரம் அத்தலைமுறையினர் யாருடைய சொல்லைக் கேட்பதற்கும் தயாராக இருக்கமாட்டார்கள்.

30 வருட உள்நாட்டுப் பிரச்சனையின் விலையை நாட்டிலுள்ள எல்லோரும் இன்னும்தான் செலுத்திக் கொண்டிருக்கிறோம். 3.00 ரூபாய்க்கு விற்ற பாணை 60 ரூபாய்க்குச் சாப்பிடவேண்டி வந்தது.

வன பரிபாலனம் பெயரால் ஊன்றப் பட்ட அநியாய வித்து ஒரு இறாத்தல் பாணை 1000 ரூபாவுக்கு வாங்கும் நிலைக்குக் கொண்டு சென்று விடக் கூடும்.

எந்த மக்களின் பெயரால் ஒரு சமூகத்தின் வாழ்விடங்கள் பறித்தெடுக்கப்பட்டனவோ அவர்களும் சேர்ந்தே எதிர்காலத்தில் பிச்சைப் பாத்திரம் ஏந்த வரலாம்!

அப்படி நிகழுமாக இருப்பின் 'நமது தலைவர்கள் தூரநோக்கற்றவர்களாக இருந்திருக்கிறார்கள்' என்று பெரும்பான்மை சமூகமே அவர்களை எள்ளி நகையாடும்!

---

- இம்ரான் ஹுஸைன்

*100% சவுதிய முஸ்லிம் தனவந்தர்களின் பணத்தில் நிர்மாணிக்கப்பட்ட நுரைச்சோலை வீடமைப்புத் திட்டத்தை சட்டத்தால் சதி செய்து நிறுத்தினார்கள்.*

67 வருடம் பழமையான தம்புள்ளைப் பள்ளிவாசல் காணியை போலியான நகர அபிவிருத்திச் சட்டம் இயற்றி அபகரித்தனர்.

இராணுவ முகாம்கள் என்ற பெயரில் தமிழ் கிராமங்களை அபகரித்து திட்டமிட்ட இராணுவக் குடியிருப்புக்களை வட மாகாணம் பூராவும் நிறுவினார்கள்.

புல்மோட்டையிலும் திருகோணமலையிலும் கிண்ணியாவிலும் புத்தர் சிலைகளை வைத்து காணிகளைக் கொள்ளையடித்தனர்.

தற்போது வனப் பாதுகாப்பும் புடலங்காயும் என்று சொல்லி மன்னார் முஸ்லிம்களின் பூர்வீகக் காணிகளை அக்கிரமமான முறையில் சதித் திட்டம் தீட்டி அபகரித்துள்ளனர்.

இந்த நயவஞ்சத்திற்கு எதிராக குரலெழுப்ப வேண்டிய தருணம் இது.

சிறிசேனவின் எதேச்சாதிகாரத்தை தடுத்து நிறுத்த வேண்டியது மிகவும் அவசியம்.

# புள்ளிவிபரங்களுடன் எமது பிரச்சினையை முன்வைப்பது யார்?

- டில்ஷான் முஹம்மத் -



மரிச்சுக்கட்டியை அண்மித்த பகுதிகளை வனவிலங்கு பாதுகாப்பு வலயமாக ஜனாதிபதியால் பிரகடப்படுத்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை நீக்கக்கோரி பொதுமக்களாலும் சில சிவில் சமூக அமைப்புக்களாலும் பல ஆர்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆனாலும் எவ்வெந்த பகுதிகள் இந்த குறித்த எல்லைப்பகுதிக்குள் வருகின்றன என்பது தொடர்பாக ஒரு தெளிவான வரைபட விளக்கங்களை எங்குமே காணமுடியவில்லை.

பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசத்திற்குள் எத்தனை குடியிருப்புக்கள், பள்ளிவாசல்கள், பாடசாலைகள் அமைந்திருந்தன/ அமைந்திருக்கின்றன என்பது தொடர்பான ஒரு தெளிவற்ற நிலையே இருக்கிறது. இதற்குள் இந்த எல்லைக்குள் முஸ்லிம்களுக்கு சொந்தமான எந்தவிதமான காணிகளும் உள்ளடங்கப்படவில்லை என்று ஜனாதிபதி அறிவித்திருக்கிறார்.

வெறும் அறிக்கைகளை நம்ப முடியாது. எது எப்படி என்றாலும் இவற்றின் எல்லைகளை குறிக்கும் ஒருங்கிணைப்பு புள்ளிகள் (Coordinate point) கொடுக்கப்படிருக்கின்றன. இவற்றை பாவித்து படம் வரையக்கூடிய எவராச்சும் ஒரு வரைபடத்தை உருவாக்கினாலேயே இந்த வர்த்தமானி அறிவித்தல் உண்மையில் மக்கள் வாழ்விடங்களை விழுங்கியிருக்கிறதா, ஆம் என்றால் அதன் வீச்சு எவ்வளவு இதன் தாற்பரியங்கள் என்ன என்பதுடன் மக்கள் போராட்டத்தின் நியாயங்களையும் வெளியில் உள்ளவர்கள் புரிந்து கொள்ள வசதியாயிருக்கும்.


## புதிய மாணவர் அனுமதி - 2017, ஹிஜ்ரி 1438

**19 வயதில் குர்ஆனியக் கற்கையுடன்**
**ஆங்கில மொழிமூலம் A/L Commerce மற்றும் AAT பரீட்சைகளை**
**சிறப்புச் சித்திகளுடன் பூர்த்தி செய்வதற்கான ஒரு சந்தர்ப்பம்**

8 வருட கால அனுபவம் | தலைநகரில் பாதுகாப்பான இஸ்லாமிய சூழல்

**கற்கைநெறியின் உள்ளடக்கம் - English Medium**

- Tharbiyya
- Diploma in Thafseer
- Islamic Banking & Finance Qualification
- A/L Commerce - 2019
- AAT (Level 1,2 and 3)
- Information Management
- Physical Fitness & Games

வதிவிட வசதியுடன் கூடிய கற்கைநெறி – 33 மாதங்கள்

**AAT Examination Pass Rate - 100% (July 2016)**

ஆங்கில மொழி மூல பரீட்சைகளில் “A” தரச்சித்திகளை பெற்றுக்கொள்வதற்கு தமிழ் மொழிமூல மாணவர்களை பயிற்றுவிக்கும் தனித்துவமான ஆங்கில மொழிப் பயிற்சி

தகைமைகள் :

- க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு ஆங்கிலம் அல்லது தமிழ் மொழி மூலம் தோற்றியிருத்தல்.
- குறைந்த பட்சம் 06 பாடங்களில் திறமைச் சித்திகளைப் பெற்றிருத்தல்.
- 31.01.2017 இல் 17 வயதிற்கு உட்பட்ட ஆண் மாணவராக இருத்தல்.

* அனுமதிக்கான தகைமையுடைய ஹாபிழ்களுக்கு விஷேட புலமைப்பரிசில்கள்

பிரவேசப் பரீட்சைக்கான விண்ணப்பங்களையும் மேலதிக தகவல்களையும் பெற்றுக்கொள்ள
TEXT YOUR NAME AND ADDRESS TO 0777 23 1234

விண்ணப்ப முடிவுத் திகதி 22 04.2017

MINDRICH Enrichment of Excellence
COLLEGE OF MANAGEMENT STUDIES
كلية الدراسات الإدارية

No. 49, Second Lane, Dehiwala.
T : 0115 23 1234 E: infomindrich@gmail.com

TOWARDS TEENAGE ACHIEVERS



## கண்டி மடவளையில் பெண்களுக்கான

O/L பரீட்சையில்
சித்தியடைய தவறியவர்களுக்கான

**2017 G.C.E O/L Revision Project**
தமிழ் மொழி மூலம்

உலகில் தலைசிறந்தவர்களில் அநேகமானோர் முதல் முயற்சியில் வெற்றி பெறத்தவறியவர்களே!

- 2016 அல்லது அதற்கு முன்னர் G.C.E O/L இல் சித்திபெற தவறிய மாணவிகள் உள்வாங்கப்படுவர்.
- இம் மாணவிகளுக்கு O/L கல்வியோடு மேலதிகமாக ஆன்மீக பயிற்சியும் வழங்கப்படும்.
- ஒவ்வொரு பாடத்திற்கும் தேர்ச்சி பெற்ற முன்னணி ஆசிரியர்களின் வழிகாட்டல்.
- கல்லூரியினுள் இஸ்லாமிய சூழலுடன் கூடிய வதிவிட வசதி

**Arts Languages & Commerce Streams**

**A/L 2019**
தமிழ் மொழி மூலம்

- O/L இல் சித்தி பெற்றவர்களும் மற்றும் கணித பாடத்தில் மாத்திரம் சித்திபெற தவறியவர்களும் இணைத்துக்கொள்ளப்படுவர்.
- கணித பாடத்தில் சித்திபெற வறியவர்களுக்கு அடிப்படையில் இருந்து இலகு வழியில் கற்பித்து 100% சித்தி உறுதி செய்யப்படும்
- ஒவ்வொரு பாடத்திற்கும் தேர்ச்சி பெற்ற முன்னணி ஆசிரியர்களின் வழிகாட்டல்
- கல்லூரியினுள் இஸ்லாமிய சூழலுடன் கூடிய வதிவிட வசதி

இம் மாணவிகளுக்கு A/L கல்வியோடு மேலதிகமாக பின்வரும் பயிற்சிநெறிகளும் வழங்கப்படும்

- ஆன்மீகப்பயிற்சி (தஜ்வீத்,தர்பியா,அஹ்லாக்)
- ஆங்கில,சிங்கள மொழிப்பயிற்சி
- சமையற்கலை
- தையற்கலை
- வாழ்க்கைத்திறன்
- உளவியல்
- சுயதொழில் பயிற்சிகள்

இவற்றுடன் மேலும் சில...

தொடர்புகளுக்கு: 0777 78 52 40

EMERRAD Ladies College
36/3B | SIRIMALWATTA ROAD | MADAWALA BAZAAR | KANDY
M: 0777 71 71 29 T: 081 20 50 600


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SAITM அரச ஊழலில் பகடைக்காய்

• முஹம்மது அதிவதீன் (M.Phil)
சிரேஷ்ட சட்டவாக்கத்துறை ஆய்வாளர்




நல்லாட்சிக்கான உறுதிமொழியுடன் மக்கள் ஆணையைப் பெற்ற அரசாங்கம் 'ஊழல் அரசியலின்' பிடியிலிருந்து மீளமுடியாதபடி சிக்கிக்கொண்டுள்ளது. ஊழல் மிகுந்த கடந்த அரசாங்கத்தின் ஊழல் நடவடிக்கைகளுடன் தொடர்பு பட்ட ஒரு சில சக்திகள் ஆட்சி மாற்றத் துடன் புதிய அரசாங்கத்தினுள் நுழைந்து தமது அரசியல் வியாபாரங்களை இன்றும் தொடர்கின்றன.

இந்த ஊழல் அரசியலின் வெளிப் பாடாகவே இன்று எமது தேசத்தின் தர மிக்க மருத்துவத் துறைக்கு ஒரு சாவு மணியாக SAITM தோற்றுவிக்கப்பட் டுள்ளது. மிகையான இலாபமீட்டல், கமிஷன் கொடுக்கல் வாங்கல்களுடன் கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய் யப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட SAITM வலையில் சுமார் 700 மாணவர்கள் சிக்கி யுள்ளனர். இவர்களை அப்பாவி என்று குறிப்பிடுவதை விட, துரித சம்பாதிப்பு (Quick Money) மீதான மோகத்தில் கவ ரப்பட்டவர்கள் அல்லது ஊழல் அரசிய லின் பங்காளர்கள் என்றும் குறிப்பிட லாம்.

இவர்களில் பாதிப் பேர் 40-50 இலட் சம் ரூபாக்களை வங்கிகளிலிருந்து கட னாகப் பெற்று இளவயதிலேயே கடன் சுமைக்கும், மன அழுத்தங்களுக்கும் உட்பட்டுள்ளனர். கடன் கொடுத்த வங்கி களும் எப்படியோ தமது கடனை வட்டி யுடன்/இலாபத்துடன் மீளப் பெற SAITM அங்கீகரிப்பட வேண்டும் என்ற போராட் டத்துக்கு அமைப்பியல் ரீதியாக உதவி வருகின்றன.

ஷரீஆ வங்கிகளும் 'SAITM பாதகங் களைக் கொண்டிருப்பினும் கல்விக்காக கடன் வழங்குவது ஆகுமானதாகும்' என்று தம்மை நியாயப்படுத்த முயற்சிக் கின்றன. பொருள் முதல்வாத சமூகத் தில் 'குறிப்பிட்ட ஒரு சிலரின் இலாபத் துக்கு எதிரே சமூக நீதி மறுக்கப் பட்டதாகவே இருக்கும்.

SAITM சட்டபூர்வமானதா, இல் லையா? அதன் மூலம் வழங்கப்படும் மருத்துவப் பட்டம் ஏற்புடையதா? தரமானதா? எனும் விடயங்கள் இன்று நீதிமன்றத்தின் முன் உள்ளன. இருப் பினும் 'இலவசக் கல்வி, கல்வி உரிமை மற்றும் சமூக நீதி' என்ற பின்னணியில் சில விடயங்களை இந்தக் கட்டுரை ஆராய முற்படுகிறது.

மேட்டுக் குடியினருக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த கல்வியானது இலவசக் கல்விக் கொள்கை ஊடாக இன்று அனைத்து மக்களுக்கும் கிடைக் கப் பெறுகின்றது. இலவசக் கல்வியின் தந்தையாக C.W.W. கன்னங்கரா அவர்கள் நாமம் சூட்டப்பட்டாலும் அதனை அடைவதில் முன்னின்று செயற்பட்ட கல்வியலாளர் கலாநிதி T.B. ஜாயா அவர் களின் பங்களிப்பினை நாம் என்றும் மறந்துவிட முடியாது. எமது மூதாதை யர் எமக்குப் பெற்றுத் தந்த இலவசக் கல்வியின் பயனாளியாக, அதன் பயன் எமது அடுத்த சந்ததியினருக்கும் கிடைக் கப் பெற வேண்டும் என்ற நோக்கில் நான் இங்கு எழுதுகின்றேன்.

இந்த இலவசக் கல்வியே பண பல மும், அதிகாரமும் கொண்டவர்களின் பிள்ளைகளுக்குச் சமமாக சாதாரண ஒரு கூலித் தொழிலாளியின் பிள்ளையும் கல்வி கற்கும் வாய்ப்பினை வழங்கிய துடன், சமூக மாற்றத்தின் பயனை சமத் துவமான முறையில் அனைவருக்கும் கிடைக்கச் செய்தது.

இலங்கையில் வருடாந்தம் முதலாம் தரத்தில் அனுமதிக்கப்படும் 3,50,000 மாணவர்களுக்கும் 'நான் வைத்தியராக ஆக வேண்டும்' என்ற எண்ணம் இருந் தாலும், வெறுமனே 1,255 மாணவர்களே மருத்துவத் துறைக்கு அனுமதிக்கப்படு கின்றனர். இது வெறும் 0.36% மாகும். அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் ஒப் பிடுகையில் இலங்கையில் 1000 பேருக் கான வைத்தியர் எண்ணிக்கை குறை வாக உள்ளமையால் நாம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி வழங்கி னோம் என அரசு நீலிக் கண்ணீர் வடிக் கின்றது.

யதார்த்தம் என்னவெனில், இலங் கையின் 10,144 பாடசாலைகளில் உயர் தர உயிரியல் விஞ்ஞானப் பிரிவுடனான 92 பாடசாலைகள் மாத்திரமே உள்ளன. இதன்படி, ஆற்றல் இருந்தும் திறன் மிக்க 50% மாணவர்கள் வசதியின்மை காரணமாக வைத்தியராகும் தமது கனவை க.பொ.த (சா/த) பரீட்சையுடன் கைவிட்டு விடுகின்றனர். கொழும்புக்கு வெளியே உள்ள பல உயிரியல் விஞ் ஞானப் பிரிவுகள் ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் ஆய்வுகூட வசதிகள் இன்றி தனியார் வகுப்புக்களின் உதவியுடன் இயங்கி வருகின்றன.

அது அவ்வாறிருக்க, தனியார் மருத் துவத்துறை வியாபார மோகத்தை யடுத்து, அரசாங்கமும் பல்கலைக்கழகத் துக்கான மருந்துவத்துறை அனுமதியை படிப்படையாகக் குறைத்து வருகின்றது. இன்று அரச பல்கலைக்கழகங்களில் வரு டாந்தம் 2,225 மருத்துவ மாணவர்களை அனுமதிக்கும் வசதியிருந்தும் வெறு மனே 1,255 மாணவர்களே அனுமதிக் கப்படுகின்றனர். அதாவது விவசாயி, கூலித்தொழிலாளர்கள், ஆசிரியர்களின் பிள்ளைகளுக்குக் கிடைக்க வேண்டிய மருத்துவத்துறை அனுமதியில் சுமார் 40% பங்கை அரசியல் வாதிகளினதும், முதலாளிமார்களினதும் பிள்ளைகளின் நலன் கருதி தனியார் துறைக்கு ஒதுக் கப்பட்டுள்ளது.

ஊழல், மோசடிகள் மற்றும் வங்கிக் கடன்கள் (சாதாரண குடிமகனுக்கு இந்த மரபு ரீதியான/ஷரீஆ வங்கிகள் 1000 ரூபா கடனைக் கூட வழங்காது) மூலம் பணத்தை திரட்டியவர்களின் பிள்ளை களின் நலன் கருதி க.பொ.த (உ/த) உயிரியல் துறையில் மருத்துவத் துறை க்கு விண்ணப்பிக்க தகுதி பெற்ற 23,000 மாணவர்களின் 'மருத்துவக் கனவு' குழிதோண்டிப் புதைக்கப்படுகிறது.

தேசிய தகுதிகாண் பரீட்சையில் தகைமை பெறாது, வெறுமனே சாதாரண சித்திகளுடன் ஒரு கோடி 20 இலட்சம் பணம் செலுத்தி பின்கதவு வழியாக மருத்துவப் பட்டம் பெற முயற்சிப்ப வர்களுக்குக் குரல் கொடுக்கும் எமது சமூகம் இலவசக் கல்வி முறைமையின் கீழ் போட்டியிட்டு ஒன்று, இரண்டு அல்லது மூன்று புள்ளிகளால் 'வைத்திய ராகும் கனவை' இழந்த ஏழை விவசாயி கள் மற்றும் கூலித்தொழிலாளர்களின் பிள்ளைகளின் நலன் கருதி அரச மருத் துவ பீட மாணவர் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக ஏன் குரல் கொடுப்ப தில்லை? தகைமையுடையவர்களைக் காட்டிலும், அதிகாரத்துடனான தனவந் தர்களின் (ஊழல் மிக்கவர்களின்) கைகளே என்றும் மேலோங்கியிருக்கும். இதுவே அதர்மத்தின் வெளிப்பாடு.

கல்வியை தனியார் மயப்படுத்த வேண்டும் என்ற உலக வங்கியின் நிர்ப் பந்தத்தில் SAITM அமைப்பை நியாயப் படுத்த தற்போதைய அரசும், அரச தரப்பு பா.ம. உறுப்பினர்களும் கடும் முயற்சி யெடுத்து வருகின்றனர். தமது உறவினர் களும், வேண்டப்பட்டவர்களின் பிள் ளைகளும் இங்கு கற்பது இவர்களது உத்வேகத்தை தூண்டியுள்ளது.

நகைப்புக்குரிய விடயம் என்ன வெனில், கொழும்பு மத்தியில் 50% மாணவர்கள் அரச பாடசாலைகளில் கூட அனுமதிக்கப்படாத நிலையில் அவர் களுக்காக குரல் கொடுக்க பாராளுமன் றம் சென்ற உறுப்பினரும் தமக்கு வாக்க ளித்த மக்களை மறந்து (பக்.14)

கண்டி மற்றும் திஹாரியில்

Diploma in **Business Management**
- Business Objectives
- Marketing
- Entrepreneurship
- HRM
- Accounting & Finance
- Production

Duration 4 Months
பாடநெறி ஆரம்பம் Apr - 17

Get 5 Diplomas
**Real Access Program**
- Diploma in Web Designing
- Diploma in Graphic Designing
- Diploma in Hardware Enineering
- Diploma in Computer Studies
- Diploma in Spoken English

03 Months | Full Time | Mon - Fri 8.30 a.m - 4. 30 p.m
பாடநெறி ஆரம்பம் Apr - 17

HOT LINE 0777 222 529

Diploma in **Teacher Training Program**
- DIPLOMA IN MONTESSORI TEACHER TRAINING -(AMI)
- DIPLOMA IN CHILD PSYCHOLOGY
- DIP. IN PRE SCHOOL TEACHER TRAINING

*Well qualified panel of Lecturers with American Qualification*
Certificate Level - 3
பாடநெறி ஆரம்பம் Apr - 16
AMI
06 Months

Diploma in **AUTO CAD**
Computer Aided Designing & Drafting
Saudi, Dubai, Qatar, Drawings will be given to the students for practice
G.C.E. O/L, A/L → Diploma AUTO CAD → Advance Diploma AUTO CAD → AUTO CAD → MEP 3D Special
Certificate Level - 3
பாடநெறி ஆரம்பம் Apr - 16

Diploma in **MEDIA**
By Academy of Media Colombo
(Leading Journalist Panel in Sri Lanka)
- News Paper
- Radio
- Television

Duration - 3 Month
Medium : Tamil
பாடநெறி ஆரம்பம் Apr - 29

Diploma in **Hotel Management**
- *Front office*
- *Food & Beverages*
- *International Cookery*
- *House Keeping*
- *Pastry & Bakery*
- *Languages - French & English*

Duration 4 Months
பாடநெறி ஆரம்பம் Apr - 17

பாடநெறி முடிவில் ISO தரச்சான்றிதழ்கள் உற்பட 3 DIPLOMA சான்றிதழ்கள் வழங்கப்படும்.
இப்பாடநெறிகலை பூர்த்தி செய்பவர்களுக்கு சிறந்த சம்பளத்துடன் 100% தொழில் பெற்றுத்தரப்படும்.
ஆண் /பெண் இருபாலாருக்கும் வெவ்வேறான பாதுகாப்பான தங்குமிட வசதி - Hostel Available

**GOLDEN COLLEGE**
No : 548, Peradeniya Road, Kandy. | No : 126, Kandy Road, Thihariya.
www.goldencollege.lk
081 2 205 544 | 0777 222 529
033 2 245 515 | 0777 222 528

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




49, Sri Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258 077 222 7569
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## சமூகம் பகடைக் காயாகக் கூடாது

முஸ்லிம் சமூகத்தின் சோகமான தலைவிதி தொடர்ந்தவண்ணமுள்ளது. கடந்த ஆட்சிக் காலத்தில் முஸ்லிம் விரோத சக்திகள் முஸ்லிம்களுக்கு எதிராக பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்தனர். இதற்கு ஆட்சியில் இருந்த அரசாங்கம் எந்த எதிர்நடவடிக்கையும் எடுக்காமல் ஆதரவளித்து வந்தது.

நாட்டு மக்களுடன் இணைந்து முஸ்லிம்கள் ஆட்சி மாற்றமொன்றுக்கு ஒத்துழைத்ததன் பயனாக முஸ்லிம் விரோத செயற்பாடுகள் தணிந்து விடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஜனாதிபதியும் நீதியமைச்சரும் குறித்த முஸ்லிம் விரோதச் சக்திகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். முஸ்லிம் விரோதச் சக்திகளின் செயற்பாடுகளின் தீவிரம் தற்போது தணிந்துள்ளது. ஆனாலும் இந்தப் பொறுப்பை அவர்களிடம் இருந்து அரசாங்கம் ஏற்றுள்ளதா என்று எண்ணத் தோன்றும் வகையிலேயே அரச மட்ட செயற்பாடுகள் தற்போது நடந்தேறிவருகின்றன.

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் தமது தாயகம் திரும்புவதற்கான காணி வசதிகளை இராணுவத்திடம் இருந்து அரசாங்கம் இன்னும் மீட்டுத் தரவில்லை. இந்த நிலையில் கருமலையூற்று பள்ளிவாசல் காணிகளையும் இராணுவம் கையகப்படுத்தியுள்ளது. முசலி பிரதேச சபைக்குட்பட்ட 22 முஸ்லிம் கிராமங்களிலும் இராணுவம், குறிப்பாக கடற்படை, தனது ஆதிக்கத்தை விரிவுபடுத்தி வருகிறது. இதற்கு ஒத்துழைக்குமாற்போல அரசாங்கம் முஸ்லிம்களின் குடியிருப்புக் காணிகள், விவசாய நிலங்கள் உள்ளிட்ட ஓரிலட்சத்துக்கும் அதிகமான ஏக்கர் நிலத்தை மக்களிடமிருந்து பறித்து காடுகளுக்கும் காட்டு விலங்குகளுக்குமென ஒதுக்கியுள்ளது.

முஸ்லிம் சமூகம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட போது நாடு முழுவதிலும் இருந்து முஸ்லிம்கள் திரண்டு வந்து நிவாரணப் பணிகளில் ஈடுபட்டார்கள். அளுத்கமை கறுப்பு ஜூன் அனர்த்தத்தின் பின்னர் கோடி கோடியாக முஸ்லிம்கள் உதவிகளைக் கொண்டு வந்து கொட்டினார்கள். கிண்ணியாவில் டெங்கு நுளம்பு பரவுகின்ற போது பல்வேறு பள்ளிவாசல்களிலும் திரண்டிருந்து முஸ்லிம்கள் துஆச் செய்தார்கள், நிவாரணங்களை வழங்கினார்கள்.

இவை அனைத்தையும் விட முஸ்லிம்களுடைய நிலங்கள் அபகரிக்கப்பட்டு அவர்களது சொந்த நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு பூர்வீகமற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ள நிலையில் இவர்களுக்கு சமூகம் என்ன செய்ய முன்வந்திருக்கிறது ? நிலமற்றவர்களாக மாற்றி முஸ்லிம்களை நாடற்றவர்களாகச் செய்யும் இந்த அனர்த்தத்துக்கு முஸ்லிம் சமூகம் வழங்கப் போகும் நிவாரணம் என்ன? வெள்ளத்தின் போதும், உடைமைகள் தீயிட்டுக் கொழுத்தப்பட்ட போதும் ஓடி வந்த சமூகம், இவ்வளவு பெரிய அநியாயம் முஸ்லிம் சமூகத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட போதும் துடித்து எழாமல் மௌனமாக இருப்பது ஏன்? ஒரு சிறிய கோடை வந்தாலே துஆக் கேட்கச் சொல்லும் எமது தலைமைகள் சமூகத்தின் இருப்பையே பாதிக்கின்ற இந்த அநீதியின் போது வாயை மூடிக் கொண்டிருப்பதன் அர்த்தம் என்ன ?

2012 இல் சுவீகரிக்கப்பட்ட நிலங்களைப் பற்றி யாருமே குரல் கொடுக்காததுதான் மீண்டும் முஸ்லிம்களின் காணிகளில் கைவைக்கின்ற தைரியத்தை உரியவர்களுக்குக் கொடுத்திருக்கிறது. முசலிப் பிரதேச மக்களின் பிரச்சினையை ஒரு சமூகப் பிரச்சினையாகப் பார்ப்பதற்கு முஸ்லிம் சமூகத்தின் அனைத்துத் தலைமைகளும் தவறிவிட்டன. கண்முன்னே தனது சமூகம் துகிலுறியப்படுகின்ற போதும் ஆளையாள் சுட்டிக் காட்டி தப்பித்துக் கொள்கின்ற வழமையான பல்லவியே இந்த நாட்டில் நடந்தேறுகிறது. இந்தச் சூழலைப் பயன்படுத்தி தனது இருப்பைப் பாதுகாத்துக் கொள்வதற்கு என்ன செய்யலாம் என்றே அனைத்துத் தரப்புகளும் சிந்திப்பதாகத் தோன்றுகின்றது.

மக்களுடைய முட்டாள்தனமும் இதற்குக் காரணம். என்னதான் அநியாயத்தை செய்தாலும் அதைத் தட்டிக் கேட்கின்ற துணிச்சலான சமூகமாக இந்தச் சமூகம் இல்லை. இந்தத் தலைவிதியை மாற்றுகின்ற சக்தி மக்களிடமே இருக்கிறது. தம்மைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்தி சமூகத்தை எரிய விட்டு அதிலே குளிர்காய்கின்ற புல்லுருவிகளிடம் இருந்து சமூகத்தை மீட்டெடுப்பது சமூகத்தின் கடமை. சுயலாபங்களில் இருந்து விடுபட்டு உண்மையானதொரு போராட்டத்தை நோக்கி இந்தச் சமூகத்தை வழிநடத்துவதற்கு மக்கள் சக்தியாலேயே முடியும்.

# "ஆலோகோ உதபாதி" மீண்டும் ஒளி கிடைக்குமா?

• ஷெட்டி ரம்ஸி

'ஆலோகோ உதபாதி' சிங்களத் திரைப்படத்தின் ஐம்பது நாள் நிறைவையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய கோத்தாபய ராஜபக்ஷ 'நாட்டையும் இனத்தையும் காப்பாற்ற மூதாதையர்கள் எடுத்த முயற்சிகள் சிறப்பாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது' எனத் தெரிவித்தார்.

மஹிந்தவின் ஆட்சியின் கீழால் நாட்டையும் இனத்தையும் பாதுகாக்கும் தோரணையில் மக்களை ஏமாற்றத்தில் தள்ளி, லசந்த விக்ரமதுங்கவை கொன்று, பிரகீத் எக்னலிகொடவினை காணாமல் போகச் செய்து, கீத் நொயாரை தாக்கி அரங்கேற்றிய கொடுமைகள் எல்லாவற்றிற்குமான குற்றச்சாட்டுக்கள் தங்கள் மீது சுமத்தப்பட்டு வருகின்ற வேளையில் கோத்தாபய தெரிவித்துள்ள கருத்து இங்கு முக்கியமானதாக நோக்கப்பட வேண்டியுள்ளது.

முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போதைய நல்லாட்சி அரசின் மிக முக்கிய அமைச்சர் ஒருவராகவும் உள்ள சரத் பொன்சேகா 'சகல படுபாதகச் செயல்களும் அப்போது கோத்தாபய ராஜபக்ஷவின் நேரடிக் கண்காணிப்பின் கீழால் முன்னாள் இராணுவ புலனாய்வு பணிப்பாளரின் கீழ் இயக்கப்பட்ட காடையர் கோஷ்டியொன்றினால் முன்னெடுக்கப்பட்டதாகவும் தான் அப்போது அது தொடர்பில் எதனையும் அறிந்திருக்கவில்லை (தற்போது எப்படித் தெரியும்?) எனவும் தெரிவித்துள்ள கருத்தையும் இங்கு நோக்க வேண்டியுள்ளது.

கொழும்பிலிருந்து முன்னெடுக்கப்பட்ட இவ்விடயங்கள் தொடர்பில் அறியாமல் இருந்த முன்னாள் இராணுவத் தளபதி வெள்ளைக் கொடி சம்பவம் தொடர்பில் எவ்வாறு கருத்து தெரிவித்தார் என்பது கேள்விக்குறியாக உள்ளது.

இந்நிலையில் திருட்டுக் குற்றச்சாட்டில் சிறைப்படுத்தப்பட்டுள்ள விமல் வீரவன்ச 'நாட்டையும் இனத்தையும் காப்பாற்ற முன்னின்ற குற்றத்திற்கு சிறைபிடிக்கப்பட்ட தேசிய வீரன்' எனும் கதாபாத்திரத்தில் கனகச்சிதமாக நடித்து வருகிறார்.


கடந்த சில நாட்களாக இடம்பெற்ற இச்சம்பவங்கள், ஜனநாயகத்தை வென்றெடுக்கும் போராட்டம் எவ்வளவு கொடியது என்பதை தெளிவுபடுத்துகின்றன. ஐ.தே.க. மற்றும் சுதந்திர கட்சி அரசாங்கங்களில் அன்று முதல் இருந்து வந்த சகலரினதும் ஒரே எதிர்பார்ப்பாக இருப்பது நாட்டையும் இனத்தையும் காப்பாற்றுவதே ஒழிய நாட்டு மக்களை காப்பாற்றுவதல்ல என்பது மேற்படி கருத்துக்களினூடாக புலப்படுகின்ற மிக முக்கிய விடயங்களாக உள்ளது.

காலனித்துவ ஆட்சிக் காலப்பகுதியில் உருவான தேசிய மறுமலர்ச்சி இயக்கங்கள் 'வெள்ளையர்கள் இலங்கையை ஆக்கிரமிக்கிறார்கள்' எனும் கோஷத்தை முன்னிறுத்தி போராடின. காலணித்துவ ஆட்சிக்கு பின்னர் 'சிறுபான்மையினர் சிங்களவர்களை ஆக்கிரமிக்கிறார்கள்' எனும் கோஷம் மேலெழ ஆரம்பித்தது. இந்நவீன ஆதிக்கவாத பீதிக் கருத்தியலிலிருந்து எம்மால் இன்றளவும் விடுபட முடியவில்லை. 1956 இல் சிங்களம் அரச மொழியாக்கப்படுவதற்கும் அதன் பின்னர் இலங்கையில் சிவில் யுத்தத்தை உருவாக்குவதற்கும் அப்பீதியே பெரும்பான்மையினரை தூண்டியிருந்தது.

சுரேன் ராகவன் தனது,'Buddhist Monks and the Politics of Sri Lanka's Civil War எனும் நூலில் கொஸ்மிய கருத்தியல் (Cosmian Ideology) என்பதாக அறிமுகப்படுத்தும் விடயம் இதற்கு ஒப்பாகிறது. கொஸ்மிய கருத்தியல் என்பதை இலகுவில் தெளிவுபடுத்த முடியாது. அது மிகச் சிறிய பிரபஞ்சம். அதனை இன்னொரு முறையில் சொல்வதானால் அதுவொரு ஆதாரமற்ற கற்பனை உலகம்.

இவ்வுலகத்தை தனது நிலவுகைக்கான பௌதீக எல்லையாக கற்பிதம் செய்துகொண்டுள்ள இனக் குழு, எப்பொழுதும் அவ்வெல்லைக்குள் உள்ள உலகம் தமக்கானது மாத்திரம் என்றும் கொஸ்மானியர்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற ஏனைய குழுக்கள் தமது கொஸ்மியானவை ஆக்கிரமிக்கப்படுகின்றன என்றும் நினைக்கிறார்கள். எனவே இது இருப்பியல் ரீதியான (ontological) பிரச்சினையாக உள்ளது.

இலங்கையில் இன்று சிங்கள-பௌத்த கொஸ்மிய கருத்தியலுக்குள் சிக்குண்டுள்ளவர்களுக்கு இது எரியும் பிரச்சினையாக இருப்பதுடன் அதன் காரணமாக நாடு, இனம் என்பதாக அறிமுகப்படுத்தப்படுகின்ற இக்கொஸ்மியாவை பாதுகாக்கும் கட்டாயத்தில் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு செயலையும் நியாயப்படுத்தும் பழக்கம் பெரும்பான்மைச் சமூகத்திடம் உள்ளது.



சுதந்திரத்தின் பின்னர் தொட்டு இன்று வரையில் நாட்டு மக்களுள் பெரும்பான்மையினரை 'வெட்டினால் பச்சை, வெட்டினால் நீலம்' எனும் அடிமை அரசியலுக்குள் சிறைப்படுத்துவதற்கும் அக்கருத்தியல் பக்கபலமாக அமைந்துள்ளது.

மஹிந்த ஆட்சியின் கீழும் 'இனத்தையும் மதத்தையும் காக்கும் கொஸ்மிய போராட்ட கோசத்தை' பயன்படுத்தி குறுகிய அரசியல் இலாப நோக்கம் கருதி காவியுடை தரித்த காடையர் கோஷ்டியினர் தங்களது இனவாத கருத்துக்களை பரப்பினர். எவ்வாறிருப்பினும், ஆரம்பத்தில் இவ் ஏமாற்றத்தில் அகப்பட்டு ஞானசார போன்றவர்களை 'பௌத்தத்தின் பெயரால்' நியாயப்படுத்தி, பின்னர் அவரது சித்து விளையாட்டுக்களை நன்றாக விளங்கி அமைதிப்பட்டவர்கள் இன்றும் பாடம் கற்கவில்லை. இவர்கள் தமது சீருடைகளை அணிந்து கொண்டு, அச்சுறுத்தல்களை செய்து, பிரபலமானதொரு பயங்கரவாத கோஷ்டியாக செயற்பட்ட பொழுதிலும் கூட அதனை கண்டுகொள்ளாமல் மிதமாக நடந்துகொள்ளுமாறு ஆலோசனை கிடைக்கப்பெற்ற பாதுகாப்பு பிரிவு கூட காணாமல் போகச் செய்யப்பட்ட தமது உறவுகளுக்காக வேண்டி நீதியை வேண்டி ஆர்பாட்டம் செய்து, கொழும்பு வந்த மக்கள் தொடர்பில் நடந்து கொண்ட விதத்தையும் நாம் மறந்துவிடவில்லை.

ஆனால் இவையொன்றிற்கும் பெரும்பான்மை சமூகத்திடமிருந்து வெளிப்படையான எதிர்ப்புக்களோ விமர்சனங்களோ முன்வைக்கப்படவில்லை. ஒருபக்கத்தில், யுத்தக் கொலைக்களங்களுக்குச் செல்கின்ற அரசர்களுக்கு பிரித் ஓதி பெரஹராவில் சென்ற தேரர்கள் தொடர்பிலான வரலாற்றுக்கு சொந்தம் கூறும் இனம் என்ற வகையில் சிங்கள சமூகத்திடம் அவ்வாறான விடயங்களை எதிர்பார்ப்பது கடினம்.

கோபம், அச்சம் காரணமாக பாம்புகள் தீண்டுவதாக ஒரு நம்பிக்கை சமூகத்தில் உள்ளது. சிங்கள-பௌத்த கொஸ்மிய உலக கருத்தியலுக்குள் உள்ள இன அடையாளத்தின் பகைமையின் அடிப்படையும் இதுவென்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இவ்வச்சம் வானிலிருந்து விழுவதில்லை. கோதாபய, விமல் வீரசன்ச போன்றவர்கள் இத்தருணத்தில் இதையே செய்துகொண்டுள்ளார்கள்.

அன்றைய கொலைகார மஹிந்த இன்று விகாரைகள் தோரும் உள்ள தேரர்களை வணங்கி 'மனிதச் சுதந்திரம்' தொடர்பில் கருத்துக்களை தெரிவித்து வருவதும் பெங்கமுவே நாலக பிக்கு போன்றவர்கள் திருடனை காப்பாற்றுவதற்கு பௌத்த மதத்தை கேடயமாக பயன்படுத்தி சமூகத்தில் பிழையான கருத்துக்களை முன்வைத்து வருவதும் அதன் அண்மைய வடிவங்களாக உள்ளன. இதனால், நாட்டையும் இனத்தையும் காப்பாற்றுவதற்கு முன்னர் மக்களை பீதியுலகின் கைதிகளாக்கின்ற இவ்வாறான மோசடி அரசியல் பேர்வழியினரிடமிருந்து நாட்டை காப்பாற்றுவதற்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்பட வேண்டும்.

இப்பீதி உலகில் சிறைப்பட்டிருக்கும் வரையில் எமக்கு வெளிச்சம் கிடைக்கப் போவதில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றவூப் ஸெய்யன்

நல்லாட்சி அரசியல்

# பல்முனை நெருக்கடிகள் எதிலும் கவனம் குவிக்காத அரசு



நாம் ஆட்சியமைத்தால் 100 நாட்களுக்குள் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டுவிடுவோம் என்று முழங்கிய நல்லாட்சி அரசாங் கம், எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காணாமல் இழுத்தடிப்பு அரசியலில் ஈடுபட்டுள்ளது. மையப் பிரச்சினைகள் எதிலும் கவனம் குவிக்காத அரசு, நாட்களைக் கடத்திக் கொண்டிருக்கின்றது.

இரு தரப்பு உறவுகளைப் பலப்படுத்தல் எனும் பெயரில் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்வதிலும் உள்ளூரில் நடைபெறும் விழாக்களில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வதிலும் ஜனாதிபதியின் காலம் கடந்து செல்கின்றது. உடனடிப் பிரச்சினைகளுக்கு அதிரடித் தீர்வு காண்பதிலேயே அரசு கவனம் குவித்துள்ளது.

அரசாங்கத்தின் இந்த நடத்தை கதிரையைக் காப்பாற்றலாம், கட்சியைக் காப்பாற்றலாம், நாட்டையும் மக்களையும் காப்பாற்றப் போவதில்லை. எடுப்போம் கவிழ்ப்போம் என்று சூளுரைத்த அரசாங்கம் இப்போது காலம் கனிய வில்லை என்று கணக்குப் பார்த்துக் கொண்டிருக்கின்றது.

உயர் கல்வித் துறையில் சைடம் ஒரு தேசிய சர்ச்சை. எதிர்வரும் நாட்களில் அரசாங்க மருத்துவர் சங்கம் பணிப் பகிஷ்கரிப்பிலும் சாலை மறியலிலும் ஈடுபடவுள்ளது. பல்கலை மாணவர்களின் கவனக் கலைப்பானாக சைடம் மாறியுள்ளது. கல்வி தனியார் மயமாகுவது தவிர்க்க முடியாதது என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கு சிவில் சமூகத்திற்கு முன்னால் அரசால் வைக்கப்படும் காரணங்கள் வலுவானதாக இல்லை.

இலங்கைக்கு பாகிஸ்தானும் இந்தியாவும் அரிசி தானம் வழங்க வேண்டும் என்று அரசாங்கம் விடுத்துள்ள கோரிக்கைக்கு பாகிஸ்தான் சாதகமாகப் பதிலளித்துள்ளது. 10,000 மெட்ரிக் டொன் அரிசியை நிவாரணமாக வழங்க முன் வந்துள்ள நவாஸ் ஷரீப் முதற் கட்டமாக 3000 மெட்ரிக் டொன்னை அனுப்பியுள்ளார்.

வரட்சியினால் நெல் உற்பத்தி குறைந்துள்ளது என வாதிடும் அரசாங்கம், மில் முதலாளிப் பெறிச்சாளிகள் பதுக்கி வைத்துள்ள பல்லாயிரம் மெட்ரிக்டொன்அரிசிகுறித்துஅலட்டிக்கொள்ளாமல் உள் ளது. அரச நெல் களஞ்சியங்களில் வருடாந்தம் சேமிக்கப்படும் பல்லாயிரம் மெட்ரிக் டொன் நெல் முறையாக சந்தைப்படுத்தாததன் காரணமாக பாவனைக்கு உகந்ததல்ல என்று வீசப்படுகின்றது.

இலங்கை அரிசியில் தன்னிறைவு அடைந்துவிட்டது என்ற தேர்தல் வாக்கியம் 30 ஆண்டுகாலமாக பொய்ப்பிக்கப்பட்டே வருகின்றது. உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் இரசாயனங்களைப் பயன்படுத்தி பெருமளவு அரிசியை பதுக்கி வைத்துள்ள பொலன்னறுவை முதலாளிகள் குறித்து அரசு காக்கும் மௌனத்தின் அர்த்தம் என்ன?

இலங்கை ஒரு விவசாய நாடு எனப்படுகின்றது. எனினும், குறைந்த பட்சம் விவசாயத் தொழில்நுட்பத்தை அதிகபட்சம் பயன்படுத்தும் நாடாக வேனும் நாம் மாறவில்லை. விவாசயப் பொருளாதாரத்தை நாம் முகாமை செய்யும் இலட்சனம் இது தானா?

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் அனைத்தும் ஒரே அயன மண்டல கால நிலையைக் கொண்டுள்ளன. ஆனால், பாகிஸ்தானில் விளையும் பாஸ்மதி அரிசி இலங்கைக்கு இறக்குமதியாகின்றது. ஏன் இலங்கையில் அது விளையாதா? பொலன்னறுவை மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கே நமது ஜனாதிபதியால் தீர்வு சொல்ல முடியவில்லை.

நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்போம் என்ற முழக்கமும் மண்ணில் மடிந்து விட்டது. அரசியலமைப்பு வரையப்படுகின்றதா, வரையப்பட்டு விட்டதா, வரைவதற்கான முயற்சிகளேனும் நடக்கின்றதா என்பது மர்மமாகவே உள்ளது. கூட்டு எதிர்க்கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஆளுங் கட்சி அமைச்சர்களும் இது குறித்து ஒன்றுகொன்று முரண்பாடான அறிக்கைகளை விடுத்து வருகின்றனர்.

மாறி மாறி வரும் அரசாங்கங்களின் வஞ்சகமும் ஏமாற்றமும் இனவெறியும் சிறுபான்மை மக்களைச் சூழ்ந்துள்ள இந்நிலையில், நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டம் எதுவும் அரசிடம் இல்லை. தேசிய நிறுவனங்களை தனியார் மயமாக்குவதும் முதலீடு என்ற பெயரில் நாட்டை அந்நிய சக்திகளுக்குத் தாரைவார்ப்பதும் சர்வதேசமயமாக்கலுமே ரணிலின் கொள்கை என்று தயான் மிகச் சரியாகவே சொல்லியுள்ளார்.

ஒரு புறம் சர்வதேச நாணய நிதியம், இன்னொரு பக்கம் இந்தியா, அடுத்த முனையில் சீனா, அமெரிக்கா, ரஷ்யா, இப்போது அவுஸ்திரேலியா என்று இலங்கையின் தேசிய வளங்களில் கண்ணாங்கொத்திப் பாம்பு போன்று கவனமாக இருக்கும் சக்திகள், தமது நலன்களுக்கு வசதியாக இலங்கையில் தலையிட்டு வருகின்றன.

நாட்டின் மூலோபாய முக்கியத்துவமற்ற சொத்துக்களை விற்பனைக்கு விட வேண் டும் என்ற IMF இன் கோரிக்கை, இலங்கையின் இறைமை பற்றிய அச்சுறுத்தலை உருவாக்கியுள்ளது. ஏற்றுமதி, இறக்குமதி இடையில் நிலவும் பாரிய பற்றாக்குறையைத் தீர்ப்பது நீடித்த நெருக்கடியாகவே உள்ளது.

இறக்குமதிச் செலவு அதிகரித்து, ஏற்றுமதி வருமானம் குறைந்துள்ள நிலையில், அல்லாடிக் கொண்டிருக்கும் தேசிய பொருளாதாரத்தை நெருக்கடியிலிருந்து விடுவிப்பதற்கு அரசு கையாளும் வழிமுறைகளோ மிகவும் ஆபத்தானவை. குறைந்த காலத்திற்கு அதிகூடிய வட்டித் தொகைக்கு கடன் பெறுவது பிரச்சினைக்குத் தீர்வாகப் போவதில்லை. சாதாரண மக்களை பிளிந்தெடுக்கும் வகையில் வரியின் அளவை உயர்த்துவது அரசாங்கத்தின் அழிவுக்கே இட்டுச் செல்லும். ஏற்கனவே வாழ்க்கைச் செலவீனம் அதிகரித்துள்ள நிலையில், சேவைக் கட்டணங்களுக்கான வெட் வரி பன் மடங்கு அதிகரித்துள்ளது.

அரசாங்க சேவைக் கட்டணங்கள், தனியார் வைத்தியசாலைக் கட்டணங்கள் என்பன 100 வீதத்தால் அதிகரித்துள்ளது. இருப்போருக்கும் இல்லாதோருக்குமான இடைவெளியைக் குறைப்பதே வரியின் நோக்கம் என்று அறிவித்தார் அதனை அறிமுகப்படுத்திய டேவிட் ரிகாடோ. ஆனால், இன்று வரியைச் சுமத்தி, அரசாங்கத்தில் உள்ளவர்களின் சட்டைப் பைகளை நிரப்பும் இந்தக் கொள்கைக்கு நல்லாட்சி என்று பெயரா? இத்தனைக்கும் தெற்காசியாவிலேயே அதிசிறந்த நிதியமைச்சர் என்று விருது வழங்கப்படுகின்றார் நமது ரவி கருணாநாயக்க.

இன்னொரு புறம் நல்லாட்சி அரசாங்த்தில் முஸ்லிம்கள் எதிர்கொண்டுள்ள சவால், நிறுவனமயமாகிவரும் இனவாதம். வில்பத்து வனத்தைச் சூழவுள்ள வடமாகாண முஸ்லிம்களின் பூர்வீக நிலங்கள் அரச வர்த்தமானி அறிவித்தல் மூலம் பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசங்களாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இது வடக்கு முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்டுள்ள பாரிய அநீதியாகும். பச்சையான இனவாதமே இதற்குப் பின்னால் உள்ளமை தெளிவானது.

நல்லாட்சி அரசாங்கத்தில் இதுவரை முஸ்லிம்களின் பள்ளிவாயல்கள், மத அனுஷ்டானங்கள், கலாச்சார நடவடிக்கைகளுக்கு எதிராக நூற்றுக்கணக்கான சம்பவங்கள் நடந்தேறிவிட்டன. அவை தொடர்வதற்கான வாய்ப்பும் உள்ளது. ஆயினும், நல்லாட்சி அரசாங்கமோ எவ்வித கட்டுப்பாட்டு நடவடிக்கையும் இன்றி, அறிக்கை விடுகின்றது.

சமகால இலங்கை எதிர்கொள்ளும் மற்றொரு நெருக்கடி 'இலங்கையை வேகமாக விழுங்கி வரும் டெங்கு நோயாகும். 2017 இன் முதற் கால் பகுதியில் 25,000 பேரைத் தாக்கிய இந்நோயினால் 57 பேர் மரணித்துள்ளனர். தொடர்ந்தும் டெங்கின் பாதிப்பு அதிகரித்துச் செல்கின்றது. சுகாதாரத் துறையில் நிலவும் பல்வேறு நெருக்கடிகளுள் இதுவும் ஒன்று.

இலங்கைக்குப் பொருத்தமானதொரு மருந்துக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படும் என்று அரசாங்கம் அறிவித்தது. 2015 இல் இது தொடர்பான சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. எனினும் அதன் உண்மையான பலாபலன்களை மக்கள் இன்னும் அனுபவிக்கவில்லை. ஆக, பொருளாதாரம், மருத்துவம், கல்வி, இனப்பிரச்சினை என எல்லா முனைகளிலும் அரசாங்கம் நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளது. ஆயினும், எந்தப்பிரச்சினையையும் முழுமையாகத் தீர்த்துக் கொள்ளும் முனைவுகளில் அரசு இன்னும் ஈடுபடவில்லை. இரண்டு ஆண்டுகள் கடந்து விட்டன. ஐந்து ஆண்டுகள் முடிவடைவதற்கு இன்னும் மூன்று ஆண்டுகளே உள்ளன. இன்னொரு அரசு வந்தாலும் இதே வாக்குறுதிகள், இதே சூளுரைகள். பின்னர் அவையெல்லாம் காற்றில் கரைந்து போய்விடும். நம்மீது திணிக்கப்படும் விதி இதுதான் என்றால் நாம் இன்னொரு விதி செய்ய வேண்டும். மிதக்கும் பெருந்தொகை வாக்காளர்களை மூன்றாவது பலமான அணியாகத் திரட்டும் மூலோபாயமொன்று குறித்து சிந்திக்க வேண்டும்.

சிரேஷ்ட அரசியல் ஆய்வாளர் விக்டர் ஐவன் மேற்கொண்டு வரும் முயற்சி பாராட்டுக்குரியது. சிறுபான்மைச் சமூகங்கள் அவரது இந்தத் திட்டத்திற்கு முழு ஆதரவளிக்க முன்வர வேண்டும். இலங்கையின் இரு பெரும் அரசியல் கட்சிகளும் இலங்கையைக் கையாள்வதில் தோற்றுப் போய்விட்டன. அவற்றிடமிருந்து நாட்டின் தேசிய பிரச்சினைக்குத் தீர்வினை எதிர்பார்ப்பது குதிரைக்கு கொம்பு முளைக்கும் என்று கனவு காண்பது போன்றது. மூன்றாவது அணியே இன்றைய அரசியல் தேவையாகும். இதற்கான வெகுஜன கூட்டணிகளை உருவாக்குதே இன்றைய உடனடிப் பணியாகும். இது குறித்தும் நாம் சிந்திப்போமா?

## சமகால பிக்ஹ் பிரச்சினைகள்

# பரம்பரை இயல்பு மாற்றப்பட்ட உணவு வகைகள்



அறிவியலின் பிரமிக்க வைக்கும் வளர்ச்சி நிலைகள் நாளாந்தம் முன்னேறிச் செல்கின்றன. நவீன விஞ்ஞானத்தின் சாதனைகளில் ஒன்று; பரம்பரைப் பொறியியல் (Genetic Engineering) ஆகும். மனிதன் உள்ளிட்ட விலங்குகளின் பரம்பரை அலகுகளில் தலையீடு செய்யும் விஞ்ஞானிகள் இப்போது தாவரங்களின் பரம்பரை அலகுகளிலும் தலையீடு செய்து மாற்றங்களை நிகழ்த்தி வருகின்றனர்.

தாவரங்களில் காணப்படும் பரம்பரை இயல்புகளை மாற்றியமைப்பதில் கடந்த இரு தசாப்தங்களில் விஞ்ஞானம் பாரிய வெற்றி கண்டுள்ளது. மனிதனிலும் தாவரங்களிலும் பிற விலங்குகளிலும் அடங்கியுள்ள சிறப்பியல்புகளை அதன் பரம்பரை அலகுகளே நிர்ணயிக்கின்றன. எடுத்துக் காட்டாக, மனிதனின் கண், தலையின் அமைப்பு, விரல்களின் வடிவம் என்பவை பரம்பரை அலகுகளால் தீர்மானிக்கப்படுகின்றன.

பரம்பரை அலகுகள் பற்றிய அறிவியல் ஆய்வுகள் இன்று பரம்பரைப் பொறியியல் என பொதுவாக அழைக்கப்படுகின்றது. பழங்கள், தானியங்கள், இலைக் கறிகள் என்பவற்றைத் தரும் தாவரங்களின் பரம்பரை அலகுகளில் வேறு தாவரங்களின் பரம்பரை அலகுகளை பதிப்பதன் மூலம் அக்குறிப்பிட்ட தாவரத்தின் இயல்புகளையும் குணங்களையும் பண்புகளையும் மாற்றியமைத்தலே தாவரங்களில் நடைபெறும் பரம்பரை அலகு மாற்றமாகும்.

இம்முறையைப் பயன்படுத்தி தற்போது கலப்பு உணவு வகைகளைத் (Hybrid Food) தரும் தாவரங்களையும் பயிர்களையும் அறிவியலாளர்கள் விருத்தி செய்து வருகின்றனர். நெல், சோயா, தென்னை [illegible] ஞானம் நிகழ்த்தியுள்ளது. குறிப்பிட்ட தாவரத்தின் பரம்பரை இயல்பை மாற்றுவதன் மூலம் அதிலிருந்து பெறப்படும் உணவின் உள்ளடக்கமும் மாற்றப்படுகின்றது. இதுவே பரம்பரை இயல்பு மாற்றப்பட்ட உணவு (Genetically Modified Food) என வழங்கப்படுகின்றது.

1980 களிலிருந்தே இவ்வகையான உணவு வகைகள் மேற்கத்திய நாடுகளின் சந்தைக்கு அறிமுகமாகின. தற்போது உலகின் பல நாடுகளில் பிரமாண்டமான சந்தைத் தொகுதிகளில் மாத்திரமின்றி, சாதாரண உணவு விற்பனை நிலையங்களிலும் பரம்பரை அலகு மாற்றப்பட்ட உணவு வகைகள் விற்பனைக்கு வந்துள்ளன. கணிசமான மக்கள் அவற்றை நுகர்கின்றனர்.

இவ்வகை உணவு வகைகளை நுகர்வதனால் உடன் ஆரோக்கியத்திற்கு குந்தகம் ஏற்படுமா என்பது குறித்த ஆய்வுகள் பெருமளவு நடைபெற்றுள்ளன. தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. விஞ்ஞானிகளிடையே கருத்து வேறுபாட்டை உருவாக்கியுள்ள பரம்பரை அலகு மாற்ற செயன்முறையை சில சூழல் பாதுகாப்பு இயக்கங்கள் கடுமையாக விமர்சித்து வருகின்றன.

பூகோள ரீதியில் பிரபலமான கிரீன்பீஸ் எனப்படும் சுற்றாடல் பேண்தகு இயக்கம் பரம்பரை அலகு மாற்றப்பட்ட உணவுகளை உற்பத்தி செய்வதையிட்டு எச்சரிக்கை விடுத்துள்ளமை கவனிக்கத் தக்கது.

இஸ்லாமிய நோக்கில் இத்தகைய உணவினை நுகர்வதற்கான ஷரீஆ அனுமதி உள்ளதா என்பதை ஆராய்வதற்கு முன்பாக, பரம்பரை அலகு மாற்றப்படும் உணவு என்றால் என்ன என்பதை சரியாகப் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது.

உதாரணத்திற்கு அரிசியை எடுத்துக் கொள்ளலாம். தெற்காசியாவில் பெரும்பாலான நாடுகளில் வாழும் பெருந்தொகை மக்கள் அரிசியின் மூலம் கிடைக்கும் சோற்றை தமது தேசிய உணவாகக் கொண்டுள்ளனர். இதன் விளைவாகவே, தெற்காசியாவில் அரிசி பெருமளவு உற்பத்தியாகின்றது. அரிசியை அதிகம் உண்பதனால் உடலுக்குத் தேவையான சக்தியை காபோஹைதரேற்று வழங்குகின்றது.

ஆனால், அரிசியினூடாக மாத்திரம் உடலுக்குத் தேவையான எல்லா வகையான ஊட்டங்களையும் நாம் பெற முடியாது. புரதம், இரும்புச் சத்து, விட்டமின்கள் என்பவை அரிசியினூடாகக் கிடைக்காது. இதற்கு விஞ்ஞானிகள் தாவரங்களின் பரம்பரை அலகு மாற்றத்தைத் தீர்வாக முன்வைக்கின்றனர். அதாவது வேறு தாவரங்களிலிருந்து பெறப்பட்ட பரம்பரை அலகுகளை நெற் தாவரத்தில் பதிப்பதன் மூலம் அதிகளவு இரும்புச் சத்தைக் கொண்ட புதிய நெல்லினங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இஃதியாஸ் பக்கிர் மாக்கார்

# வீட்டோ அதிகாரத்திற்கு இரையாகக்கூடாத ஐ.நா.

ஐ.நா. சபையின் புதிய செயலாளர் நாயகம் கடந்த மாதம் லிபியாவுக்கான பிரதிநிதியாக சலாம் பயாட்டினை நியமித்தார். பின்னர் அமெரிக்காவின் எதிர்ப்புக்கு மத்தியில் அந்நியமனத்தை அவருக்கு வாபஸ் பெற வேண்டியேற்பட்டது.

சலாம் பயாட் பலஸ்தீனின் முன்னாள் பிரதமர் ஆவார். அவர் சர்வதேச நாணய நிதியத்தின் உயர் மட்ட அதிகாரியாகவும் உள்ளார். ஒபாமாவின் ஆட்சிக் காலத்தில் பலஸ்தீன் ஆட்சி நிர்வாகத்தில் அமெரிக்காவின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவராகவும் இவர் கருதப்பட்டார். இஸ்ரேலின் அனாவசியமான அழுத்தங்களுக்கு மத்தியிலும் அரசியல் ஸ்திரமற்ற பின்புலத்தில் பலஸ்தீன் அரச கட்டமைப்பினை கட்டியெழுப்புவதிலும் ஊழல்களுக்கு எதிராக போராடுவதிலும் முன்னின்று செயற்பட்டார்.

ஐ.நா. சபையின் தீர்மானங்களை கருத்திற் கொள்ளாத இஸ்ரேல் அரசாங்கத்திற்கும் அமெரிக்காவின் தற்போதைய ஆட்சி பீடத்திற்கும் மத்தியில் ஐ.நா.வின் புதிய செயலாளர் நாயகம் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டிருப்பது புலனாகிறது. இஸ்ரேலின் அதிகாரத்திற்கு கீழால் உள்ள நிலப் பகுதியில் இனவாத ஆட்சி முறையே முன்னெடுக் கப்பட்டு வருகிறது என்பது உலகம் பூராகவும் உள்ள பெரும்பான்மையினர் ஏற்றுக்கொண்ட விடயமாக உள்ளது. இஸ்ரேலிய நெடன் யாஹுவின் அரசாங்கத்திற்கு அமெரிக்க ட்ரம்பின் அரசாங்கம் வழங்கி வருகின்ற ஆதரவுகளை தெளிவாகக் கண்டுகொள்ள முடிகிறது.

அமெரிக்காவில் இதுவரை காலமும் அரசியல் தீர்மானங்களை மேற்கொண்டு வந்தவர்கள் மீது கடுமையான அழுத்தங்களை பிரயோகித்து வருகின்ற சியோனிஸ்ட்கள், அமெரிக்க வெளியுறவுக் கொள்கைகளில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தி வருவதனை காண முடிகிறது. ட்ரம்பின் அமெரிக்காவிற்குள் இச்சியோனிஸவாதிகள் அழுத்தங்களை பிரயோகிப்பது மாத்திரமல்லாமல், தற்பொழுது வெள்ளை மாளிகைக்குள் அரசியல் முடிவுகளை எடுப்பவர்களாக (political dicision makers) மாறி யிருப்பதனையும் காண முடிகிறது.

இந்நிலையில் மத்திய கிழக்கு நெருக்கடிக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதில் ஒரு நடுநிலையான போக்கை அமெரிக்கா கையாளும் எனக் கருத முடியாது. உலக அமைதியை நிலைநாட்டுவதற்கென உருவாக்கப்பட்டுள்ள ஐ.நா. சபைக்கு ட்ரம்பின் அமெரிக்கா ஜனநாயகம், மனித உரிமைகள், சமாதானம், நீதி போன்றவற்றை கவனத்திற் கொள்ளாமல் சவால் விட்டுக்கொண்டிருப்பதானது உலகளவில் பாரிய பிரச்சினையை தோற்றுவித்துள்ளது.

ஐ.நா. சபையின் புதிய செயலாளர் நாயகம் அமெரிக்க அரசின் அழுத்தங்களுக்கு உள்ளாகியிருப்பதனை அவரது ஆரம்பகட்ட செயற்பாடுகளினூடாகக் கண்டுகொள்ள முடிகிறது. இவ்விடயம் அவர் தொடர்பான நம்பிக்கையில் சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது. கட்சி சார்பின்மை, நடுநிலை மாத்திரமல்லாமல் அவரது செயல்களின் நம்கபத்தன்மையிலும் பாரிய பிரச்சினை தோன்றியுள்ளது.

ட்ரம்பின் ஆட்சி பீடத்தினாலும் நெடன் யாஹுவின் ஆட்சிபீடத்தினாலும் விடுக்கப்படுகின்ற அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் தெளிவான நிலைப்பாடொன்றை எடுக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதன் மூலம் ஐ.நா. சபையின் எதிர்காலம் சவாலான கட்டத்தை எட்டியுள்ளது.

இந்நிலையில் ஐ.நா. சபையுடன் இணைந்த நிறுவனமொன்றான (ESCWA) என்னும் மேற்கு ஆசியாவின் பொருளாதாரம் மற்றும் சமூக விவகாரம் தொடர்பான ஆணைக்குழு, இஸ்ரேல் பலஸ்தீனர்கள் மீது இன ஒடுக்குமுறையை கையாள்கிறது என அறிக்கையொன்றில் பகிரங்கப்படுத்தியுள்ளது.

1998 இல் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தனது ரோம பிரகடனத்தில் ''அமைப்பு சார்ந்த விருத்தி மற்றும் ஒரு இனக் குழு இன்னுமொரு இனக் குழுவை அல்லது பல குழுக்களை அடிமைப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படுகின்ற செயல்கள்'' இன ஒடுக்குமுறை குற்றம் என்பதாக (the crime of apathy) குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேல் இன்று பலஸ்தீனர்களை 4 பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளது. ஒன்று இஸ்ரேலுக்குள் பலஸ்தீனர்கள், இரண்டு ஜெரூசலத்தில் பலஸ்தீனர்கள், மூன்று மேற்கு கரை மற்றும் காஸா பலஸ்தீனர்கள், நான்காவதாக அகதிகளாக உள்ள பலஸ்தீனர்கள்.

இவ்வகையில் கூறுபோடப்பட்டுள்ள பலஸ்தீனர்களின் உயிர்கள் மற்றும் அவர்களின் அன்றான வாழ்வொழுங்கு இஸ்ரேலின் நிலையான ஆதிக்கத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. என்றோ ஒரு நாள் இஸ்ரேல் ஆட்சி பீடம் இவ்வின ஒடுக்குமுறைகளுக்கு (apathy missions) பதில் சொல்ல வேண்டியேற்படும்.



Dr. றிஷாட் புஹாரி அவர்கள் அநுராதபுரத்தின் இக்கிரிகொல்லாவயைப் பிறப்பிடமாகவும் கஹட்டோவிட்டவை வசிப்பிடமாகவும் கொண்டவர். அவர் கொழும்பு பல்கலைக் கழகத்தில் யூனானி மருத்துவத்தில் பட்டம் பெற்றுள்ளதோடு, களனி பல்கலைக்கழகத்தில் மனித வள முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டத்தையும் பூர்த்தி செய்திருக்கிறார் (MBA in HR). தேசிய ரீதியாக கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்குகள் பலவற்றை நடாத்திய அனுபவம் கொண்டவர்.

தொகுப்பு- மிப்றாஹ் முஸ்தபா

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை

# மாணவர்களின் துறையை இனங்காண்பதற்கான அளவுகோல்



க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகிவிட்டன. இந்த நிலையிலே மாணவர்கள் தங்களது வாழ்வைத் தீர்மானிக்கும் துறையை எவ்வாறு தெரிவுசெய்து கொள்வது என்ற குழப்பமும் தடுமாற்றமும் அவர்களுக்கு மத்தியில் காணப்படுகின்றது. எமது அடுத்த கட்டம் என்ன என்ற கேள்விக்குறியும் பெரும்பாலான மாணவர்களிடம் காணப்படுகின்றது.

திறமையான மாணவர்கள் பலரும் தமது துறையை சரியாகத் தீர்மானிக்காமல் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கோட்டை விட்டு நிற்பதை நாம் காண்கிறோம். அதேபோன்று க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் குறைவான சித்தியைப் பெற்ற மாணவர்களும் இந்தக் கட்டத்தில் சரியான முறையில் வழிகாட்டப்படாமல் வேறு திசைகளை நோக்கிச் செல்லும் நிலையும் காணப்படுகின்றது.

எனவே, மாணவப் பருவத்தின் தீர்க்கமான காலமாகக் கருதப்படுகின்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சையை முடித்து அடுத்த கட்டமான க.பொ.த உயர்தரத்தை நோக்கி செல்ல இருக்கும் மாணவர்களுக்கான தெளிவையும் வழிகாட்டல்களையும் வழங்க வேண்டிய அவசியம் இருக்கின்றது.

பொதுவாகவே க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் உயர்தரத்தில் தாம் எந்தத் துறையை தெரிவு செய்து கற்பதென்பது அவர்கள் எதிர்கொள்கின்ற பிரதானமான சவாலாக அடையாளப்படுத்த முடியும். மாணவர்களின் விருப்பு, பெற்றோர்கள் மற்றும் நண்பர்களின் விருப்பு, தமது குடும்பத்தின் பொருளாதார நிலைமைகள், மாணவர்களின் ஆற்றல் ஆகியவற்றை முக்கியமாக கவனத்திற் கொண்டுதான் சரியான ஒரு துறையைத் தெரிவு செய்ய வேண்டும்.

ஒரு மாணவருக்கு குறித்தொரு துறையில் கற்பதற்கு ஆர்வம் இருந்தாலும் பெற்றோரின் பொருளாதார நிலைமைகள் சிலவேளைகளில் பொருத்தமான துறையைத் தெரிவு செய்வதில் சவாலாக அமைய முடியும். அதே போன்று மாணவர்களின் விருப்பத்தோடு பெற்றோர்கள் மற்றும் நண்பர்களின் விருப்பமும் மாணவர்கள் தமது துறையைத் தீர்மானிப்பதில் தாக்கம் செலுத்துகின்றது.

நல்ல பெறுபேறுகளைப் பெற்ற ஒரு மாணவன்/மாணவி கலைத்துறையை தெரிவுசெய்து சட்டத்தரணியாக விரும்பும்போது அவரது பெற்றோர் விஞ்ஞானம் அல்லது கணிதத் துறையைத் தெரிவுசெய்து வைத்தியராக அல்லது பொறியியலாளராக வர வேண்டும் என்று விரும்புகின்றனர். இவ்வாறான சந்தர்ப்பங்களிலும் மாணவர்களுக்கு மத்தியில் குழப்ப நிலை காணப்படுகின்றது. இன்னும் சில நல்ல பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள் குறைவான பெறுபேறுகளைப் பெற்ற நண்பர்களோடு கற்பதற்காக தமது நண்பர்கள் தெரிவு செய்யும் துறையை தெரிவு செய்கின்றனர்.

மாணவர்கள் தமக்குப் பொருத்தமான துறையைத் தெரிவு செய்யும் விடயத்தில் மேற்சொன்ன விடயங்கள் கவனத்திற் கொள்ளப்படுவதோடு மாணவர்களின் ஆற்றல்கள் மற்றும் இயலுமைகளும் கவனத்திற் கொள்ளப்படுவது அவசியமாகும். உண்மையிலேயே க.பொ.த சாதாரண தரத்திற்கும் உயர் தரத்திற்கும் இடையில் நிறைய வித்தியாசங்கள் காணப்படுகின்றன.

க.பொ.த சாதாரண தரப் பெறுபேறானது மாணவர்களின் எதிர்கால வாழ்க்கையைத் தீர்மானிக்கும் ஒன்றல்ல. மாறாக அது மாணவர்களின் துறையை இனங்காண்பதற்கான ஓர் அளவுகோலாக (Indicator) மாத்திரமே காணப்படுகின்றது. உதாரணமாக க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் கணிதப் பாடத்தில் போதிய பெறுபேற்றைப் பெறாத மாணவர்கள் கணிதம், E-Tec போன்ற துறைகளைத் தெரிவு செய்ய முடியுமா? அல்லது அரசியல், வரலாறு போன்ற பாடங்களில் விருப்பமில்லாத மாணவர்கள் சட்டத் துறையைத் தெரிவுசெய்ய முடியுமா? போன்ற கேள்விகளுக்கான பதில்களை இந்தப் பெறுபேறுகள் வெளிப்படுத்துகின்றன.

எனவே, க.பொ.த சாதாரண தரப் பெறுபேறுகளானது மாணவர்களின் ஆற்றல்களை ஓரளவு வெளிப்படுத்தும் ஒரு மட்டம் என்று சொல்ல முடியும். இந்த விடயங்கள் அனைத்தையும் கருத்திற் கொண்டே தமக்குப் பொருத்தமான துறையைத் தெரிவு செய்யும் விடயத்தில் மாணவர்கள் இறுதியான ஒரு முடிவுக்கு வர வேண்டும்.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக் குப் பின்னர் உயர்தரக் கல்வியைத் தொடர்வதற்காக மாணவர்களுக்கு இந்த நாட்டிலே விஞ்ஞானம், கணிதம், வணிகம், கலை, ஷரீஆ போன்ற துறைகளில் எதனைத் தெரிவுசெய்வது என்பது தொடர்பில் பல வகையான தெரிவுகள் காணப்படுகின்றன. க.பொ.த சாதாரண தரத்துக்குப் பின்னர் ஷரீஆ கல்வியை வழங்கும் பல முன்னணி நிறுவனங்கள் நாட்டிலே காணப்படுகின்றன. இந்த நிறுவனங்களில் இணை ந்து இரண்டு வகையான துறைகளில் தேர்ச்சி யைப் பெற்றுக் கொள்வது தொடர்பிலும் மாணவர்கள் சிந்திக்க முடியும்.

இன்று மாணவர்கள் பெரிய பெரிய கனவுகளோடும் எதிர்பார்ப்புக்களோடும் தான் தமது துறையைத் தெரிவுசெய்கின்றனர். விஞ்ஞானத் துறையைத் தெரிவு செய்கின்ற ஒருவர் வைத்தியராகவும், கணிதத் துறையைத் தெரிவு செய்கின்ற ஒருவர் பொறியியலாளராகவும், வணிகத் துறையைத் தெரிவு செய்யும் ஒருவர் கணக்காளர் அல்லது முகாமையாளராகவும், கலைத் துறையைத் தெரிவு செய்யும் ஒருவர் சட்டத்தரணி அல்லது ஆசிரியராகவும் வர வேண்டும் என்ற நோக்கோடு தான் தமக்குப் பொருத்தமான துறைகளைத் தெரிவு செய்கின்றனர்.

உண்மையில் தமது இலக்குகள் தொடர்பாக கனவு காண்பது, அந்த இலக்கை நோக்கிப் பயணிப்பது முக்கியமானதுதான். ஆனால் அந்த இலக்கை நோக்கிப் பயணிக்கும்போது நாம் எதிர்பார்க்கும் விளைவுகள் கிடைக்குமா என்பது எம்மைப் படைத்த இறைவனின் கைகளிலுள்ள விடயமாகும். நாம் நினைப்பதை விட இறைவன் எமக்கு பல விடயங்களில் நலவை நாடுவான் என்ற நம்பிக்கை ஒவ்வொருவரிடத்திலும் இருக்க வேண்டும்.

ஆகவே, இந்த இலக்குகளை அடைய முடியாமல் போனால் எவ்வாறான தீர்மானங்களுக்கு வருவது என்பதிலும் மாணவர்கள் தெளிவுடன் இருக்க வேண் டும். உதாரணமாக அரச பல்கலைக் கழகங்களில் வைத்தியராக வர முடியா விட்டால் மருத்துவத் துறையோடு சம்பந்தப்பட்ட பல துறைகள் காணப்படுகின்றன. இவ்வாறு ஒவ்வொரு துறைக்கும் பல வகையான மாற்றுத் தெரிவுகள் பல்கலைக்கழகங்களிலும் ஏனைய அரச, தனியார் நிறுவனங்களிலும் தாராளமாக இருக்கின்றன.

எனவே, தமது இலக்கை அடைய முடியா விட்டால் அந்த இலக்கோடு தொடர்புபட்ட அடுத்த கட்டத்தை நோக்கி எவ்வாறு நகர்வது என்ற தெளிவும் சரியான திட்டமிடலும் மாணவர்களிடத்தில் கட்டாயம் இருக்க வேண்டும்.

இதற்கு மேலதிகமாக பல்கலைக்கழகங்களுக்கு வெளியிலும் பல்வேறு உயர்கல்வி நிறுவனங்கள் இருக்கின்றன. தொழில்நுட்பக் கல்லூரிகள், தேசிய கல்வியற் கல்லூரிகள், தொழில் பயிற்சி நிலையங்கள், HND தகைமையை வழங்கும் SLIAT நிறுவனங்கள், பல்கலைக்கழகக் கல்லூரிகள் என 900க்கும் மேற்பட்ட அரச மற்றும் அரச- தனியார் கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் உயர்கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்புக்கள் இந்த நாட்டில் நிறையவே காணப்படுகின்றன. இவற்றில் 80 வீதத்திற்கும் மேலான நிறுவனங்கள் இலவசமாக அல்லது குறைந்த கட்டணத்தில் கல்வியை வழங்குகின்றன. அந்தவகையில் அரச அங்கீகாரம் பெற்ற இத்தகைய நிறுவனங்களில் இணைந்தும் மாணவர்கள் தமது இலக்குகளை அடைந்து கொள்வதற்கான வாயில்கள் எமது நாட்டில் திறந்து கிடக்கின்றன.

மாணவர்கள் க.பொ.த உயர்தரத்தில் தமது துறையைத் தெரிவு செய்ததன் பிறகு Z புள்ளியை அதிகரிக்கக் கூடிய எவ்வகையான பாடங்களைத் தெரிவு செய்வது என்ற இன்னுமொரு பிரச்சினைக்கு முகம்கொடுக்கின்றனர். இந்த விடயத்தில் தமது விருப்பு, தமது பெற்றோரின் விருப்பு என்பவற்றுக்கு அப்பால் மாணவர்கள் தாம் கல்வி கற்கும் பாடசாலையின் வசதி வாய்ப்புக்களை கவனத்திற் கொண்டே பாடத் தெரிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

குறிப்பாக கலைத் துறையில் கற்கின்ற ஒரு மாணவர் Z புள்ளி அதிகம் என்பதற்காக தனது பாடசாலையில் வரலாறு பாட ஆசிரியர் இல்லாத நிலையில், வரலாறு பாடத்தைத் தெரிவு செய்வாராக இருந்தால் குறித்த பாடத்தைக் கற்பதில் பல்வேறு சவால்களை அவர் சந்திக்க வேண்டி ஏற்படும். அதிகமான மாணவர்கள் பல்கலைக் கழகத் தெரிவை நோக்காகக் கொண்டு கஷ்டமான பாடங்களைத் தெரிவுசெய்து குறித்த பாடங்கள் பற்றிய வழிகாட்டல்கள் எதுவுமின்றி பரீட்சையில் கோட்டை விடுகின்ற நிலைமைகள் காணப்படுகின்றன. எனவே தனக்கு விருப்பமானதும், தனது பாடசாலை அல்லது பிரதேசத்தில் கற்க முடியுமானதுமான பாடங்களைத் தெரிவு செய்வதே புத்திசாலித்தனமாகும்.

இந்த இடத்தில் Z புள்ளி தொடர்பாகவும் மாணவர்களுக்கு சில விடயங்களை தெளிவுபடுத்த வேண்டியிருக்கிறது. க.பொ.த உயர்தரத்தைப் பொறுத்தவரை Z புள்ளி என்பது பல்கலைக்கழகங்களுக்கு நுழைவதை மாத்திரமல்ல, பல்கலைக்கழகக் கல்லூரிகள், உயர் கல்வி நிறுவனங்கள் என்பவற்றைத் தெரிவு செய்வதிலும் செல்வாக்குச் செலுத்துகிறது.

குறித்த ஒரு பாடத்தில் சித்தியடைந்த மொத்த மாணவர்கள் பெற்ற சராசரிப் புள்ளிகளை வைத்தே குறித்த பாடத்துக்கான Z புள்ளி தீர்மானிக்கப்படுகின்றது. ஒரு பாடத்தை அதிகமான மாணவர்கள் தெரிவுசெய்து கூடுதலான புள்ளிகளை அப்பாடத்தில் பெறுவார்களாக இருந்தால் குறித்த பாடத்துக்கான சராசரியும் அதிகமாகக் காணப்படும்.

இந்த நேரத்தில் குறித்த பாடத்தில் மாணவர்கள் சிறந்த பெறுபேற்றைப் பெற்றாலும் அந்தப் பாடத்துக்கான Z புள்ளி குறைவாகவே இருக்கும். உதாரணமாக ICT, பொருளியல் போன்ற பாடங்களை கலை, வணிகம், தொழில்நுட்பம் ஆகிய துறைகளைச் சேர்ந்த மாணவர்கள் தெரிவு செய்வதால், இந்தப் பாடங்களுக்கான Z புள்ளி குறைவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

என்றாலும் அடுத்த வருடம் குறித்த பாடத்துக்கான Z புள்ளி குறைவாக அல்லது கூடுதலாக இருக்கும் என்று யாராலும் உறுதியாகக் கூற முடியாது. அது குறித்த பாடத்தில் மாணவர்கள் பெற்ற புள்ளிகளை வைத்தே தீர்மானிக்கப்படும்.

அந்தவகையில், விஞ்ஞான, கணிதத் துறைகளைத் தெரிவு செய்யும் மாண வர்கள் பொதுவாக பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களையே தெரிவு செய்வர். தொழில்நுட்பம், வணிகத் துறைகளைத் தெரிவு செய்யும் மாணவர்கள் இரண்டு பாடங்களை கட்டாயம் தெரிவு செய்வதோடு மூன்றாவது பாடமாக 11 பாடங்களில் எதனைத் தெரிவு செய்வது என்ற குழப்பம் காணப்படுகின்றது.

மிக முக்கியமாக கலைத் துறையைத் தொடர்கின்ற மாணவர்கள் பாடங்களைத்

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"செய்தியை பொறுத்தவரை அதனை சிலருக்கு அச்சிடுவதில் எவ்விதத் தேவையும் இல்லை. மாறாக எல்லோரினதும் அவா அதனை விளம்பரப்படுத்துவதாகும்" என Hearst American பத்திரிகை வெளியீட்டாளர் 'வில்லியம் ரண்டொல்ப்' குறிப்பிடுகிறார்.

எனவே செய்தி மறைந்திருக்கும். மற்றையவை விளம்பரங்கள். உதாரணமாக ஒரு அரசியல்வாதி தொலைபேசியில் தொடர்பு கொண்டு குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்டதொரு விடயம் நடைபெறுகிறது எனக் கூறினால் அதனால் அவர் அரசியல் இலாபம் அடையப் போகிறார் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். அந்தச் செய்தியை அவர் ஏன் தருகிறார் என்பதை தேடிப் பார்க்க வேண்டும்.

ஊடகவியலாளர்கள் புதைந்திருக்கும் செய்தியை தோண்டியெடுக்க வேண்டும். மக்களிடம் காணப்பட வேண்டும். அப்போதே மக்கள் அவற்றில் செய்திகளை விரும்பிப் படிப்பார்கள். உதாரணமாக காடியன் பத்திரிகை இணையதளத்தைக் குறிப்பிடலாம். இலங்கையிலும் அப்படித்தான் மக்களால் விரும்பப்படுகின்ற நம்பகத்தனமான இணையதளங்களிலேயே செய்தியை படிப்பார்கள்.

மக்களுக்கு தகவல்களை வழங்குவது நல்ல விடயம். அதற்கு நாம் இளைஞர்களை ஊக்குவிக்க வேண்டும். ஆனாலும் ஏனைய தொழில் வாய்ப்புக்களுடன் ஒப்பிடும் போது ஊடகத்துறையில் பணியாற்றுபவர்களுக்கு கூடுதல் சம்பளம் வழங்கப்படுவதில்லை. எனவே கூடுதலாக சம்பளம் கிடைக்கின்ற துறைகளையே அவர்கள் தெரிவுசெய்கிறார்கள். இவ்விடயம் எதிர்கால ஊடக வளர்ச்சிப் போக்குக்குப் பாரிய சவாலாக உள்ளது.

அமீன் இஸ்ஸதீன் கொழும்பை பிறப்பிடமாக கொண்டவர். இவர் தனது ஆரம்ப கல்வியை சென் ஜோன்ஸ் கல்லூரியிலும் இரண்டாம் நிலை மற்றும் உயர்நிலைக் கல்வியை ரோயல் கல்லூரியிலும் கற்றுள்ளார். பேராதனை பல்கலைக்கழகத்தில் சிறப்பு கலைமானிப் பட்டத்தையும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சர்வதேச உறவுகள் என்னும் தலைப்பில் முதுமானிப் பட்டத்தையும் பூர்த்தி செய்துள்ளார்.

கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஊடகவியலாளராக கடமையாற்றி வரும் இவர், ஆரம்பத்தில் The Sun பத்திரிகையில் பணியாற்றி, தற்போது Sunday Times பத்திரிகையில் துணை ஆசிரியராக பணியாற்றி வருகிறார். Al jazeera, Haleej Times ஊடகங்களில் கட்டுரைகளை எழுதி வரும் அமீன் இஸ்ஸதீன், Sunday times, Daily mirror பத்திரிகைகளில் கட்டுரைகளையும் பத்திகளையும் எழுதி வருகிறார்.

- நேர்கண்டவர்: ஹெட்டி றம்ஸி

# ஊடகங்கள் பிரிந்து செயற்படுகின்ற போது ஐக்கியத்தை கட்டியெழுப்ப முடியாமல் போகிறது

**அமீன் இஸ்ஸதீன்**
**துணை ஆசிரியர், சண்டே டைம்ஸ்**

- **சமகால ஊடகங்களின் செயற்பாடுகள் பற்றிய உங்களது அவதானங்கள் என்ன?**

இன்றைய ஊடகங்களின் செயற்பாடுகளை பார்க்கும் போது நான் வெட்கித் தலைகுனிகிறேன். ஊடகவியலாளர்களாக நாம் ஒரு காலத்தில் பெருமைப்பட்டோம். பத்திரிகையில் எனது முதலாவது ஆக்கம் வந்த பொழுது என் தந்தை என்னிடம் ஊடகவியலாளன் என்றால் நீதி நியாயத்திற்காக போராட வேண்டும் என அறிவுரை பகர்ந்தார். இன்று அரசியல் எந்தளவுக்கு சாக்கடையில் விழுந்திருக்கிறதோ அது போன்று தான் ஊடகங்களும் உள்ளன.

ஒரு விடயத்தை பாகுபாடில்லாமல் நடுநிலையாகவும் நேர்மையாகவும் அணுகுமாறே ஊடகவியல் எமக்குக் கற்றுத் தந்தது. இன்று அது தலைகீழாக மாறியுள்ளது. பணத்திற்காகவும் அரசியலுக்காகவும் ஊடகங்கள் இன்று துஷ்பிரயோகப் படுத்தப்படுகின்ற கருவியாக மாறியுள்ளது.

- **இவ்வாறான நிலையில் சண்டே டைம்ஸ் பத்திரிகை அதனது செயற்பாடுகளை எவ்வகையில் முன்னெடுத்து வருகிறது?**

எமது பத்திரிகை சுயாதீனமானதொரு குடும்பப் பத்திரிகை. அரசியல் சார்பின்றி சமுதாயப் பொறுப்புகளை (Social Responsibility) அடிப்படையாகக் கொண்டு செயற்படுகிறது. ஒரு ஊடகத்திடம் மக்கள் எவற்றை எதிர்பார்க்கின்றார்களோ அவற்றை வழங்குவதற்கும் ஒரு கருத்தியலை (Idealism) உருவாக்குவதற்கும் நாம் முயற்சிக்கிறோம். எமக்கென நாம் ஒரு தரத்தை (Standard) உருவாக்கி வருகிறோம். அத்தோடு தொழில்சார் நிபுணத்துவத்துடன் (Professionalism) நாம் சகல விடயங்களையும் அணுகுகிறோம். தவறிழைப்போரை தட்டிக் கேட்கும் முறையொன்று எமது பத்திரிகையில் உள்ளது.

நாம் ஏதாவது கட்சிக்கு ஆதரவு தெரிவிப்பதாக இருந்தால் அதனை மக்களுக்குக் கூற வேண்டும். உண்மையைக் கூறியே நாம் எழுத வேண்டும். தகவல் அறியும் சட்டத்தை உயிர்ப்பிப்பதில் எமது பத்திரிகை அயராது உழைத்துள்ளது.

சந்திரிகா, ராஜபக்ஷ காலம் முதல் தகவல் அறியும் சட்டத்தை அமுல்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி பல ஆசிரியர் கருத்துக்களையும் கட்டுரைகளையும் தீட்டியுள்ளோம். இதழியல் என்றால் இவ்வாறுதான் இருக்க வேண்டும் என்கின்றதொரு முன்மாதிரியை எமது பத்திரிகை வழங்கி வருகிறது.

- **இலங்கையில் புலனாய்வு இதழியலை (Investigative Journalism) கட்டியெழுப்பியதில் சண்டே டைம்ஸ் பத்திரிகைக்கு மிக முக்கிய பங்குள்ளது. அந்த வகையில் புலனாய்வுச் செய்திகளை எவ்வாறு பெறலாம் என்பது பற்றி சற்று குறிப்பிட முடியுமா?**

அப்போதே அது செய்தியாகிறது. ஆனால் அது அவருக்கு வழங்கப்பட்ட செய்தியாக இருந்தால் அவர் சற்று சிந்திக்க வேண்டும். அதில் ஏதும் சூழ்ச்சிகள் உள்ளதா அல்லது வழங்கியவர் ஏதும் இலாபம் பெற முயற்சிக்கிறாரா என்று.

செய்தியாளர் மாநாடும் ஒரு விளம்பரம்தான். அதனை நடாத்துபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கான ஒரு விளம்பரமாகவே அதனை செய்கிறார்கள். புலனாய்வுச் செய்தி என்றால் புதைந்திருக்கும் செய்தியை நாம் கண்டுபிடித்து அதனை மக்களுக்கு காண்பிக்க வேண்டும்.

1970 இல் அமெரிக்காவில் நடந்த வோட்டகேட் சம்பவத்தை இதற்கு உதாரணமாக குறிப்பிடலாம். வொசிங்டன் போஸ்ட் பத்திரிகையில் பணியாற்றிய பப்பூட்வர், கால்பைன்ஸ்டைன் ஆகிய ஊடகவியலாளர்கள் ஜனநாயக கட்சி அலுவலகத்தில் ஒரு இரகசிய மைக்கை வைத்து சில தகவல்களை பெற்றார்கள். இந்த சிறிய விடயத்தினால் அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸனுக்கு பதவியை இராஜினாமா செய்ய வேண்டியேற்பட்டது.

- **நீங்கள் ஒரு மூத்த ஊடகவியலாளர் என்ற வகையில் இன்று இதழியலை கற்று வரும் இளைஞர்களுக்கு கூறும் விடயங்கள் என்ன?**

இன்றைய நிலைமைகளை பார்க்கும்போது இதழியல் நீடிக்குமோ என்கின்றதொரு சந்தேகம் நிலவுகிறது. தற்பொழுது சமூக வலைத் தளங்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. இன்று சகல இடங்களாலும் செய்தி வருகிறது. இந்நிலையில் அச்சு ஊடகங்களின் நிலை கேள்விக்குறியாக உள்ளது. ஐரோப்பாவில் பல பத்திரிகை நிறுவனங்கள் மூடப்பட்டு வருகின்றன. The Christian Science Monitor, Chicago Tribune போன்ற பத்திரிகைகள் மூடப்பட்டு இலத்திரனியல் செய்தி வடிவிலேயே அவை இயங்கி வருகின்றன. இன்னும் 20 வருடங்களில் இலங்கையிலும் அச்சு ஊடகம் புலக்கத்தில் இருக்குமா என்றதோர் கேள்வி உள்ளது.

அத்தோடு அதற்காக வேண்டி மரங்கள் வெட்ட வேண்டியேற்படும். அதனால் சூழல் பிரச்சினைகள் மேலெழும். இன்று எல்லோரிடத்திலும் ஸ்மார்ட் கையடக்க தொலைபேசிகள், ஐ பேட், கணணிகள் உள்ளன. இன்னும் சில காலங்களில் இவற்றிலும் பல புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்படலாம். எனவே விரல் நுனியில் பல பத்திரிகைகளை படித்து விடலாம். புதிய தலைமுறையினர் சமூக வலைத்தளங்களிலேயே செய்திகளை படிக்கிறார்கள்.

ஆனால் பலநூறு இணையத் தளங்கள் உருவானாலும் அவற்றின் [illegible]

ஆனாலும் ஏனைய துறையில் ஒரே விடயமே திரும்ப திரும்ப அலசப்படும். ஆனால் ஊடகத்துறையில் ஒவ்வொரு நாளும் புதிய புதிய செய்திகளும் தகவல்களும் வந்த வண்ணமே இருக்கும். எனவே ஊடகவியலாளனின் அறிவு விசாலமடையும். எனவே இத்துறையில் கால்பதிப்பவர்கள் அத்துறையில் பற்றுக்கொள்ள வேண்டும். எழுத்தை நேசிக்க வேண்டும். மக்களுக்காக சேவை செய்யும் நோக்கமும் அவர்களிடம் இருக்க வேண்டும்.

- **முஸ்லிம் மீடியாக்கள் முஸ்லிம் சமூகத்தின் சமூக, அரசியல், பொருளாதார விடயங்களில் குறிப்பிடத்தக்க அளவிலான மாற்றங்களையே ஏற்படுத்தியுள்ளன. இக்கருத்தில் நீங்கள் உடன்படுகிறீர்களா?**

ஆம், இலங்கையில் தேசிய ஊடகங்களும் சிறுபான்மை ஊடகங்களும் உள்ளன. தேசிய ஊடகங்கள் மும்மொழிகளில் அமையலாம். முஸ்லிம் மீடியாக்கள் இன்னும் நிறுவனமயப்படவில்லை. ரொபட் பிளேக் இலங்கையில் இருந்தபோது அமெரிக்க மனித உரிமைச் செயற்பாட்டாளர் ஒருவர் இங்கு வந்தார். அவர்கள் ஊடகவியலாளர் மாநாடொன்றை நடாத்தியிருந்தார்கள். இலங்கைக்கு எதிராக ஜெனீவாவில் தீர்மானம் நிறைவேற்றப் போவதாகக் கூறினார்கள்.

அன்றைய தினம் இலங்கையில் பஸ் வண்டியாளர்கள் சங்கம் வேலை நிறுத்தத்தில் குதித்திருந்தது. மறுதினம் சகல தேசிய பத்திரிகைகளிலும் பஸ் வண்டியாளர்களின் வேலை நிறுத்தத்தைப் பற்றியே செய்தியே பிரசுரிக்கப்பட்டிருந்தது. ஆனால் தமிழ் பத்திரிகைகள் ரொபட் பிளேக்கும் அமெரிக்க மனித உரிமை செயற்பாட்டாளரும் வெளியிட்ட கருத்துக்களையே தலையங்கம் தீட்டியிருந்தன.

எனவே நாம் இன்னும் ஐக்கியப்பட்ட இலங்கையை உருவாக்கவில்லை என்பது இதன் மூலம் தெளிவாகிறது. மக்களும் பிரிந்துள்ளார்கள், ஊடகங்களும் பிரிந்துள்ளன, அவரவருக்கு தேவையான வகையிலேயே மீடியாக்களும் இயக்கப்படுகின்றன. தமிழர்களுக்கு எது தேவையோ அதையே பிரசுரிக்கிறார்கள். முஸ்லிம்களுக்கு எது தேவையோ அதையே அவர்கள் பிரசுரிக்கிறார்கள். ஒரு சில சிங்கள ஊடகங்களும் அவ்வாறுதான். இந்நிலை மாற வேண்டும். மக்கள் எல்லோரையும் பாதிக்கக்கூடிய விடயங்களையே நாம் பிரசுரிக்க வேண்டும். உதாரணமாக பொருளாதார நெருக்கடியைக் குறிப்பிடலாம்.

எல்லா ஊடகங்களும் பிரிந்து செயற்படும் போது மக்கள் மத்தியில் ஐக்கியத்தை கட்டியெழுப்ப முடியாமல் போகிறது. சில நாட்களுக்கு முன்னர் முஸ்லிம்கள் சிலர் முஸ்லிம்களுக்காக வேண்டி ஒரு ஆங்கிலப் பத்திரிகையை ஆரம்பிக்கலாம் என்கின்ற முடிவுக்கு வந்தார்கள். அப்போது நான் ஏனைய பத்திரிகைகள் எவ்வாறு போகுதோ அதே போன்று நாமும் (பக்.14)

## எழுவாய், பயமிலை



அபூ ஷாமில்

## சிறுபிள்ளைத் தனம்

இலங்கையில் முஸ்லிம் பாடசாலைகள் மட்டும் வெள்ளிக்கிழமைகளில் 11.30 மணியுடன் நிறைவடைகின்றன. இதன் பின்னர் வீட்டுக்கு வந்து சேர்ந்து குளித்து ஜும்ஆவுக்குத் தயாராகி முடியுமுன்னர் பள்ளிவாசலில் அதான் ஒலித்து முடிகிறது. நேரகாலத்துடன் ஜும்ஆவுக்குச் செல்ல வேண்டும் என்று எவ்வளவு காதில் ஓதினாலும் இதனை நடைமுறைப்படுத்துவதில் சிறுவர்களுக்கு பல சிரமங்கள் இருக்கத்தான் செய்கின்றன. இத்தனையையும் தாண்டி அதானுக்கு முன்னரே முதல் ஸப்பில் வந்து ஆஜராகிவிடுகின்ற பாராட்டத்தக்க பள்ளிச் சிறுவர்களும் நம்மிடையே இருக்கிறார்கள்.

அப்படியான ஒரு சிறுவனை அண்மையில் தரிசிக்கக் கிடைத்தது. கதீப் மிம்பருக்கு ஏறுவதற்கு முன்னரே வந்து முதல் ஸப்பிலேயே அவன் அமர்ந்திருந்தான். குத்பாவில் அவனுக்கு என்ன கிடைக்கப் போகிறதோ, ஒரு மாட்டை அறுத்துப் பலியிட்ட நன்மையாவது கிடைக்கட்டுமே என்றுதான் நேரகாலத்துடன் வந்திருப்பான். தலையைத் தொங்கப் போடாமல் குத்பாவை ஆவலுடன் செவிமடுத்தான். கத்கரமதிஸ் ஸலாத் சொன்னதும் முதல் ஸப்பில் இருந்து ஜும்ஆத் தொழக் கிடைத்த பூரிப்புடன் உற்சாகமாக எழுந்து நின்றான்.

அதே ஸப்பில் நின்றிருந்த ட்ரஸ்டி அவனை உறுக்கி பின்னால் சென்று தொழுமாறு ஆணையிட்டார். அவனது நிலைமையைப் பார்க்கப் பாவமாக இருந்தது. பள்ளிவாசல்களுடன் நெருக்கமான உறவைப் பேணி, இபாதத்துக்களில் ஆர்வமூட்டப்பட வேண்டிய நிலையிலுள்ள இன்றைய சிறார்களை பள்ளிவாசல்கள் கையாளும் முறை இதுதான் என்றால் நிச்சயமாக அடுத்த வாரம் அவன் நேரகாலத்துடன் ஜும்ஆவுக்கு வருவதற்கு ஆசை வைக்க மாட்டான். ஹௌழடியிலோ பாதையோரத்திலோ நேரத்தைக் கழித்து விட்டு கடைசியில் தக்பீர் கட்டியதும் ஓடிவந்து தொழுகைக்குச் சேர்ந்து கொள்கின்ற இளைஞர்களுடன் அவனும் சேர்ந்து விடுவான்.

சிறுவர்களை எப்படிக் கையாள்வது என்பதில் எந்த அறிவுமில்லாத ஞானசூனியங்களின் இந்த அதிகார வெறியினால் தான் இன்று இளைஞர்கள் பள்ளிவாசலை விட்டு தூரவிலகிப் போயிருக்கிறார்கள். பின்னர் இளைஞர்கள் பள்ளிவாசலுக்கு வருவதில்லையே என்று வலைவீசித் தேடுகிறார்கள். இவர்கள் சிறுவர்களாக இருக்கும் பொழுதே தமக்கு இழைக்கப்பட்ட அநியாயங்களுக்கு முன்னால் எதுவும் செய்யத் துணியாமல் அடங்கிப் போன இந்த இளைஞர்கள் தான் பள்ளிவாசலுக்கு வெளியே ஜனநாயக ஆட்சியை கொண்டு வருவதற்காக கடுமையாக உழைக்கிறார்கள். பள்ளிவாசல் என்பது அராஜகத்துக்கு உரிய இடம். இங்கு ஜனநாயகப் பண்பாடுகளுக்கெல்லாம் இடமில்லை என்ற மனப்பதிவு சிறுவயதில் இருந்தே இந்த இளைஞர்களின் மனதில் பதிவேற்றப்பட்டிருக்கிறது.

இங்கு வந்து ஜனநாயகம் பேசினால், சமூகத்தில் குழப்பத்தை உண்டாக்குபவன் என்று பத்வாக்கள் வழங்கி அவனை அடக்கி வைக்கும் முயற்சி நடக்கிறது. எதைச் செய்தாலும் இதுதான் அல்லாஹ்வுடைய கட்டளை, ரஸுல் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வழிமுறை என்று லேபல் குத்தப்படுவதனால் இதுதான் குர்ஆன் ஹதீஸுடைய சட்டம் என்று மக்களை நம்ப வைக்க வைக்க முயற்சி எடுக்கப்படுகிறது. அதிகம் பேசினால் பள்ளிவாசலை விட்டு விலக்கி விடுவார்கள். இஸ்லாமல்லாத ஜனநாயக முறை கூட இவ்வாறான அநியாயத்தை மக்களுக்குச் செய்வதில்லை. பள்ளிவாசலின் இஸ்லாத்துக்குள்ளால் தான் இந்த அநியாயங்களைக் காண முடிகிறது.

பள்ளிவாசல்கள் வழங்கிய இந்தப் பயிற்சிதான் நமது சமூகத்தின் சாபக்கேடாக மாறியிருக்கிறது. தன்மீது எந்த அநியாயம் இழைக்கப்பட்டாலும் பொருட்படுத்தாமல் வாழ்வதற்கு இந்தச் சமூகம் பழகியிருக்கிறது. காணிகள் பறிக்கப்பட்டாலும், குடியிருப்புக்களை பிடுங்கி காடுகளாக பிரகடனப்படுத்தினாலும் எதுவுமே பேசாமல் அடக்கமாய் இருப்பதற்கு சமூகத்துக்கு தெரிந்திருக்கிறது. குர்ஆனையும் ஹதீஸையும் சொல்லி எந்த அரசியல்வாதியும் தன்னை விற்றுப் பிழைத்தாலும் அடிமையாய் வாழ்ந்து மடிவதற்கு இந்தச் சமூகம் பயிற்சியெடுத்திருக்கிறது. சாரத்தை உருவி எடுத்தாலும் தன்மானத்தை கைக்குள் பொத்தி அம்மணமாய் வாழ்வதற்கான பயிற்சி சமூகத்துக்கு தாராளமாக கிடைத்திருக்கிறது.

இத்தனையையும் தாண்டித்தான் இந்த சமூகத்தை உயிர்ப்பிக்க வேண்டும். ரூஹ் ஊதப்பட்ட சமூகமாக இதனை இந்த மண்ணில் வாழ வைக்க வேண்டும். இதற்கான பாசறைகளாக பள்ளிவாசல்கள் மாறாவிட்டால் மக்கள் ஜனநாயகத்தை கையிலெடுப்பதைத் தவிர மானமாய் வாழ்வதற்கு வேறு வழிமுறைகள் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரியா அகதிகளுக்கு உதவுவோர் மாநாடு

சிரியா அகதிகளுக்கு உதவுவதற்கென இடம்பெற்ற மாநாட்டிலே மேலும் பல பில்லியன் டாலர்கள் நிதியளிப்பதற்கு நிதி வழங்குனர்கள் இணங்கியுள்ளனர். இது கடந்த செவ்வாய், புதன் கிழமைகளில் (04-05) பிரஸல்ஸ் நகரில் இடம்பெற்ற மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமாகும்.

சிரியாவிலே தொடர்ந்தேர்ச்சியாக இடம்பெற்று வரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர ஐரோப்பிய ஒன்றியம் கட்டாயம் பங்களிக்கும் என அதன் பிரதிநிதிகள் இங்கு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இம்மாநாட்டில் பங்கேற்ற ஐ.நா. நிபுணர்கள் சிரியாவிற்குள்ளும் அண்டை நாடுகளிலும் உள்ள அகதிகளைப் பராமரிப்பதற்கென சுமார் எட்டு பில்லியன் டாலர்கள் தேவைப்படுவதாகக் கூறினர்.

கடைசியாக இடம்பெற்ற மாநாட்டிலே கத்தர் மற்றும் குவைத் ஆகிய நாடுகள் பெரும் நிதிப் பங்களிப்புகளைச் செய்தன. அத்தோடு துருக்கியும் தனது சொந்தப் பாதீட்டில் பெருந்தொகையை சிரியா அகதிகளுக்கென ஒதுக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிரியாவில் மீண்டும் இரசாயனக் குண்டுத் தாக்குதல்கள்



கடந்த செவ்வாய் (04) அன்று மேற்கொள்ளப்பட்ட தொடர் இரசாயனத் தாக்குதல்களின் பலி எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றது. இச்செய்தி எழுதப்படும் வரைக்குமாக சுமார் 58 பொதுமக்கள் பலியாகியும் நூற்றுக் கணக்கானோர் அபாயகரமான உபாதைகளை எதிர்கொண்டும் வருகின்றனர்.

சிரியாவின் வடமேற்குப் பகுதியான இத்லிபுக்கு அருகாமையிலுள்ள கான் ஷெய்கோன் பகுதியில் இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக மனித உரிமைகளுக்கான சிரியக் கண்காணிப்பு மையம் என்ற அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

கிளர்ச்சிக் குழுவினர் கட்டுப்பாட்டிலுள்ள இப்பிராந்தியத்தில் அஸாதின் படைகள் அல்லது ரஷ்யப் படையினரே இத்தாக்குதல்களை மேற்கொண்டிருப்பதாக அந்தத் தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்பகுதியிலுள்ள எதிர்ப்புக் குழு செயற்பாட்டாளர்கள் தொடர்ந்தும் புகைப்படங்களை சமூக வலைத்தளங்களூடாகப் பதிவேற்றி வரும் நிலையில் அஸாத் தரப்பு குறித்த தாக்குதல்களைத் தாம் மேற்கொள்ளவில்லை என மறுப்பு வெளியிட்டுள்ளது.

செவ்வாய் காலை 6.45 மணியளவில் ஆரம்பித்த தாக்குதல்கள் தொடர்ந்தும் அரை மணிநேரமளவு நீடித்துள்ளது. கிடைக்கும் உத்தியோகபூர்வமற்ற செய்திகளின்படி நூறுக்கும் அதிகமானோர் பலியாகியிருப்பர் என அஞ்சப்படுகிறது. சிரியாவில் சிவில் யுத்தம் ஆரம்பித்த காலம் தொடக்கம் மேற்கொள்ளப்பட்ட இரசாயனத் தாக்குதல்களில் மிகப் பயங்கரமானதாக இத்தாக்குதல் நடவடிக்கை கருதப்படுகிறது.

## சர்வதேசப் பார்வை



# ஏப்ரல் 16 ஐ நோக்கி துருக்கி

உஸ்மானிய கிலாபத் உடைவுக்குப் பின்னரான துருக்கியின் முக்கிய அரசியல் நகர்வாகப் பார்க்கப்படும் புதிய அரசியலமைப்புக்கான சர்வஜன வாக்கெடுப்பை நோக்கி துருக்கி வேகமாக நகர்ந்து கொண்டிருக்கிறது.

துருக்கிக்கு உள்ளால் அர்துகான் தலைமையிலான அரசுக்குரிய எதிர்ப்புகள் தொடர்ந்தும் இழிவளவாகிக் கொண்டு வருகையில், இன அடிப்படையிலான வலதுசாரி கருத்துச் செல்வாக்குகள் அதிகரித்து வரும் ஐரோப்பா புறமிருந்து தொடர்ந்தும் எதிர்ப்புக்களை சம்பாதித்து வருகிறது.

பிரதமர் முறைமை இல்லாதொழிக்கப்பட்டு ஜனாதிபதி முறைமை கொண்டு வரப்படும் புதிய அரசியல் யாப்பின் பிரகாரம் துருக்கி மிக ஸ்திரமான நிலையொன்றுக்குச் செல்லும் என அர்துகானின் AKP கட்சியினர் மற்றும் அவர்களது ஆதரவு அணியினர் பலமாக நம்புகின்றனர்.

அத்தோடு துருக்கியை மேலும் பலப்படுத்தும் இந்த நிலைமாற்றத்தை விரும்பாத ஐரோப்பாவும் அமெரிக்காவும், துருக்கி ஜனநாயகத்தை விட்டும் சர்வாதிகாரத்தை நோக்கி நகர்வதாக குற்றஞ் சாட்டிக் கொண்டு வருகின்றனர்.

மேற்குலகில் வலதுசாரி இன வெறிப் போக்குகள் அதிகரித்துக் கொண்டு வரும் நிலையில், சின்னாசியாப் பகுதி மற்றும் அரபு-இஸ்லாமிய உலகிலே பலம்மிக்க வல்லரசாக துருக்கி உருப்பெற்று வருவது பிராந்திய வெகுமக்கள் மற்றும் நேரிய அரசியல் வலு சமநிலையை விரும்புவோரிடம் வெகுவான ஆதரவலையைத் தோற்றுவித்துள்ளது. இக்காரணங்களே பெருமளவான மக்கள் ஆதரவு அலையை அர்துகானின் பக்கம் குவித்து வருவதாக அரசியல் நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

துருக்கியர்களும் பிராந்திய அரசியல் நலன் விரும்பிகளும் துருக்கியின் ஸ்திரப்பாட்டையும் பலம் பெறலையும் விரும்புகையில் குடியரசு மக்கள் கட்சி (CHP) தலைமையிலான எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுக்களும் பிரசாரங்களும் எடுபடாது பிசுபிசுத்துப் போயுள்ளன.

குர்திஷ், ஐசிஸ் பயங்கரவாதப் பிரச்சினைகள் மற்றும் கடந்த இராணுவ சதிப் புரட்சி முன்னெடுப்புக்கள் போன்றவற்றிலிருந்தும் பாதுகாப்புப் பெற்ற குழப்பங்களற்ற துருக்கி தேசமே துருக்கியர்களது அவாவாகும்.

## தெரேசா மேயர் மத்திய கிழக்குக்கு விஜயம்



பிரிட்டன் பிரதமர் தெரேசா மேயர் மத்திய கிழக்குக்கான விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார். ஜோர்தான் மற்றும் சவூதியை உள்ளடக்கிய இவ்விஜயம் தெரேசா மேயர் பதவியேற்றதன் பின்னர் முதலாவது மத்திய கிழக்குக்கான விஜயமாகும். குறிப்பாக பிரிட்டன் ஐரோப்பிய யூனியனை விட்டும் வெளியேறிய பின்னரான சூழ்நிலைகளை எதிர்கொள்வதற்கான ஒரு முன்னெடுப்பாக இவ்விஜயம் நோக்கப்படுகிறது.

இவ்விஜயத்தின் போது சவூதியுடன் பாதுகாப்புத் தொடர்பான உடன்படிக்கைகளுடன் சவூதியின் பொருளாதார முதலீடுகளை பிரித்தானியா பக்கம் ஈர்க்க அதிக முயற்சி செய்வார் என வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர்.

## சீனாவில் நீண்ட தாடி மற்றும் தலைப்பாகைக்குத் தடை



சீன அரசாங்கம் தாம் மேற்கொள்ளும் இஸ்லாமியத் தீவிரவாதத்துக்கெதிரான தொடர் நடவடிக்கைகளின் ஓர் அங்கமாக சின்ஜியாங் மேற்குப் பிராந்தியத்தில் புதிதாக அமுலுக்கு வரும் வகையில் நீண்ட தாடிகள் வைப்பதற்கும் தலைப்பாகை அணிவதற்குமான தடைச் சட்டம் அமுலுக்கு வருவதாக அறிவித்துள்ளது. குறிப்பாக இச்சட்டம் பொது இடங்கள் மற்றும் பொது நிகழ்ச்சிகளுக்கே இத்தடைச் சட்டம் அமுலாகவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தடைச் சட்ட அமுலாக்கம் பெற்றுள்ள சின்ஜியாங் மாகாணம், சீனாவில் அதிகூடுதலாக உய்குர் முஸ்லிம்கள் வாழும் பிராந்தியமாகும். அப்பகுதியில் பெரும்பான்மையாக வாழும் இம்மக்கள் கடும் அடக்குமுறையைத் தொடர்ந்தும் எதிர்நோக்கி வருகின்றனர். இப்பிராந்தியத்தில் கடந்த காலங்களில் முஸ்லிம்களது அடிப்படைக் கடமைகளான தொழுகை, நோன்பு விடயங்களிலும் தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.'

அண்மைக் காலப்பகுதிக்குள் எண்ணற்ற அரச பயங்கரவாத அடக்குமுறைகளுக்கு உய்குர் முஸ்லிம்கள் முகங்கொடுத்து வந்தனர். இந்த வன்முறைகளை தீவிரவாதக் குழுக்களையும் பிரிவினைவாதிகளையும் அடக்குதல் என சீனா நியாயப்படுத்தியிருந்தது. எனினும், சீன அரசின் எதிர்த் தரப்புக்கள் அரசாங்கத்தின் இந்நடவடிக்கைகளே தீவிரவாதத்தையும் பிரிவினைவாதத்தையும் தூண்டும் எனக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சென். பீட்டர்ஸ்பேர்க்கில் ரயில் குண்டு தாக்குதல்



ரஷ்யாவின் இரண்டாவது பாரிய நகரமாகக் கருதப்படும் சென். பீட்டர்ஸ் பேர்க்கில் ரயில் குண்டு தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டதில் 14 பேர் கொல்லப்பட்டும் 49 பேர் காயமுற்றும் உள்ளனர். இத்தாக்குதலை மேற்கொண்ட நபர் ரஷ்யக் குடியுரிமை பெற்ற மத்தியாசியாவின் கிர்கிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவர் என பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த திங்களன்று (03) உள்ளூர் நேரப்படி பி.ப. 2.40 அளவில் இரு சுரங்க ரயில் நிலையங்களுக்கிடையில் இடம்பெற்ற இத்தாக்குதல்களை கிர்கிஸ்தானைச் சேர்ந்த Akbarzhon Jalilov என்ற 22 வயது நபர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இத்தாக்குதலைக் கண்டித்துள்ள கிர்கிஸ்தான் அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவுள்ள விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு அளிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

தொடர்ந்து ரஷ்ய அதிபர் தாக்குதல் நிகழ்ந்த இடத்துக்குச் சென்று மலர் வளையங்கள் வைத்ததுடன் மூன்று நாள் துக்கம் அனுஷ்டிப்பும் ரஷ்யாவில் பிரகடனப்படுத்தப்பட்டது.

## ஈராக்கில் தற்கொலை தாக்குதலில் 31 பேர் பலி

ஈராக் தலைநகர் பக்தாத்தின் வடக்கு பகுதியான டிக்ரிட்டில் நடத்தப்பட்ட தற்கொலைப் படை தாக்குதலில் 30 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன், 42 பேர் படுகாயமடைந்துள்ளனர். பொலிஸ் துறையை சேர்ந்த ரோந்து படையினரை குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் தற்கொலைப் படையை சேர்ந்த ஐந்து பேர் காவல் அதிகாரியின் வீட்டினுள் நுழைந்து தாக்குதல் நடத்தினர் என சலாஹுதீன் மாகாண சபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்கொலைப் படையைச் சேர்ந்த மூன்று பேர், பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். எனினும், இரண்டு பேர் தங்கள் மீது கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தனர். குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களில் 10 பேர் பொலிஸார் என்றும் இந்த தாக்குதலில் 42 பேர் காயமுற்றனர்

இதுவரை இந்த தாக்குதல் சம்பவத்திற்கு எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. இருந்தும் மொசூல் துப்பாக்கிச் சூட்டில் நடந்த இதே போன்ற தாக்குதலுக்கு ஐ.எஸ் தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. சுன்னி எனும் தீவிரவாத அமைப்பு அடிக்கடி ஈராக் பாதுகாப்பு படையினரை எதிர்த்து தாக்குதல் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## யெமன் மூலோபாய ரீதியில் அரபுகளுக்கு முக்கியமானது: சவூதி இளவரசர்

சவூதி பாதுகாப்பு அமைச்சருக்கும் யெமனிய கோத்திரத் தலைவர்களுக்கும் இடையில் கடந்த புதனன்று முக்கியத்துவம் மிக்க சந்திப்பொன்று இடம்பெற்றது. இதன்போது யெமன் கோத்திரத் தலைவர்களிடம் சவூதி பாதுகாப்பமைச்சர் முஹம்மத் பின் ஸல்மான் யெமனினது முக்கியத்துவத்தையும் அரபுக்களிடத்தில் அப்பிராந்தியம் கொண்டிருக்கும் ஆழ்ந்த மூலோபாய அமைவிடத்தையும் வலியுறுத்தி சுட்டிக்காட்டியுள்ளார்.



யெமனை அபகரிப்பதன் மூலம் எதிரிகள் அரபுக்களது முதுகந்தண்டிலே ஆழ்ந்த காயத்தை ஏற்படுத்த முயல்வதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அத்தோடு அச்சந்தர்ப்பத்திலே யெமன் பறிகொடுக்கப்படுவதன் மூலமாக முழு அரபு-இஸ்லாமியப் பிராந்தியங்களும் எதிரிகளது ஆளுகைக்குள்ளாகும் எனவும் இது கடந்த ஒன்றரை வருடங்க [illegible] மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மூலம் தடுக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார். ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் மற்றும் மாஜி அதிபர் அப்துல்லாஹ் ஸாலிஹ் மூலம் ஈரான் முன்னெடுத்த அஜண்டாவை சவூதி கால தாமதமாகவே புரிந்து கொண்டதாகவும் அது பல சிவிலியன்களது உயிரிழப்புக்களுக்குக் காரணமாக அமைந்ததாகவும் பரவலான குற்றச்சாட்டுக்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• றவூப் ஸெய்ன்



# மொசூல் மீட்புப் போரும் ஈராக்கின் எதிர்காலமும்

பத்தாண்டு கால அமெரிக்க ஆக்கிரமிப்பின் பின்னர் ஈராக் பலதரப்பு போர் முனைக் களமாக மாற்றமடைந்தது. ஒன்றுக்கொன்று முரண்பட்ட இலட்சியங்களுடன் கூடிய ஆயுதக் கும்பல்கள் களத்திற்கு வந்தன. அமெரிக்க ஆக்கிரமிப்பின் பின்னர் ஈராக்கின் அதிகாரத்தை ஈரான் ஆதரவு ஷீஆ வர்க்கம் கைப்பற்றியது. ஷீஆ வர்க்கத்திற்குள்ளும் பல இராணுவக் குழுக்கள் இயங்கின.

தென்கிழக்கு சிரியாவின் ரக்கா பகுதியிலிருந்து 2014 இல் ஈராக்கை நோக்கி நகர்ந்த ஐசிஸ் எனப்படும் பயங்கரவாத இயக்கம் அந்த ஆண்டில் ஈராக்கின் ஒவ்வொரு நகரையும் வேகமாகக் கைப்பற்றி வந்தது. உள்நாட்டில் ஷீஆ-சுன்னி ஆயுத இயக்கங்களுக்கிடையில் நடந்த போரும் மோதலும் ஐசிஸின் ஊடுருவலை எளிதாக்கியது. சிரியாவில் ரக்கா போன்று, ஈராக்கில் மொசூல் ஐசிஸ் பயங்கரத்தின் கோட்டையாகியது. தற்போது சுன்னி முஸ்லிம்களின் விடுதலைப் போராட்டம் ஒடுக்கப்பட்ட பின்னர், மொசூல் நகரை மீட்கும் போரில் ஈராக்கிய ஷீஆ அரச படையினர் ஈடுபட்டுள்ளனர்.

2003 மார்ச்சில் அமெரிக்கப் படையினர் நடாத்திய தாக்குதலில் பக்தாத் அழிக்கப்பட்டபோது அரங்கேறிய காட்சிகள் இப்போது மொசூலில் இடம்பெறுகின்றது. அங்கு வாழ்கின்ற மக்களில் 90 வீதத்திற்கும் அதிகமானோர் சுன்னி முஸ்லிம்கள். கூபா, பஸரா, பக்தாத் போன்று மொசூல் இஸ்லாமிய வரலாற்றில் பெயர்பெற்ற ஒரு பிராந்தியம். அங்கு நிலைகொண்டுள்ள ஐசிஸ் பயங்கரவாதிகளை அழிக்கும் ஈராக்கியத் திட்டத்திற்கு பலிக்கடாவாக்கப்பட்டவர்கள் மொசூல் சுன்னி முஸ்லிம்களே, இன்றும் அந்தக் கோரக் காட்சிகள் தொடர்கின்றன.

ஈராக்கிய படைகள் குறிப்பிட்டளவு இந்தப் போரில் வெற்றி பெற்றுள்ளதாக அறிவித்துள்ளனர். தொடர்ந்து ஈராக்கின் பிரதமர் ஹைதர் அல் ஆபாதி, கடந்த வாரம் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை வொஷிங்டனில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இரு நாடுகளுக்கும் இடையில் முன்னொரு போதும் இல்லாத வகையில் இருதரப்பு உறவுகள் கட்டியெழுப்பப்படும் என ட்ரம்ப் அந்தக் கூட்டத்தில் தெரிவித்தார்.

ஐசிஸ் பயங்கரத்தை ஒழிப்பதே இந்தக் கூட்டுறவின் அடிப்படை நோக்கம் எனவும் அவர் வலியுறுத்திக் கூறியுள்ளார். ட்ரம்ப் பதவியேற்று சரியாக 30 ஆவது நாளில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. ஐசிஸ் பயங்கரவாதத்தை முழுமையாக ஒழித்து விட அனைத்து உதவிகளையும் வழங்கப் போவதாக ட்ரம்ப் கூறினார். அவரது தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களிலும் இந்த வாக்குறுதியை அவர் மீட்டி மீட்டிக் கூறியிருந்தார்.

ஆயினும், மொசூலை முழுமையாக மீட்கும் போர் சாதாரணமானதல்ல. அதற்கான மனித விலை மிகப் பெரியது. ட்ரம்பும் ஐதரும் எதிர்பார்ப்பதை விட அதற்கு இன்னும் நீண்டகாலம் தேவைப்படும். முரண்பாடுகளை போரினால் வெற்றிகொள்ள முடியும் என்ற ட்ரம்பின் குருட்டு நம்பிக்கை பாரிய அழிவுகளையே கொண்டுவரும். உணர்ச்சிகரமான ட்ரம்பின் வார்த்தைகள் ராஜதந்திர நுணுக்கமற்றவை.

மொசூல் மீது தரைவழியாகவும் வான் வழியாகவும் அமெரிக்கப் படையினர் கடும் தாக்குதல் ஒன்றை நடத்தி விட்டால் எல்லாம் முடிந்து விடும் என்று ட்ரம்ப் நினைக்கின்றார். அது எளிதானதுதான். ஆனால் அதற்கு ஈராக்கியர்கள் கொடுக்கப் போகும் விலை குறித்து நாம் பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது.

ஐசிஸ் என்பது இன்று மொத்த மத்திய கிழக்கிலும் ஒரு கென்சர் போன்று பரவியுள்ளது. மொசூலில் அது அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு அகற்றப்பட்டாலும் அது புரையோடிப் போயுள்ள உயிர்க்கலங்கள் தென் மேற்கு ஆசியாவின் பிற பகுதிகளிலும் ஆழமாகப் பதிந்துள்ளது.

ஈராக்கிய நெருக்கடியின் பன்முகப் பாங்கை புரிந்துகொள்ளாமல், வெறுமனே ஐசிஸ் பயங்கரவாதத்தின் ஊடுருவல் மட்டுமே அதன் தேசிய பிரச்சினை, என்ற தவறான கணிப்புக்கு ஆளும் ஷீஆ வர்க்கம் வந்துள்ளது. பல தசாப்தங்களாக அமைதியோடு வாழ்ந்த சுன்னி-ஷீஆ சமூகங்களுக்கிடையில் போருக்குப் பின்னர் ஆழ வேரூன்றியுள்ள பகை உணர்வுகள், பரஸ்பர குரோதங்கள் ஆகியவற்றின் பின்னணியில் இருந்து எழும் சமூக மோதல்களை இந்தக் கணிப்பு புறக்கணித்து விடுகின்றது.

அரசுக்குள் அரசு என்ற வகையில் ஈராக்கின் சட்ட ரீதியான அரசாங்கத்திற்குள்ளேயே முக்ததா சத்ரின் ஷீஆ இராணுவப் பிரிவு தனித்துச் செயற்படுகின்றது. இது தவிரவும் வேறு பல ஷீஆ ஆயுதக் குழுக்கள் அரச படைக்கு வெளியே செயல்படுகின்றன. ஆக, ஈராக்கின் தேசிய பாதுகாப்புப் படை என்பது ஸ்திரமான, முறையான, ஒருபடித்தான கட்டமைப்பைக் கொண்டதாக மாற்றப்படவில்லை. ஒரு நாட்டின் தேசிய பாதுகாப்பில் ஒருங்கிணைக்கப்பட்ட பாதுகாப்புப் படையின் கட்டமைப்பு முக்கியமானது. படைக்குள் படை என்பது தேசிய பாதுகாப்புக்கு ஆபத்தானது. இந்நிலையிலேயே ஊடுருவும் படையினரை அரசு எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இன்னொரு புறம் ஐசிஸ் ஆயுத இயக்கத்தை சுன்னிகளின் முகவர்கள் என்று ஷீஆ வர்க்கம் முத்திரை குத்துவது ஈராக்கிய சமூகங்களுக்கிடையிலான வரலாற்றுப் பகைமையை நீடிக்கவே வாய்ப்பளிக்கும். இந்த முத்திரை குத்தலின் விளைவாக மொசூலில் ஐசிஸ் சந்தேக நபர்கள் என்ற பெயரில் நூற்றுக்கணக்கான அப்பாவி சுன்னி முஸ்லிம்கள் கொல்லப்படுகிறார்கள். சாலையோரங்களில் சிதைக்கப்பட்ட ஜனாஸாக்கள் சிதறிக் கிடக்கின்றன. ஆக, நாட்டின் அனைத்து மக்களினதும் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலான தேசிய பாதுகாப்புப் படை சீர்திருத்தம் ஒன்று அவசியமாகின்றது. மொசூல் முற்றாக மீட்கப்பட்ட பின்னர் ஈராக்கிய அரசு கவனம் செலுத்த வேண்டிய முதன்மையான விடயம் இந்த தேசிய பாதுகாப்புப் படைச் சீர்திருத்தமே.

2003 ஆம் ஆண்டிலிருந்து பாதுகாப்புப் படையிலுள்ள சில சக்திகள் ஈராக்கின் சில பகுதி மக்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்து வருகின்றனர். பாதுகாப்பு நிறுவனங்கள், அரச படைப் பிரிவுகள் ஒருமுகப்படுத்தப்படுவதோடு கொள்கை சார் சீர்திருத்தங்கள் நடைமுறைக்கு வரவேண்டும். பொது மக்களை கைதுசெய்தல், சோதனைச் சாவடிகளில் மக்களை துஷ்பிரயோகம் செய்தல், முன்னெச்சரிக்கை தாக்குதல் நடத்தல், தடுப்புக் காவலில் வைத்தல் உள்ளிட்டு, பாதுகாப்புத் துறையில் ஊழல் மோசடிகளைக் களைவதற்கான சட்டத் துறை சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

இன்று ஈராக்கின் அரச படை என்பது பல்வகைப்பட்டது. உள்நாட்டு அமைச்சின் படை, தேசிய இராணுவம், குர்திஷ் பெஷ்மேகா, ஷீஆக்களின் பல்வேறு ஆயுத இயக்கங்கள், அறபு-சுன்னி கோத்திர இராணுவ இயக்கங்கள் என மிகச் சிக்கலான இராணுவ அமைப்பை ஈராக் கொண்டுள்ளது. 2014 இலிருந்து இவை ஒன்றுக்கொன்று மோதிக்கொள்ளும் சூழ்நிலையும் தோன்றியது. இவற்றுக்கிடையில் பிராந்திய கூட்டமைப்புகளும் செயல்படுகின்றன.

ஈராக்கின் நீண்டகால அரசியல் ஸ்திரப்பாட்டைக் கருத்திற்கொண்டு தேசிய இராணுவக் கட்டமைப்பை சீர்திருத்தும் வேலைத் திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். [illegible]

போன்ற இராணுவ வல்லரசுகளோடு உள்ளக தேசிய பாதுகாப்புக் குறித்து உடன்படிக்கைகள் செய்யும்போது நாட்டின் உள்ளக நிலமைகளைக் கவனத்தில் எடுக்க வேண்டும்.

தேசிய நலன்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். ஈராக்கில் ஒவ்வொரு நாளும் குண்டு வெடிப்பும் தற்கொலை குண்டுத் தாக்குதல்களும் தாராளமாக நடைபெறுகின்றன. வீடுகளிலிருந்து வெளியேறும் மக்கள் பாதுகாப்பின்மையை உணர்கின்றனர். போரின் விளைவாக, தெருச் சிறார்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 14 ஆண்டு கால யுத்தத்தினால் விதவைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதோடு, விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படும் பெண்களின் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது.

போரின் இந்தக் கொடூரமான அழிவுகளிலிருந்து நாட்டை மீளக் கட்டியெழுப்ப வேண்டுமாயின், ஈராக்கிற்கு அமைதி திரும்ப வேண்டும். சமூக அமைதியை உருவாக்குவதற்கான முதற் படி ஈராக்கின் இராணுவக் கட்டமைப்பை ஒழுங்குபடுத்துவதே. சட்ட ரீதியற்ற ஆயுதக் குழுக்களை களத்திலிருந்து அகற்றுவதோடு, சட்டபூர்வமான இராணுவத்திற்கான பணி ஒழுக்கங்கள் வரையறுக்கப்பட வேண்டும்.

ஈராக்கின் இன்றைய போரினால் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் சுன்னி முஸ்லிம்களே. அவர்கள் ஒரு புறம் ஐசிஸ் பயங்கரவாதிகளாலும் இன்னொரு புறம் ஈராக்கிய அரச படையினராலும் மற்றொரு புறம் ஷீஆ இராணுவக் குழுக்களாலும் காவு கொள்ளப்படுகின்றனர். சந்தேகத்தோடு பார்க்கப்படுகின்றனர். தான்தோன்றித் தனமாகக் கைதுசெய்யப்படுகின்றனர். தடுப்புக் காவலில் வைக்கப்படுகின்றனர்.

சர்வதேச போர் முறைமை மட்டும் சட்டங்களை மதிக்கின்ற இராணுவக் கட்டமைப்புக்கு ஈராக் வந்தாக வேண்டும். அதன் மூலமே ஈராக்கில் நிலையான சமாதானம் சாத்தியமாகும். சமூக அமைதி நிலையான சமாதானத்திற்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் மறுக்க முடியாத நிபந்தனையாகும். மொசூல் பிராந்தியத்தைக் கைப்பற்றுவது ஈராக்கிய பிரச்சினைக்கான முழு முதற் தீர்வல்ல. பயங்கரவாதத்திடமிருந்து ஒரு நகரை மீட்கும் பணியாக மாத்திரமே அது பார்க்கப்பட வேண்டும். அதேவேளை, ஈராக்கில் இராணுவக் கட்டமைப்பு உறுதியற்ற நிலையில், ஐசிஸ் இடமிருந்து ஈராக்கை முழுமையாகவே மீட்க முடியுமா என்பது இன்னொரு கேள்வியாகும்.

ஈராக்கிலுள்ள சில ஷீஆ குழுக்கள் சிரியாவின் ரக்கா வரை நாம் அவர்களை விரட்டியடிப்போம் என்று அறிக்கை விடுக்கின்றனர். இதன் விளைவு குறித்து சிந்திக்க வேண்டும். ஈராக்கை இன்னும் 15 ஆண்டுகளுக்கு போர்க்களமாகத் தக்கவைப்பதே இந்தக் குழுக்களின் வேணவாவாக இருக்கின்றதா? அதிகாரத்திலுள்ளோர் இத்தகைய இராணுவக் குழுக்களை எப்படி எதிர்கொள்ளப் போகின்றனர்.

சுன்னி முஸ்லிம்கள் அப்பட்டமாக எதிர்த்து நிற்கின்ற சட்டங்களையே பாராளுமன்றம் நிறைவேற்றி வருகின்றது. பாரா இராணுவக் குழுக்களின்

(பக்.14)

## பொஸ்பரஸ் கரையினிலே...

### துருக்கியின் வீழ்ச்சியும் எழுச்சியும் - 16

பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்ட அரசாங்கம், அர்பகானின் கட்சி வளர்வதைக் கண்டு 1980 இல் அதனைத் தடைசெய்தது. ஸலாமா கட்சியைத் தடைசெய்ததோடு, இஸ்லாமிய எழுச்சியை முடக்கிவிட்டதாக அரசாங்கம் எண்ணியது. ஆனால், 1983 இல் அர்பகான் ரபாஹ் என்ற பெயரில் புதியதோர் கட்சியை ஆரம்பித்தார். அதன் செல்நெறிகள் இஸ்லாமியமயமானதாகவே இருந்தது.

31 வயதில் இக்கட்சியின் ஸ்தன்பூல் கிளைத் தலைவராக அர்தூகான் தெரிவாகினார். ரபாஹ் கட்சியின் கிளைகள் துருக்கியின் எல்லாப் பகுதிகளிலும் உருவாக்கப்பட்டன. அவை இஸ்லாமிய தஃவாவின் மத்திய நிலையங்களாகவும் இஸ்லாமிய அரசியலின் விழிப்புணர்வு மையங்களாகவும் செயல்பட்டன. கிராமங்களிலிருந்து நகரங்கள் என பட்டி தொட்டியெல்லாம் இஸ்லாமிய அரசியல் விழிப்புணர்வு பரவலடைந்தது. ஸ்தன்பூல், அங்காரா போன்ற முக்கிய நகரங்கள் அதன் ஆளுகையின் கீழ் வந்தன.

1994 இல் முதல் தேர்தலை ரபாஹ் எதிர்கொண்டது அது ஓர் உள்ளூராட்சித் தேர்தல். நகர சபைகள் பலவற்றை ரபாஹ் கைப்பற்றியது. தற்போதைய ஜனாதிபதி அர்தூகான் ஸ்தன்பூல் மாநகர சபை மேயராகத் தெரிவானார். இதுவே அர்தூகானின் நேரடியான அரசியல் பணிகளுக்கான களமாக இருந்தது.

ரபாஹ் கட்சி ஸ்தன்பூல் நகராட்சியைக் கைப்பற்றுவதற்கு முன்பாக அந்நகரில் அடிக்கடி மின்சாரமும் குடிநீரும் துண்டிக்கப்பட்டு வந்தன. திண்மக் கழிவை முகாமை செய்வது பெரியதோர் சவாலாக விளங்கியது. அர்தூகான் இப்பிரச்சினைகளையெல்லாம் வெற்றிகரமாக தீர்த்து வைத்ததன் மூலம் ரபாஹ் கட்சியின் செல்வாக்கு அதிகரித்தது. அர்தூகானின் தனிப்பட்ட அரசியல் செல்வாக்கும் உயர்ந்தது.

துருக்கியின் நவீன வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஓர் ஆளுமை எனக் கருதப்படும் அர்பகானின் ரபாஹ் கட்சி அடுத்த ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஆச்சரியப்படத்தக்க அளவு ஆசனங்களைக் கைப்பற்றியது. 1995 இல் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் 550 ஆசனங்களைக் கொண்ட துருக்கிய பாராளுமன்றத்தில் 158 ஆசனங்களை அர்பகானின் கட்சி பெற்றது. இதுவே ஒரு தனிக்கட்சி பெற்ற ஆகக் கூடிய ஆசனங்களாகும். அப்போது ஜனாதிபதியாக இருந்தவர் தான்சூசிலர் எனும் பெண்மணியாவார்.

அப்போதைய மதச்சார்பற்ற கட்சியின் முக்கியஸ்தராக விளங்கிய சுலைமான் திமிரில் ஏனைய மதச்சார்பற்ற கட்சிகளை இணைத்துக் கொண்டு அர்பகானின் கட்சிக்கு எதிரான தேசிய கூட்டணி அரசாங்கமொன்றை உருவாக்கும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டார். எனினும், தான்சூசிலரின் மதச்சார்பற்ற கட்சியோடு பேச்சுவார்த்தை நடத்திய அர்பகான் கூட்டணி அரசாங்கமொன்றை அமைக்கும் வாய்ப்பைப் பெற்றார்.

1996 இல் அர்பகான் மதச்சார்பற்ற துருக்கியின் முதல் இஸ்லாமியப் பிரதமராகப் பதவியேற்றார். 1924 இல் உஸ்மானிய கிலாபத் வீழ்ந்ததன் பின்னர் நவீன துருக்கியில் இஸ்லாமியப் பிரதமராகப் பதவியேற்ற முதலாவது தலைவர் என்ற பெருமையை இதன் மூலம் அர்பகான் நிலைநாட்டினார்.

அர்பகான் ராஜதந்திர நுணுக்கம் கொண்டவர். துருக்கியில் தனிப்பட்ட, குடும்ப, அரசியல் செல்வாக்குள்ளவர். பல்கலைக் கழகத்தில் அவருக்கு ஆதரவான பெருந்தொகை மாணவர்கள் இருந்தனர். பொருளாதார செல்வாக்குள்ள குடும்பத்தைச் சேர்ந்த அர்பகான் இஸ்லாமியப் பின்னணி கொண்டவர். கட்சியை உருவாக்குவதற்கு முன்பாகவும் கட்சியை ஆரம்பித்த சமகாலத்திலும் அவர் நடாத்தி வந்த மில்லி குரூஸ் எனப்படும் இஸ்லாமிய பேரியக்கம் துருக்கிய சமூகத்தை -குறிப்பாக, இளைஞர்களை- இஸ்லாமியமயமாக்குதலில் பெரும் பங்கு வகித்தது. அரசியல் செயற்பாட்டிற்கான சமூகக் களத்தை தயார்செய்வதில் மில்லி குரூஸ் கவனம் செலுத்தியது.

அர்பகான் பிரதமராகப் பதவியேற்றபோது தான்சூசிலர் ஜனாதிபதியானார். இக்காலம் துருக்கியின் பொருளாதாரம் மற்றும் அரசியல் பாரிய நெருக்கடிகளை சந்தித்திருந்தது எனவே அர்பகானின் முயற்சிகள் வெற்றி பெறாது என்றும் இஸ்லாமியமயமாக்கல் திட்டம் தோற்றுவிடும் என்றுமே இராணுவம் நினைத்தது.

வீழ்ந்துள்ள துருக்கியை தூக்கி நிலைநாட்டும் ஆற்றல் அர்பகானுக்கு இல்லை என்று கருதிய இராணுவம் அவரை அவரது வழியில் விட்டு விட்டது. ஆனால், இராணுவம் நினைத்ததை விட அர்பகானின் நகர்வுகள் மறுதிசையில் இருந்தன. அவரது திட்டங்களும் நகர்வுகளும் மக்கள் ஆதரவை கவரும் வகையில் இருந்தன. ஒரு வருடத்திற்குள் 38 பில்லியன் டொலராக இருந்த துருக்கியின் வெளிநாட்டுக் கடன்தொகையை வெறும் 15 மில்லியன் டொலராகக் குறைத்தமார். அதாவது துருக்கியின் வெளிநாட்டுக் கடனில் 90 வீதமானவற்றை அவர் அடைத்து விட்டார்.

குர்திஷ் மக்களோடு பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் அவர்களது தேசிய பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று அர்பகான் நம்பினார். குர்திஷ்கள் முஸ்லிம்கள் என்ற வகையில் அவர்கள் எமது சகோதரர்கள். அவர்களின் இன அடையாளம் பாதுகாக்கப்பட வேண்டும். ஒன்றுபட்ட துருக்கியினுள் தேசிய இனமான குர்திஷ்களின் அரசியல் அபிலாசைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று அர்பகான் கருதினார்.

இதன் பின்னணியில் மஸ்ஊத் பர்ஸானி, ஜலால் தலபானி போன்ற குர்திஷ் கட்சித் தலைவர்களோடு அர்பகான் பேச்சுவார்த்தைகளை நடாத்தினார். அவை மிகுந்த அரசியல் முக்கியத்துவம் கொண்டவை என்பதில் சந்தேகமில்லை. சர்வதேச ரீதியில் சக நாடுகளுடன் நெருக்கமான உறவுகளைப் பேணுவதிலும் ராஜதந்திர அணுகுமுறையை அர்பகான் கையாண்டார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்பத்து வர்த்தமானி அறிவித்தலைத் தொடர்ந்து சுமார் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட பூர்வீகக் காணிகளை இழந்துள்ள முசலிப் பிரதேச மக்கள் தமக்கான நியாயமான தீர்வு கிட்டும் வரை சத்தியாக்கிரகப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

மீள்பார்வை ஊடகவியலாளர்களான ஹெட்டி ரம்ஸி, மிப்றாஹ் முஸ்தபா ஆகியோர் குறித்த பிரதேசத்துக்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களோடு கலந்துரையாடினர். நேரடிக் கள விஜயத்தின் மூலம் பெறப்பட்ட மக்களின் கருத்துக்களை அடிப்படையாக வைத்து இவ்வாக்கம் எழுதப்பட்டுள்ளது.




இதற்குப் புறம்பாக மார்ச் 24 ஆம் திகதி ஜனாதிபதி வர்த்தமானி அறிவித்தலில் கையெழுத்திட்டமை பெரும் தவறாகும். இதன் பின்னர்தான் அநியாயமாக ஏமாற்றப்பட்ட மக்கள் தமது ஆட்சேபனையை கடிதம் மூலமாக மார்ச் 27 ஆம் திகதி ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளனர்.

2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த பின் இப்பிரதேச மக்கள் தமது சொந்த இடங்களுக்கு வந்து பார்த்த போது அவை அனைத்துமே அரச பாதுகாப்பு வலயத்திற்கு உட்பட்டிருந்தது. எனவே இந்த அப்பாவி மக்களின் சொந்தக் காணிகள் அரசாங்கத்தினாலும் வன இலாகாவினாலும் கையகப்படுத்தப் பட்டுள்ள நிலையில் அவர்களை குரூர

தில் வழங்கப்பட்ட காணி உறுதிகள் கூட இருக்கின்றன. இதற்கும் மேலாக 1980 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவின் வீட்டுத் திட்டத்தின் கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட 10 வீடுகள் அமைந்துள்ள பகுதியும் வனமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இப்படியான பல உறுதியான ஆதாரங்கள் அனைத்துமே முஸ்லிம்கள் இந்தப் பகுதியில் பூர்வீகமாக வாழ்ந்திருக்கின்றனர் என்பதை பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

முசலிப் பிரதேச மக்கள் தற்போது சத்தியாக்கிரகப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்ற தக்கியாப் பள்ளி

# வில்பத்து வர்த்தமானி பிரகடனம்:
# நல்லாட்சி அரசாங்கத்தின் அப்பட்டமான இனவாதம்

## எந்த அரசியல்வாதியும் எமக்கான தீர்வைப் பெற்றுத்தரவில்லை



- மொஹமட் சுபியான்

கடந்த மார்ச் மாதம் 24 ஆம் திகதி கடைசியாக வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் முசலிப் பிரதேச மக்களின் ஒரு இலட்சம் ஏக்கர்களுக்கும் அதிகமான பூர்வீகக் காணிகளை இணைத்து வில்பத்து தேசிய சரணாலயம்- 02 என்ற திட்டத்தின் கீழாக உள்ளடக்கி எமக்கு இந்த நல்லாட்சி அரசாங்கம் அநீதி இழைத்துள்ளது.

இதனால் எமது காணிகளை இழந்து பாதிக்கப்பட்டுள்ள நாம் அரசியல்வாதிகள் பலரையும் சந்தித்து எமக்கான நியாயமான தீர்வினை எதிர்பார்த்தோம். ஆனால் இதுவரை எமக்கு எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை. எனவேதான் எமது பிரதேசங்களை மீட்டெடுக்கும் வரை அகிம்சை வழிப் போராட்டத்தை மேற்கொண்டு எமது கண்ணீரை முழு சர்வதேசமும் அறிந்து கொள்ளும் வகையில் மேற்கொண்டு வருகின்றோம்.

மன்னார் மாவட்டத்திலுள்ள முசலிப் பிரதேசத்தில் முஸ்லிம் மக்களே கூடுதலாக வாழ்ந்து வருகின்றனர். முசலிப் பிரதேசத்திலுள்ள 28 கிராமங்களில் 22 முஸ்லிம் கிராமங்களும் இப்போராட்டத்தில் இணைந்துள்ளன. எமது நிலங்களைத் தாருங்கள் என்று மட்டும்தான் நாம் அரசாங்கத்தைக் கோருகின்றோம். அதேபோன்று வடக்கிலுள்ள சகல பிரதேசங்களிலுமுள்ள அனைத்து மக்களும் எமக்கு ஒத்துழைப்பு வழங்கிக் கொண்டிருக்கின்றனர்.

## நாங்கள் சாகும் வரையிலான போராட்டத்தை தொடங்குவதற்கும் தயாராகவே இருக்கின்றோம்



எச்.எம்.எம். காமில்

மன்னார் மாவட்டத்தில் முசலிப் பிரதேச சபையின் கீழ் பாலைக்குழி, முள்ளிக்குளம், கரடிக்குழி, மறிச்சிக்கட்டி, ஹுனைஸ் நகர் போன்ற 20 இற்கும் மேற்பட்ட கிராமங்கள் காணப்படுகின்றன. அந்த வகையில் யுத்தம் முடிவடைந்த பின் முள்ளிக்குளம் மற்றும் மறிச்சிக்கட்டி மரைக்கார் தீவிலுள்ள முஸ்லிம், தமிழ் மக்களின் 950 ஏக்கர்களுக்கு மேற்பட்ட காணிகள் கடற்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த நிலையில் அக்காணிகள் அனைத்தும் தற்போது வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது தெளிவான மனித உரிமை மீறலாகும்.

அதேபோன்று வியாயடிக் குளத்தின் கீழுள்ள எங்களுக்குரிய சுமார் 250 ஏக்கர் காணியில் விவசாயம், வாழைத் தோட்டம் என்பன கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அது மாத்திரமல்லாது 2012 வர்த்தமானியில் உள்ளடங்காத இன்னும் பல காணிகளை கபளீகரம் செய்கின்ற வகையில் கடந்த வாரம் ஜனாதிபதி வர்த்தமானியில் கையெழுத்திட்டுள்ளார்.

ஜனாதிபதியின் இத்தகைய முடிவால் நாம் கவலையடைந்திருக்கின்றோம். எனவே இந்த வர்த்தமானிப் பிரகடனத்தை ஜனாதிபதி உடனடியாக வாபஸ் பெற வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் நாங்கள் சாகும் வரையிலான போராட்டத்தை தொடங்குவதற்கும் தயாராகவே இருக்கின்றோம்.

வாயலுக்கு அருகிலுள்ள 50 ஏக்கர்களுக்கும் அதிகமான காணிகள் கடற்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டு முகாம் அமைக்கப்பட்டுள்ளதுடன், நடுவில் பெரிய புத்தர் சிலையும் வைக்கப்பட்டுள்ளது. மேலும், புத்தளம் மாவட்டத்தின் பூக்குளம் என்ற சிங்களக் கிராமம் வில்பத்து காட்டிற்கு மத்தியில் இருப்பதோடு 75 வீடுகள் அரசாங்கத்தினால் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. அங்கு 100க்கும் மேற்பட்ட சிங்களக் குடும்பங்கள் வசிக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

அதேநேரம் வில்பத்துவின் கிழக்குப் பக்கமாக ஒயாமடுவ பகுதியில் சிங்களக் குடியேற்றம் செய்யப்பட்டு வருகின்றது. இந்த சிங்களக் குடியேற்றத்தினால் வில்பத்துவிற்கு சொந்தமான காணி சுருங்கிக் கொண்டு வருவதால் அதனை ஈடு செய்யும் வகையிலேயே வில்பத்துவின் வடக்குப் பக்கமாக இருக்கின்ற எமது பூர்வீகக் காணிகள் திட்டமிடப்பட்ட வகையில் கபளீகரம் செய்யப்பட்டு வருவதாக மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

மிகக் கவலையான விடயம் என்னவென்றால், சமூகத்தின் காவலர்களாக தங்களை இனங்காட்டிக் கொள்கின்ற 22 முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த நாட்டில் உள்ளனர். ஆனால் அமைச்சர் றிசாட் பதியுத்தீனை தவிர வேறெந்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் பாதிக்கப்பட்டுள்ள மக்களை நேரில் சந்தித்து அவர்களது நியாயங்களையும் கோரிக்கைகளையும் கேட்டறியவில்லை. அதேபோன்று அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை, தேசிய சூறா கவுன்ஸில், முஸ்லிம் கவுன்ஸில் போன்ற எந்த முஸ்லிம் சிவில் அமைப்புக்களும் அம்மக்களை நேரடியாக சென்று சந்திக்கவில்லை.

இதனால் அம்மக்கள் நாங்கள் தனித்து விடப்பட்டிருக்கின்றோம் என்ற விரக்தியை அவர்களது பேச்சுக்களில் இருந்து உணர முடியுமாக இருந்தது. மேலும், மறிச்சிக்கட்டி பிரதேசத்தின் அயல் கிராமமான முள்ளிக்குளத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் தமது காணிகளை கடற்படையினர் ஆக்கிரமித்துள்ளதாகக் கூறி போராட்டம் செய்து வருகின்றனர். இவர்களது பிரச்சினைகளைக் கேட்டறிவதற்காக வருகை தந்த மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் முசலிப் பிரதேச செயலாளர் ஆகியோர் முஸ்லிம் மக்களின் போராட்டத்தைக் கண்டு கொள்ளாமல் அவர்களைக் கடந்து முள்ளிக்குளம் மக்களை மாத்திரம் சந்தித்து விட்டுச் சென்றுள்ளனர். பிரபலமான தமிழ் தனியார் தொலைக்காட்சி ஒன்றும் இனத்துவேசத்தைக் கக்கும் வகையில் தமக்கு எதிராக செயற்பட்டு வருவதாக இப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

அந்தவகையில், 1990ம் ஆண்டு இம்மக்கள் வெளியேற்றப்பட முன்னர் வாழ்ந்த வாழ்விடங்களும் வயல் நிலங்களும் இம்மக்களுக்கு வழங்கப்படுவதோடு, 2012 மற்றும் 2017ம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட வர்த்தமானியை உடனடியாக ரத்துச் செய்ய வேண்டும் என்பதே இம்மக்களின் கோரிக்கையாகக் காணப்படுகின்றது. (பக்.14)

## இந்த நாட்டில் மனிதர்கள் வாழ்வதற்கு இடம் இல்லையா?



அலிகான்- ஓய்வு பெற்ற ஆசிரியர்

வட மாகாணத்தில் இருக்கின்ற 36 பிரதேச செயலகங்களில் முசலிப் பிரதேச செயலகம் அதிகப்படியான முஸ்லிம்கள் வாழும் பிரதேசமாகும். 1990ம் ஆண்டு விடுதலைப் புலிகளால் விரட்டியடிக்கப்படுவதற்கு முன்னர் இப் பிரதேச மக்கள். விவசாயம், கடற்தொழில், மேட்டு நிலப் பயிர்ச் செய்கை, கால்நடை வளர்ப்பு போன்ற தொழில்களையே செய்து வந்தனர்.

இங்குள்ள காணிகள் குடியிருப்புப் பிரதேசம், விவசாயப் பிரதேசம், மேட்டு நிலப் பயிர்ச் செய்கைப் பிரதேசம், கால்நடைகள் வளர்ப்புப் பிரதேசம் என பிரிக்கப்பட்டு அவற்றை மக்கள் பயன்படுத்தி வந்தனர். 1990 ஆம் விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்ட நாம் 2009 இல் எமது இடங்களுக்கு மீண்டும் வந்து பார்த்த போது எமது காணிகள் காடுகளாகக் காட்சியளித்தன. எனவே எமது காணிகளை சுத்தப்படுத்த முயன்ற போது வனப்பாதுகாப்பு அதிகாரிகள் எம்மிடம் வந்து ஆறு அடிகளுக்கு மேல் வளர்ந்துள்ள மரங்களை வெட்டினால் தண்டனைக்குரிய குற்றம் என எச்சரித்தனர்.

அதன்பின் அமைச்சர் ரிஷாத் பதியுத்தீன் மற்றும் எமது பிரதேச செயலாளர் ஆகியோரின் முயற்சியினால் 500 மீற்றர் அகலத்திற்கு எமக்கான காணிகள் வழங்கப்பட்டன. எமக்கு வழங்கப்பட்ட இந்தக் காணிகள் அமைந்துள்ள இடத்திலிருந்து 6 கிலோ மீற்றர்கள் தூரத்தில் வியாயடிக்குளம் இருக்கின்றது. இந்தக் குளத்திலிருந்துதான் எமது பிரதேசத்துக்கு தண்ணீர் கிடைக்கின்றது.

தற்போது எமது வாழ்வாதாரத் தேவையை பூர்த்தி செய்வதில் பெரும் பங்கை வகிக்கின்ற இந்தக் குளமும் வர்த்தமானியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எமது பிரச்சினைகளை அரசாங்கத்திடம் எடுத்துச் சென்றால் அதற்கு அவர்கள் அளிக்கும் பதில் வன விலங்குகள் வாழ இடம் வேண்டுமாம். அப்படியென்றால் இந்த நாட்டில் மனிதர்கள் வாழ்வதற்கு இடம் இல்லையா என அரசாங்கத்திடம் கேட்க விரும்புகிறோம்.

## எமது நிலங்களை கடற்படையினர் அனுபவிக்கின்றனர்

- ஜௌபர் மௌலவி

மறிச்சிக்கட்டி பிரதேசத்தில் நாம் மூன்று பரம்பரையாக வாழ்ந்து வருகின்றோம். இன்று எனது குடும்பத்துக்கு சொந்தமான சுமார் 50 ஏக்கர் காணியில் கடற்படையினர் தென்னைத் தோட்டம் செய்து வருவதுடன் எமது தோட்டத்திலுள்ள தேங்காய்களை அவர்களே பறித்து அனுபவித்தும் வருகின்றனர். எமது காணியினுள் நாம் கால் வைத்தால் 25000 ருபாய்கள் தண்டம் அறவிடப்படும் எனவும் எச்சரிக்கின்றனர். நாம் நம்பிக்கை வைத்து ஆட்சிக்கு கொண்டு வந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்திலும் எமது நிலைமை இதுவாகத்தான் இருக்கின்றது.

கடந்த மாதம் 24ம் திகதி வில்பத்து சரணாலயத்துக்கு வடக்கே அமைந்துள்ள முசலிப் பிரதேச முஸ்லிம்களின் பூர்வீகக் காணிகளை பாதுகாக்கப்பட்ட வனமாகப் பிரகடனப்படுத்தி வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியில் இந்த நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கையெழுத்திட்டமைக்கு எதிராக மறிச்சிக்கட்டி தக்கியா பள்ளிவாயலுக்கு முன்னால் சத்தியாக் கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற முசலிப் பிரதேச மக்கள் தமது உணர்வுகளைத்தான் எம்மோடு பகிர்ந்து கொண்டனர்.

மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள முசலி பிரதேச செயலகப் பிரிவானது வடக்கு மாகாணத்தில் அதிகப்படியான முஸ்லிம்கள் வாழும் ஒரு பிரதேசமாகும். முசலிப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 28 கிராமங்களில் 22 முஸ்லிம் கிராமங்கள் உள்ளடங்குகின்றன. இங்கு 7900க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 27600 பேர் வசித்து வருகின்றனர். இவ்வாறான நிலையில் வில்பத்து தேசிய சரணாலயத்துக்கு வடக்கே அமைந்துள்ள மாவில்லு, வெப்பல், மறிச்சிக்கட்டி, விளாத்திக்குளம், பெரிய முறிப்பு ஆகிய பிரதேசங்கள் இணைக்கப்பட்டு வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் மாவில்லு பாதுகாக்கப்பட்ட வனம் எனப் பிரகடனப்படுத்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு கடந்த 24 ஆம் திகதி ஜனாதிபதி கையொப்பமிட்டு ஒப்புதல் அளித்திருந்தார்.

இது தொடர்பில் ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் 14 நாட்களுக்குள் அறிவிக்குமாறு பிரதேச செயலகத்துக்கு மார்ச் 13 ஆம் திகதி மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி அமைச்சிடம் இருந்து கடிதம் அனுப்பப்பட்ட நிலையில், அக்கடிதம் மக்களுக்கு கையளிக்கப்படவில்லை. அவ்வாறு இருந்தாலும் மார்ச் 27 ஆம் திகதியே ஜனாதி [illegible]

மானவர்களாக சித்தரிப்பது எந்தவகையிலும் நியாயமாக அமைய மாட்டாது.

உண்மையிலேயே 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்ததிலிருந்து முசலிப் பிரதேச மக்களின் காணிகளை வில்பத்து பாதுகாக்கப்பட்ட வனத்தோடு இணைப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்று வந்தாலும் சிறுபான்மை மக்களின் ஏகோபித்த ஆதரவோடு ஆட்சிக்கு வந்த இந்த நல்லாட்சி அரசாங்கத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் கையெழுத்தோடு அது வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டமையானது மிகவும் வருந்தத்தக்க ஒரு விடயமாகும்.

1990 ஆம் ஆண்டு தமது சொந்த இடங்களில் இருந்து புலிப் பயங்கரவாதிகளால் துரத்தியடிக்கப்பட்ட வடக்கு முஸ்லிம்கள் மீளக்குடியேற வரும்போது இந்த அரசாங்கமும் இன்று அவர்களை துரத்தியடிக்கும் செயற்பாட்டில் இறங்கியுள்ளது. இவ்வாறு 20 வருடங்களுக்கு மேலாக இன்னல்களோடும் துயரங்களோடும் அகதிகளாக வாழ்ந்து வந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியேற விடாமல் இந்த நாட்டின் துரோகிகளாகவும் இயற்கையின் விரோதிகளாகவும் காட்டமுனைவது நீதியான ஒரு விடயமல்ல.

குறிப்பாக வில்பத்து பிரதேசத்தை சூழவுள்ள பகுதிகளில் முஸ்லிம்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதற்கு நிறைய ஆதாரங்கள் காணப்படுகின்றன. தற்போது வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் எல்லையிடப்பட்டுள்ள பகுதியில் மையவாடியொன்றும் உள்ளடங்கி இருக்கின்றது. அதில் அடையாளத்திற்காக நடப்பட்டிருக்கும் பலகை 1980 இல் நிறுவப்பட்டுள்ளது என்பதை தெளிவாகக் கண்டுகொள்ள முடியும்.

அதேபோன்று அங்கு வசிக்கும் சிலரிடம் 1902, 1905 மற்றும் 1924 ஆம் ஆண்டுகளில் ஆங்கிலேய ஆட்சிக் காலத்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீன் நிலமும் சமூகமும்

அறபு மூலம்: கலாநிதி முஷ்ஸின் முஹம்மத் ஸாலிஷ்
தமிழில் யூ.கே. றமீஸ் (விரிவுரையாளர் பாதிஹ்)



1948 ஆம் ஆண்டு முதல் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனுக்குள்ளே வாழ்கின்ற பலஸ்தீனர்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள். கீழ்வரும் விதமாக அவற்றைப் பட்டியலிடலாம்.

- மிக அநீதமான முறையில் சட்டங்களை இயற்றி தமது பூமியிலே அந்நியர்களைப் போன்று இரண்டாம் தர பிரஜைகளாக பலஸ்தீனர்களை பிரித்து வைத்துள்ளமை.
- கடுமையான பாதுகாப்புக் கெடுபிடிகள், பொருளாதாரத் தடைகள், கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி, அவர்களது பூமியை விட்டும் வெளியேறச் செய்தல்.
- அவர்களது நிலங்களையும், வக்ப் நிலங்களையும் அரசுடமையாக்குதல்.
- பலஸ்தீன், அரபு, இஸ்லாமிய மத, கலாசார தனித்துவ அடையாளங்களை சிதைக்கும் முயற்சிகள்.
- இவ்வகையான அரசியலை நடைமுறைப் படுத்துவதற்காக வேண்டி இராணுவ ஆட்சியின் கீழ் பலஸ்தீனர்களை அடிபணிய வைத்துள்ளார்கள். பலஸ்தீன் கிராமங்களை ஒன்றுடன் ஒன்று தொடர்பற்ற விதமாகப் பிரித்து வைத்துள்ளார்கள். அவை மூடப்பட்ட பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அனுமதியின்றி அங்கு யாராலும் நுழையவோ அங்கிருந்து வெளியேறவோ முடியாது.

உதாரணமாக இஸ்ரேல் பாராளுமன்றமான நெசட்டின் உறுப்பினரான கம்யூனிசவாதியான இமீல் ஹபீபி கூட நெசட் அமர்வுகளில் கலந்து கொள்வதற்காக விசேட அனுமதி பெற்றே தனது ஊரை விட்டு புறப்பட முடிந்தது.

1966 முதல் தொடர்ந்து இராணுவ ஆட்சியின் கீழ் பலஸ்தீனர்கள் இருக்கின்றார்கள். கடுமையான கண்காணிப்பின் கீழ்தான் அவர்கள் வாழ்கின்றார்கள். 1948 பூமிகளில் வாழ்கின்றவர்கள் மீது மிக மோசமான அநீதியான சட்டங்கள் பிரயோகிக்கப்படுகிறது.

இஸ்ரேலின் முன்னாள் நீதியமைச்சரான யாகூப் சாபிரா இப்படி கூறுகிறார். ''நாஸிஸ ஜெர்மனியில் கூட இத்தகைய சட்டங்கள் காணப்படவில்லை. ஆக்கிரமிக்கப்பட்ட இடங்களில் உள்ள இத்தகைய சட்டங்களை இங்கு மாத்திரமே காணலாம். பூமியில் நீதியை நிலைநாட்டுவதற்கான அடிப்படை கீழ்க் கட்டமைப்புகளை பாதுகாப்புச் சட்டங்கள் உடைத்தெறிகிறது என்பதனை உலகிற்கு சொல்வது எமது கடமையாகும்'' என்கிறார்.

(கிலிபட் ரைட் பககம் 85, காடியன் பத்திரிகை, மென்சஸ்டர், 14.11.1973)

1948 பிரதேசவாசிகளுடன் இஸ்ரேல் மிகவும் எதிர்ப்புணர்வுகளுடனும் நடந்துகொள்கின்றார்கள். இஸ்ரேல் பூமியில் தவறி வந்தவர்களாகவே அவர்களை இஸ்ரேல் கருதுகிறது. 1960-1963 வரை இஸ்ரேல் பிரதமரின் ஆலோசகராகக் கடமையாற்றிய யூரி லோப்ரானி 'இஸ்ரேலில் உள்ள பலஸ்தீனர்கள்தான் இஸ்ரேலின் எப்போதைக்குமான எதிரிகள்' என்கிறார்.

(கிலிபட் ரைட் பககம் 89, காடியன் பத்திரிகை, மென்சஸ்டர், 14.01.1973)

சியோனிச இஸ்ரேலில் உண்மையான நீதி நாட்டின் குடிமக்களுக்கு கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், அவர்கள் பலஸ்தீனை யூதர்களுக்கான நாடு என்று பிரகடனப்படுத்தி விட்டார்கள். ஒரு யூதன் அங்கு வந்து குடியேறும்போது அனைத்து உரிமைகளும் வழங்கப்படுகிறது. உயர் பதவிகளை கூட வகிப்பதற்கு அவனுக்கு முடிகின்றது. ஆனால், ஆயிரக்கணக்கான வருடங்களாக அங்கிருந்த அறபிகளுக்கு இவ்வுரிமை கிடைக்கின்றதா?

சியோனிஸ்டுகள் மிக கவனமாக, எவ்வித ஊடக அறிக்கைகளுமின்றி, திட்டமிட்ட முறையில் படிப்படியாக சட்டபூர்வ நில உரிமையாளர்களிடமிருந்து நிலங்களை கொள்ளையடிக்கின்றனர். ஒன்றில் அங்கிருந்து விரட்டிவிடுகின்றனர் அல்லது நிர்மூலமாக்கி அழித்து விடுகின்றனர். இத்தகைய அநீதிகளை நியாயப்படுத்துவதற்காக வேண்டி 34 சட்டங்களை அமைத்துள்ளனர்.

உதாரணமாக, நிலத்தை கையகப்படுத்தும் சட்டம், நிலத்தை விட்டுச் சென்றவர்களின் சொத்துரிமைச் சட்டம், சமூக நலனுக்காக நிலத்தை அரசுடமைப்படுத்தும் சட்டம்... இப்படி பல அநீதியான சட்டங்கள் காணப்படுகின்றன. 20ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் பலஸ்தீனர்களின் 97 வீத நிலம் இப்படித்தான் இஸ்ரேலினால் கையகப்படுத்தப்பட்டது.

(அல் முஜ்தமஉல் அரபி பீ இஸ்ராஈல், இப்ராஹீம் அபூ ஜாபிர், பக்கம் 427,459)

1945 களில் ஒரு பலஸ்தீன தனிமனிதனிடம் 19 தோனம் நிலம் காணப்பட்டது. (ஒரு தோனம் = ஒரு சதுர கிலோ மீட்டர்) 1950 களில் இது 3.4 ஆக குறைந்தது. 1981 களில் 0.84 ஆக வீழ்ச்சியடைந்தது. இத்தகைய சட்டங்களுக்கு எதிராக பலஸ்தீனர்கள் 1945 களில் கிளர்ந்தெழுந்தார்கள். இதனையே 'யௌமுல் அர்ள்' என்று அழைப்பார்கள். 1976 மார்ச் 30 இல் இந்த இன்திபாழா (மக்கள் எழுச்சி) நடைபெற்றது. 6 பலஸ்தீனர்கள் இதில் ஷஹீதானர்கள்.

(ஈலியா ஸூரைக், அவ்ழாஉல் பலஸ்தீனிய்யீன் பீ இஸ்ராஈல், பக்கம்-338)

கடுமையான மோசமான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் நிலையிலும் பலஸ்தீனர்கள் தமது உரிமையை விட்டுக் கொடுக்காது இருந்த காரணம் அகதிகள் படும் அவல நிலையை காண்பதனாலாகும்.

இப்பிராந்தியத்தில் பலஸ்தீனர்களின் வளர்ச்சி விகிதம் அதிகமாக இருக்கின்ற போதிலும் 50, 60 களில் யூதர்களின் வளர்ச்சி விகிதம் அதிகமாகவே காணப்பட்டது. அதிகமான யூதர்கள் உலகின் பல பாகங்களில் இருந்து இஸ்ரேலை நோக்கி வந்தமையே இதற்கு காரணமாகும். குறிப்பாக 80 களில் சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியை தொடர்ந்து இது அதிகரித்தது. வருடாந்த வளர்ச்சி வீதம் 3.4 வீதமாக இருந்தது.

2012 களில் இவர்களது எண்ணிக்கை 1,239,000 ஆக மாறியுள்ளது. இது இன்று மத ரீதியாக நோக்கினால் அஹ்லுஸ் ஸுன்னாக்கள் 77% மாகவும் துரூஸிகள் 10% மாகவும் கிறிஸ்தவர்கள் 13% மாகவும் காணப்படுகின்றார்கள். 1948 களில் 20% அளவில் காணப்பட்ட அவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளுக்கு புலம்பெயர்ந்துவிட்டார்கள்.


(அல் முஜ்தமஉல் அரபி பீ இஸ்ராஈல், இப்ராஹீம் அபூ ஜாபிர், பக்கம் 427)

மத்திய கிழக்கில் ஒரேயொரு ஜனநாயக சக்தியாகவும், தமது ஆட்சியின் கீழ் பலஸ்தீனர்கள் நிம்மதியாக இருப்பதாகவும், அனைத்து வகை குடியியல் உரிமைகளையும் பெற்று அரசியல் சுதந்திரத்துடன் இருப்பதாகவும் அவர்களது பொருளாதார நிலை சீராக இருப்பது போன்றும் ஒரு பிரமையை இஸ்ரேல் ஏற்படுத்தியுள்ளது.

ஆனால், உண்மை நிலவரம் என்ன? பலஸ்தீனர்களின் நிலம் வன்முறையின் மூலம் ஆக்கிரமிக்கப்பட்டது. அங்கிருந்த பெரும்பான்மை குடிமக்கள் விரட்டப்பட்டனர். அவர்கள் மீள் குடியேற அனுமதிக்கப்படவில்லை. ஆனால், எந்த நாட்டைச் சேர்ந்த யூதனும் எந்த நேரத்திலும் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனில் குடியேற அனுமதிக்கப்படுகிறான். நில உரிமை அவனுக்கு வழங்கப்படுகிறது. அரசியல் உரிமைகளை பெறுகிறான். நிலத்தின் உண்மை உரிமையாளனான பலஸ்தீனர்கள் அந்நியமானவர்களாகவே உள்ளார்கள். ஒரு எதிரியாகவே நோக்கப்படுகிறான். எந்நேரத்திலும் அவன் விரட்டப்பட முடியும். (தொடரும்)

---

# ஷாமா:




## அக்குரணை முதல் ஜெனீவா வரை...

அக்குறணையே பிறப்பிடமாக கொண்ட செல்வி ஷாமா (Faara) முயிஸ் வஹாப்தீன் ஐக்கிய நாடுகள் சபையில் உரை நிகழ்த்தி இலங்கை முஸ்லிம்களுக்கு பெருமை சேர்த்துள்ளார்.

அக்குறனையை பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Collège Saint Exupéry கல்வி கற்று வரும் ஷாமா முயிஸ், ஜெனீவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையில் 34 ஆவது மனித உரிமை மாநாட்டில் அமர்வில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் உரிமைகள் பாதுகாப்பு அமைப்பின் ஏற்பாட்டில் 17.03.2017 அன்று நடைபெற்ற கருத்துச் சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடும் உரிமை உபமாநாட்டில் சிறப்பாக உரையாற்றினார்.

'காஷ்மீர் மற்றும் பலஸ்தீன சிறுவர்களின் இன்றைய நிலை' என்ற தலைப்பில் உரை நிகழ்த்திய ஷமா முயிஸ், '762 ஜெருசலத்தை சேர்ந்த பிள்ளைகளின் கைது, காஷ்மீரின் 5 வயது குழந்தை கின்ஸா, 14 வயது அமீன் ஆகியோரின் உயிர் காவுகை உட்பட பல்வேறு மனித உரிமை மீறல்கள், சிறுவர்களுக்கு எதிரான கண்மூடித்தனமான வெறியாட்டங்கள்' குறித்து இதன்போது அவர் உரை நிகழ்த்தினார்.

'மனித உரிமைகள் தொடர்பான வழக்கறிஞர்' கனவுடன் பயணிக்கும் 14 வயது சிறுமியான இவர், நால்வரில் மூத்தவர்.

தனது LKG மற்றும் UKG முன்பள்ளிக் கல்வியை கண்டி லெக்சிகன் சர்வதேச பாடசாலையில் தொடர்ந்த ஷாமா, தரம் 5 வரை கண்டி ஸசெக்ஸ் சர்வதேச பாடசாலையில் கற்றார். தனது தந்தையின் தொழில் நிமித்தம் வெளிநாட்டுக்குக் குடிபெயர்ந்ததால், கல்வியை சுவிட்சர்லாந்தில் அமைந்திருக்கும் École du Balavista பாடசாலையில்தொடர்ந்தார். தற்போது பிரான்ஸ் நாட்டின் College saint Exupery இல் கற்று வருகின்றார். இலங்கையின் க.பொ.த. சாதாரண தர பரீட்சையை ஒத்த "BREVET" எனும் பரீட்சையை 2018 இல் எழுதவுள்ளார்.

ஷாமா முயிஸினால் ஐ.நா. வில் ஆற்றிய உரைக்குக் கிடைத்த பல ஆயிரக்கணக்கான பாராட்டுகளுள் ஐ.நா.வுக்கான சிறுபான்மை விவகாரங்களுக்கான விசேட அறிக்கையாளர் ரீட்டா ஐசாக் அவர்களின் பாராட்டுக்கள் விசேடமானது.

தனது பாடசாலை கல்விப் படிப்பில் முதல் நிலை மாணவியாக தனது தனது திறமையை காட்டி வரும் இவர் மனித உரிமைகள் செயற்பாடுகளிலும், வாசிப்பு, எழுத்துத் துறைகளில் மிக ஆர்வம் கொண்டு விளங்குகிறார். (பிரெஞ்சு மொழியில் கடந்த 4 ஆண்டுகளாகக் கற்று வரும் ஷாமா, பிரெஞ்சு மாணவர்களையும் பின்தள்ளி வகுப்பில் முதலிடம் வருவது குறிப்பிடத்தக்கது.) ஷாமா ஆங்கில கவிதைகளை எழுதுவதில் வல்லவர் என்கின்றார் தந்தை.

தேசிய ரீதியான "BIG CHALLENGES" ஆங்கில தின போட்டிகளில் கடந்த ஆண்டு பங்கேற்ற 2781 மாணவர்களுள் 4 ஆம் இடத்தை தனதாக்கிய ஷாமா, பிராந்திய ரீதியான பாடசாலைகளுக்கிடையிலான பாராளுமன்ற உறுப்[illegible]

**சர்வதேச அரங்கில் உங்களைப் பேசத் தூண்டியது என்று நான் கேட்டதற்கு,**

''சிரியா, பலஸ்தீன், காஷ்மீர், நாடுகளில் இருந்து வந்த அகதி மாணவிகள் எனது வகுப்புத் தோழிகளாக என்னுடன் கற்கின்றார்கள். அவர்கள் வாழ்ந்த சுகபோக வாழ்க்கையையும் இன்னல்களின் பின் அவர்கள் அடைந்த துயரங்கள், துன்பங்களை வகுப்பின் ஒய்வு நேரங்களில் என்னோடும் எமது வகுப்பில் உள்ளவர்களுடனும் பகிர்ந்து கொள்வார்கள்.

மேலும், எமது வகுப்பில் பல நாட்டு, பல மதங்களை பின்பற்றும் மாணவிகள் கற்பதனால், முஸ்லிம் மாணவிகளான எமக்குள் மாத்திரம் சற்று அதிகமாகவே வல்லாதிக்க ஒடுக்கு எண்ணங்களுக்கு எதிராக பல விடயங்களை கலந்துரையாடுவோம். கல்லூரியில் அன்புத் தோழிகள் பகிரும் துயரங்களை எனது வீட்டில் வந்து நான் கலந்துரையாடுவேன். இதனாலோ என்னவோ, எனது தந்தை கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் என்று நினைக்கின்றேன், அவர் செயற்படும் மனித உரிமை அமைப்பின் மூலம் ஜெனீவாவில் உள்ள ஐ.நா. அமைப்புக்கு ஒரு செயலமர்வுக்கு என்னை அழைத்துச சென்றார். அன்றிலிருந்து, ஜனநாயக, மனித உரிமைகள், வல்லாதிக்கம் போன்ற விடயங்களை கற்கவும், செயற்படவும் வேண்டும் என்ற எண்ணம் என்னில் உருவாகியது.

அன்றிலிருந்து, இது சம்பந்தமான நூற்களை வாசிக்கவும், எனது தந்தையுடன் இணைந்து செயற்படவும் ஆரம்பித்தேன். அந்த அடிப்படையில் பலஸ்தீனத்துக்கு அடுத்த படியாக அரச வன்முறை அதிபயங்கரமாகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் காஷ்மீர் பிராந்தியம் பற்றி செயற்படும் அமைப்புடன் கடந்த பல ஐ.நா. அமர்வுகளில் கலந்து கொண்டேன்'' என்றார்.

பிரெஞ்சு, தமிழ், ஆங்கிலம்சரளமாகப் பேசும் ஷாமா, சற்று சிங்களமும் பேசுவார். அல்-குர்ஆன் முழுமையாக தமாம் செய்துவிட்டு தற்போது மனனமிட்டு வருகின்றார். மேலும், ஜேர்மனி, அரபுமொழிகளை கற்று வருகின்றார். இணையத்தில் மார்க்க ரீதியான வகுப்புக்களிலும் பங்கேற்கின்றார்.

கூடைப்பந்து மற்றும் பெட்மிண்டன் போட்டிகளிலும் பாடசாலை ரீதியில் ஜொலிக்கும் ஷாமாவிற்கு பெரிதும் உறுதுணையாக இவரது தந்தை முயீஸ் வஹாப்தீன் செயற்படுகின்றார்.

தந்தை முயீஸ் வஹாப்தீன் சுயதொழிலுக்கு அப்பால், தற்சமயம் ஜெனீவாவிலுள்ள ஐ.நா. அலுவலகத்தில் பகுதி நேர வேலை பார்ப்பவர். அவரும் ஜெனீவாவின் பல்வேறு அமர்வுகளில் பங்கேற்று வருகின்றார்.

செல்வி ஷாமா அக்குறணையின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் அல் ஹாஜ் வாஹாப்தீன் (வஹாப் மாஸ்டர்) மற்றும் அக்குறணையின் பிரபல சமூக சேவையாளர் அல்ஹாஜ் மல்ஜூத்யினதும் பேத்தியும் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது. ஊக்கமளிப்போடு, உருதுணை நல்கும் தந்தைக்கும், தந்தையின் தந்தைக்கும் ஷாமா உருக்கமாக நன்றிகளை தெரிவித்திருந்தார்.

இலங்கை முஸ்லிம் பெண்களை பொறுத்தவரை அதிகபட்சம் தேசிய மட்ட போட்டிகள் வரை செல்வதே அரிதாக உள்ள நிலையில், சர்வதேச ரீதியிலான ஷாமாவின் இந்த நகர்வு இளம் பெண்களுக்கு ஒரு முன்மாதிரி என்றே கூறலாம்.

இறுதியாக, சக மாணவிகளுக்கு கூறும் செய்தி என்னவென்று கேட்டதற்கு,

''பெண்கள் கற்பதன் மூலம், இஸ்லாத்தில் பெண் என்றாலே அவமதிக்கின்ற, புறக்கணிக்கின்ற நிலை என்று வல்லாதிக்க சக்திகளாலும் மற்றும் இஸ்லாத்துக்கு எதிரானவர்களாலும் செய்யப்படும் குற்றச்சாட்டை தகர்த்து, திட நம்பிக்கையுடன் இஸ்லாமிய ஒழுக்க நெறிகளை பேணி, கூட்டாக இணைந்து செயற்பட கூடியதுமான ஆரோக்கியமான சூழலை உருவாக்க முடியும்.. உலகின் முஸ்லிம்களுக்கு எதிராக வல்லாதிக்க சக்திகளுக்கு எதிரான எனது நம்பிக்கையான இந்த பயணத்தில் ஆர்வமுள்ளவர்கள் இணைந்தும் கொள்ளலாம்'' என்றார் எதிர்காலத்தில் ஒரு மனித உரிமைகள் தொடர்பான ஐ.நாவின் அமர்வுகளில் தொடராக ஒடுக்குமுறைக்கு எதிராக குரல் கொடுக்கக் காத்திருக்கும் ஷாமா.

அவரின் சிறந்த எதிர்காலத்திற்காக வாழ்த்துவதோடு, பிரார்த்திக்கின்றோம்!

- அனஸ் அப்பாஸ் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேங்கிப் போன குட்டையில் விதை போல் விழுந்த கல்



முஹம்மத் பகீஹுத்தீன்

கடந்த 2017 மார்ச் 29ல் அம்மானில் நடைபெற்று முடிந்த அறபு லீக் உச்சி மாநாட்டை மையமாக வைத்து லண்டனில் அமைந்துள்ள சகோதரத்துவ அமைப்பின் தலைமை நிருவாக காரியாலயம் ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தது. அதற்கு மறுப்பாக அதே அமைப்பின் எகிப்திலுள்ள தலைமையகம் இன்னொரு அறிக்கையை வெளியிட்டிருந்தது.

இரண்டு அறிக்கைகளுமே முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பின் சிந்தனைப் பாரம்பரியத்திற்கும் அதன் ஒழுக்க வரம்புகளுக்கும் புறம்பான வகையில் அமைந்திருந்தன. எனவே அமைப்பின் உயர் மட்ட சபை அங்கத்தவர்களும் மூத்த இஸ்லாமியவாதிகளும் ஏனைய புத்திஜீவிகளும் இரண்டு அறிக்கைகளிலும் பொதிந்துள்ள உள்ளடக்கம் குறித்து காரசாரமான விமர்சனங் களை சமூக வலைத் தளங்கள் வழியாக பதிவு செய்தனர்.

இந்த சந்தர்ப்பத்தில் முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பு பற்றி வெளிப்படையாக பேசுவதற்கு பலர் தயங்கிய விடயங்களை அஸாம் தமீமி அவர்கள் மிகவும் வெளிப்படையாக தனக்கே உரிய தைரியத்தோடு பேசியுள்ளார்கள். அவர் அமைப்பில் உள்ள பிரச்சினையின் மையப் புள்ளியை தொட்டு பல காத்திரமான கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

அஸாம் தமீமி (பிறப்பு 1955) பாலஸ்தீனத்தை பூர்வீகமாகக் கொண்ட ஒரு பிரிட்டிஷ் ஊடகவியலாளர், கல்வியியலாளர் மற்றும் இஸ்லாமிய அரசியல் சிந்தனையாளர். அவர் தற்போது 'அல்ஹிவார்' டிவி சேனல் தலைவர் பதவியை வகித்து வருகின்றார். தமீமி அவர்கள் லண்டனை தளமாக கொண்டு இயங்கும் அரசியல் சிந்தனை மையத்தின் பணிப்பாளராகவும் கடமையாற்றுகிறார்.

சர்வதேச இஸ்லாமிய அழைப்பு இயக்கங்களின் தாய் என வர்ணிக்கப்படும் முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பின் புரட்சிக்குப் பிந்திய போக்குகள் பற்றிய தமீமியின் விமர்சனம் அருமையானது. அவர் துணிவோடு முன்வைத்துள்ள காத்திரமான விமர்சனங்கள் நமது நாட்டிலுள்ள அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா போன்ற சிவில் சமூக நிறுவனங்கள், அரபுக் கல்லூரிகள், தஃவா அமைப்புக்கள், சமூக சேவை நிறுவனங்கள் போன்ற சகல அமைப்புக்களுக்கும் மிகுந்த கவனம் கொடுத்து படிக்க வேண்டிய அரிய உபதேசங்களாகும்.

எனவே தமீமியின் உபதேசங்கள் ஒரு குறித்த அமைப்பை மாத்திரம் விழித்துப் பேசிய விடயமாக பார்க்காமல் நமக்கும் சேர்த்துத்தான் கூறியுள்ளார் என்ற உணர்வோடு நோக்கும் போது மாற்றம் நோக்கி பயணிக்கலாம் என்ற நம்பிக்கை வருகிறது.

முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பின் ''அம்மான்'' உச்சி மாநாடு பற்றிய அறிக்கையை அவமானம் தரும் அறிக்கையாக ஏன் பார்க்கிறீர்கள் என்று தமீமியிடம் அல்ஜஸீரா டி.வி வினவியபோது பல உண்மைகளை அவர் வெளிச்சத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

உண்மையில் சகோதரத்துவ அமைப்பின் லண்டன் காரியாலயம் வெளியிட்டுள்ள உச்சி மாநாடு பற்றிய அறிக்கையானது அமைப்பின் உறுப்பினர்களையும் இஸ்லாமியவாதிகளையும் முஸ்லிம சமூகத்தையும் தலைகுனிய வைத்துள்ளது. .தமீமியின் பார்வையில் அறிக்கையின் உள்ளடக்கம், மொழிப்பிரயோகம், முன்வைப்பு யாவுமே சர்வதேச தஃவா அமைப்பொன்றுக்கு பொருத்தமற்ற அறிக்கையாகும். இது ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்திற்கும் இழுக்கையும் இழிவையும் ஏற்படுத்தும் ஒரு மட்டரகமான அறிக்கையாகவே நான் பார்க்கின்றேன் என அவர் விமர்சித்துள்ளார்.

மட்டரகமானது என்று வர்ணிக்கும் அளவிற்கு அதில் என்னதான் உள்ளது என்று அவரிடம் வினவியபோது, அதிர்ச்சி தரும் பல தகவல்களை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

1945 ஆம் ஆண்டு தொடக்கம் இயங்கிவரும் அறபு லீக் உச்சி மாநாடுகள் இது வரை முஸ்லிம்களுக்கோ அல்லது அறபுலகிற்கோ நன்மை பயக்கும் எதுவும் செய்தது கிடையாது. இன்றுவரை உருப்படியாக எதனையும் சாதிக்கவில்லை என்பதே கசப்பான உண்மையாகும். அது இருந்தால் என்ன இல்லாவிட்டால் என்ன என்ற நிலையில் உள்ள அந்த மாநாட்டை யாரும் ஒரு பொருட்டாகக் கருதுவதுமில்லை.

இந்நிலையில் லண்டன் அறிக்கை இந்த உச்சி மாநாட்டிற்கு தேவையற்ற ஒரு பெறுமானத்தை வழங்குகிறது. அந்த அறிக்கை முர்ஸியின் ஆட்சியை சதி செய்து கவிழ்த்திய சதிகாரக் கும்பல்களை சங்கைக்குரிய தலைவர்களாக மதித்து பாராட்டிப் பேசியது. சுமார் இருபது நாடுகள் கலந்து கொண்ட அந்த மாநாட்டில் எகிப்தின் சதிகார நாயகன் ஸீஸியும் கலந்து கொண்டார்.

ராபிஆ மக்கள் புரட்சியின்போது மூவாயிரம் பேரை ஒரே தினத்தில் சுட்டெரித்து கழிவகற்றும் வண்டியில் சுமந்து சென்று புதைக்கும் ஈனச் செயலுக்கு உடந்தையாக இருந்த மன்னர்கள் அனைவரும் அதில் பங்குபற்றினர். அவர்கள் அத்தனை பேரும் உத்தமர்கள் என்று பேசியது அந்த அறிக்கை. உற்றார் உறவினர்களை இழந்து வாழும் ஆயிரக் கணக்கான சொந்தங்கள் இதனை எப்படி சகித்துக் கொள்வார்கள்.

'' சியோனிச ஆக்கிரமிப்பை அங்கீகரிக்கும் பாணியில் முதல் தடவையாக 'இஸ்ரேல் நாடு' எனும் வாசகத்தை இஃவான்களின் அறிக்கை அறிமுகம் செய்தது. இது ஒரு வரலாற்றுத் துரோக வார்த்தையாகவே பலரும் பார்க்கின்றனர். ஒட்டு மொத்த உலக முஸ்லிம் சமூகத்தின் ஆன்மாவாகவே பலஸ்தீன் பூமி மதிக்கப்படுகிறது. முஸ்லிம்களின் புனித சொத்தை வன்முறையில் அபகரித்த சியோனிச சக்திகளுக்கு எதிராக கடைசி மூச்சு இருக்கும் வரை போராடும் மண்ணின் மைந்தர்களுக்கு இது பெருத்த ஏமாற்றமாக உள்ளது.

அதன் மொழிநடை கூட அரசியல் ஞானமில்லாத பாமரத்தனமான போக்கில் அமைந்துள்ளது. ஒரு பாரிய ஜமாஅத் இப்படியானதொரு அறிக்கை விடுவது முதலில் அந்த அமைப்புக்கு இழுக்கு. அவ்வாறே சர்வதேச இஸ்லாமியவாதிகளுக்கு அது ஒரு பெருத்த அவமானம்.

அறிக்கையின் தரம், மொழிநடை, பலவீனமான அரசியல் பார்வை, முன்னுக்குப் பின் உள்ள முரண்பாடுகள் என்பன அதன் எழுத்தில் பிரதிபலிக்கின்றன. அவையாவும் இஃவான்களின் தஃவா சிந்தனைக்கும் வரலாற்றுப் பாரம்பரிய வழிமுறைக்கும் முற்றிலும் முரணாகவே உள்ளது. எனவே இது ஒட்டு மொத்த முஸ்லிம்களினதும் மனதைப் புண்படுத்தும் மட்டரகமான அறிக்கையாகும்.

இப்படி பல திக்கிலிருந்தும் கடுமையான விமர்சனம் மழை பொழிவது போல் வரத் தொடங்கியதும், லண்டன் காரியாலயம் அவசரமாக மன்னிப்புக் கோரியது. இந்த மன்னிப்பும் அழுத்தத்தின் காரணமாக வந்ததே. எனவே மன்னிப்புக்கு அப்பால் ஜனநாயக ஒழுங்குகளைப் பேணி வேறு பல எட்டுக்களை கட்டாயம் எடுக்க வேண்டும் என்ற கருத்தை தமீமி முன்வைத்துள்ளார்.

இங்கு இன்னொரு உண்மையையும் குறிப்பிடுவது பொருத்தமாகும். அஸாம் தமீமி சதிப்புரட்சிக்குப் பின்னர் எகிப்து இஃவான்களை பலர் விமர்சித்தபோது அதனைக் கடுமையாக எதிர்த்தவர். கள அனுபவத்தை சரிவர புரிந்து கொள்வதற்கு முன்பே கருத்துச் சொல்வதற்கு முந்திக் கொள்வது தவறு என்றார். உண்மையான போராளிகள் சிறையில் இருக்கும் நிலையில் நான்கு சுவர்களுக்குள் இருந்து கொண்டு களத்தையே ஏறெடுத்தும் பார்க்காதவர்கள் அவசரப்பட்டு பேச வருவது அபத்தமானது என கடுமையாக அன்று சாடினார். இன்றும் அதே கருத்தில் தான் அவர் இருக்கின்றார்.

ஆனால் இன்று அமைப்பின் தலைமைப் பதவியில் இருப்பவர்கள் நாட்டுக்கு வெளியே இருந்து கொண்டு அறிக்கை விடுகிறார்கள். அவர்கள் மரியாதைக்குரியவர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவர்கள் எவருமே விசாரணைக்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல. தவறும் தப்பும் செய்யாத புனிதர்களும் அல்ல. எனவே தலைமைத்துவம் விட்டுள்ள தவறுகளை சுட்டிக்காட்டுவது, அதனை உரிய சந்தர்ப்பத்தில் சரிசெய்து கொள்ளும் நோக்கில் கேள்வி எழுப்புவது, விமர்சிப்பது அமைப்புக்களின் செழுமைக்கான போஷாக்காகும். இப்படியான சந்தர்ப்பங்களில் மௌனமாக இருப்பதுவே துரோகமான செயல் என தமீமி துணிந்து கூறுகிறார்.

மேலும் எனது வார்த்தைகள் யாரோடும் உள்ள சொந்த விருப்பு வெறுப்புக்காக கூறியதல்ல. இன்று இஸ்லாமிய அமைப்புக்கள் பல்வேறு சவால்களை எதிர்நோக்கியுள்ளன. அதிலும் குறிப்பாக இஃவானிய தஃவா அமைப்பை சிதைத்து சின்னாபின்னமாக்கி உலக அரங்கில் இருந்து வெளியேற்றுவதற்காக பாரிய வேலைத்திட்டங்கள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

எனவே நான் கூறும் விடயங்கள் சமூக நலனுக்காகவும் பாதுகாப்பிற்காகவும் மாத்திரமே. அவ்வாறே இந்த தாய் அமைப்பு பாரிய சவால்களை முறியடிக்கும் வகையில் ஒரு அரணாக இருந்து முன்னோக்கி நகர வேண்டும் என்பதற்காகவே எனது கருத்துக்களை முன்வைக்கின்றேன் என தமீமி குறிப்பிட்டுள்ளார்கள்.

இஃவான்களின் தீர்மானம் எடுக்கும் உயர் பீடத்தில் நான் இருந்திருந்தால் இப்படித்தான் நடந்து கொண்டிருப்பேன் என்ற தலைப்பில் வெளியான அஸாம் தமீமியின் விமர்சனம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வீரமிக்க ஒரு கர்ஜனையாகும் என கலாநிதி அம்ர் தர்ராஜ் குறிப்பிட்டுள்ளார். இவர் முர்ஸியின் ஆட்சியில் திட்டமிடல் அமைச்சராக இருந்தவர். புரட்சிக்குப் பிந்திய இஃவான்களின் நிர்வாக ஒழுங்கு பற்றி பேசும் அஸாம் தமீமியின் அனல் பொறிக்கும் விமர்சன வார்த்தைகள் தேங்கிய குட்டையில் விழுந்த கல்லாகும். நிச்சயமாக இந்தக்கல் மாற்றத்தை நோக்கிய அதிர்வுகளை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை எனக்குண்டு என தர்ராஜ் மேலும் சிலாகித்து கூறியுள்ளார்கள்.

உண்மையில் சகோதரத்துவ அமைப்பு சமகாலத்தில் பன்முக சவால்களுக்கும் சதிக்கும்பல்களின் தீவிர தாக்குதல்களுக்கும் உட்பட்டுள்ளது. இன்று முஸ்லிம் உலகம் வாழ்வா சாவா என்ற ஜீவ மரணப் போராட்டத்தைத் தொடர்கிறது. நாடுகளை குட்டிச் சுவராக்கும் அமெரிக்காவின் சூழ்ச்சியின் வேகம் கூடிவருகிறது. முஸ்லிம்களின் இரத்தத்தை முஸ்லிம்கள் கையாலேயே ஓட்டுவதற்கு எதிரிகள் திட்டம் போட்டுள்ளனர்.

இந்த நிலையில் தவிர்க்க முடியாத பல்வேறு நிர்ப்பந்த சூழ்நிலைகளால் எகிப்தில் உள்ள சகோதரத்துவ அமைப்பும் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு கருத்து மோதல்களும் கூர்மையடைந்துள்ளன. லண்டனை தளமாகக் கொண்ட தலைமைத்துவத்தின் பலவீனங்களை தெளிவாக உணர முடிகிறது. தலைமைகளுடனான தொடர்பாடல் வழிமுறைகள் முயக்கமாக உள்ளன.

உண்மையில் அமைப்பின் தற்போதைய நிலையானது இயங்கு திசை தெரியாமல் நடுக்கடலில் தள்ளாடும் ஒரு கப்பலின் நிலைக்கு ஒத்திருக்கிறது என்ற கசப்பான உண்மையை தமீமி பயமின்றிப் பேசுகின்றார். கரை சேர்வதற்கு பொருத்தமான ஒரு மாலுமி தேவை என்பதையே அவர் சுட்டிக் காட்டி வருகின்றார்.

மூத்த தலைமைகளுக்கும் புதிய தலைமுறையினருக்கும் இடையில் புரிந்துணர்வு போதாமை காணப்படுகிறது. சிதைந்து போயுள்ள நிலையில் புரிந்துணர்வும் இல்லாமல் பாரிய சவால்களுக்கு எப்படி முகம் கொடுக்க முடியும்? தமீமியின் நியாயமான கேள்வி தலைமைத்துவப் பொறுப்பில் உள்ள அனைவருக்கும் பொருந்தக் கூடியதே.

பதவிக் கதிரையில் ஏறி அமர்ந்தவர்கள் தக்க சமயத்தில் இறங்கி வருவதற்கும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற உண்மையைத்தான் தமீமி சொல்ல முனைகிறார்.



சவால்களின் கனதியைப் புரியாமல், வாழும் காலத்தின் மாற்றங்களையும் ஆழங்களையும் விளங்காமல் வேறு திசையில் தலைமை பயணிக்கிறது. சீரணிப்பதற்குக் கஷ்டமாக இருந்தாலும் நமது நாட்டு அண்மைக்கால போக்குகளும் இப்படித்தான் உள்ளன. கழுத் துப் போகும் பாரிய பிரச்சினைகள் விசுபரூபம் எடுத்துள்ள வேளையில் நாம் வாழ்கின்றோம். இனவாதிகளின் தீவிர பரப்புரையால் எமது எதிர்காலத்திற்கு பாரிய அச்சுறுத்தல் வளர்ந்துள்ளது. இந்த இக்கட்டான நிலையில் சமூகத்திற்கு வழிகாட்ட வேண்டிய நாம் அபத்தமான வாதங்களை மின்பரில் பேசுபவர்களாக இருக்கின்றோம். காரணம் எங்கு போகவேண்டும் என்ற திசை தலைமைக்கும் தெரியாது, பயணிகளுக்கும் தெரியாது. எனவே தான் உருப்படியான தலைமை தேவை என தமீமி வாதிக்கிறார்.

சுற்றுச் சூழல் அரசியல் நகர்வுகளையும் மக்கள் அபிலாசைகளையும் போராடும் களத்தையும் நுணுக்கமாக தெரியாமல் ஓர் அங்குலம் கூட எம்மால் நகரவே முடியாது. இந்நிலையில் ஒரு அமைப்பு என்ன செய்யவேண்டும் என்பதற்கான பல உபதேசங்களை தமீமி அவர்கள் முன்வைத்துள்ளார்கள்.

அந்த உபதேசங்களை ''சகோதரத்துவ அமைப்பின் தீர்மானம் எடுக்கும் உயர் பீடத்தில் நான் இருந்திருந்தால் இப்படித் தான் நடந்து கொண்டிருப்பேன்'' என்ற வாசகத்தின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்கள். முதலில் லண்டன் காரியாலயத்தை இழுத்து மூடுவேன். போனவர்களை திருப்பி அழைத்து வருவேன். சவால்களுக்கு எதிராகப் போராடுவதற்கு முன்பு அணியை பலப்படுத்தி கட்டியெழுப்பும் பணியை முதன்மைப்படுத்துவேன். அப்புறம் தான் அடுத்த வேலைகளுக்கு வருவேன் என நெஞ்சுரத்துடன் உரத்துக் கூறியுள்ளார்.

எனவே ஆழ அகலம் தெரியாமல் செய்வதெல்லாவற்றையும் செய்து விட்டு மன்னிப்போடு மட்டும் நிறுத்தி விடாமல் பின்வரும் விடயங்களில் மிகுந்த கவனமெடுக்க வேண்டும் என தமீமி உபதேசம் செய்கிறார்.

1. தற்போதுள்ள முதன்மை தேவை ஒற்றுமையாகும். ஒரு உறுதியான தலைமைத்துவத்தின் கீழ் ஓரணியாக திரண்டு போராடும் சக்திமிக்க அணியை உருவாக்க வேண்டும். சவால்களுக்கு தீர்வு நோக்கி போக முன்பு இந்த ஒற்றுமை அவசியமானது. கருத்து முரண்பாடுகள் இருக்கலாம். ஆனால் பாரிய சவால்களுக்கு எதிராக ஒரே திசையில் அனைவரும் ஒன்றுபடுவதற்கு அது தடையாக இருக்காது.

2. அமைப்பின் இலக்கையும் அடைவுகளையும் பலப்படுத்தும் வகையில் யார் முன்வந்து செயற்பட்டாலும் அதனை வரவேற்க வேண்டும். நாம் மட்டும் தான் களத்தில் வேலை செய்வோம் எமது அனுமதியோடு தான் மற்றவர்கள் வேலை செய்யவேண்டும் என்ற மனோபாவம் அகற்றப்பட வேண்டும். பலர் பல்வேறு வழிகளில் எமது உயர்ந்த இலக்குகளுக்கு உதவியாக பணி செய்யலாம். அவர்கள் அனைவருக்கும் கதவு திறந்தே இருக்க வேண்டும்.

3. மரணம் மட்டும் பதவி வகிக்கும் முறைமை மாற்றப்பட வேண்டும். வளர்ந்து வருவோருக்கு முதியோர்கள் இடம் கொடுக்க வேண்டும். இளைய தலைமுறைக்கு அனுபவசாலிகள் தங்களது ஆலோசனைகளை வழங்கலாம். எமது நாட்டின் சிவில் சமூக நிறுவனங்களின் மந்த நிலைக்கும் முன்னேற முடியாமைக்குமான முதற் காரணம் இதுவே.

4. புதிய சிந்தனைகளை தடுக்கும் போக்கு கூடவே கூடாது. அறிவுகள் வித்தியாசப்படும். தேடல்களின் வீச்சு ஆளுக்கு ஆள் வேறுபடும். உண்மையில் தேடல்கள் இல்லாத வாழ்க்கை தேங்கிப் போன குட்டையாகும். புத்திஜீவிகளின் காத்திரமான புதிய சிந்தனைகளுக்கு தலைமையில் இருப்பவர்கள் வரவேற்று வழிவிடவேண்டும்.

5. ஏற்கனவே அமைப்புக்கு உள்ளே இருந்த புத்திஜீவிகள் ஒரு சில கருத்து வேறுபாடு காரணமாக அல்லது அமைப்பின் இறுக்கமான போக்கின் காரணமாக அல்லது வேறு பல காரணங்களுக்காக அமைப்பை விட்டு தூரமாகி இருக்கலாம். ஆனால் தற்போதைய நிலவரத்தை கருத்திற் கொண்டு பரஸ்பரம் விட்டுக் கொடுத்து சென்றவர்கள் திரும்பி வர வேண்டும். அமைப்பும் அனைவரையும் மீண்டும் உள்வாங்க வேண்டும்.

6. அனைத்து விவாகரங்களையும் நாமே செய்வோம் என்ற நிலை மாற வேண்டும். துறை சார்ந்தோருக்கு அந்த துறைகளில் இடம் கொடுக்க வேண்டும்.

7. தலைமைப் பதவிகளில் இருப்பவர்கள் மற்றும் முக்கயிமான பொறுப்புக்களில் உள்ளவர்கள் திறமை அடிப்படையில் தெரிவாகுவதில்லை. குறித்த அமைப்புக்களின் விசுவாசத்திற்கு ஏற்பவே முன்னுரிமைப்படுத்தப்படுகின்றனர். இந் நிலையும் மாறவேண்டும். திறமை, தகுதியுடையோர்களுக்கு பொறுப்புக்களை கொடுப்பதற்கு முன்வரவேண்டும்.

இந்த விமர்சனங்கள் யாருடைய மனதையும் புண்படுத்துவதற்கு அல்ல. குறிப்பிட்ட ஒருவரது அல்லது ஒரு அமைப்பினது செயற்பாடுகளை விமர்சிப்பது என்பது அவரையோ அல்லது அந்த நிறுவனத்தையோ வெறுக்கிறறோம் அல்லது குற்றவாளியாக பார்க்கிறோம் என்ற அர்த்தம் கிடையாது.

நாங்கள் மனிதர்கள். மனிதர்கள் பல வீனமானவர்களாகவே படைக்கப்பட்டுள்ளனர். நமது செயற்பாடுகள் சரியாக இருப்பது போலவே தவறாகவும் இருக்கலாம். எனவே தவறு நிகழ்வது தீமையன்று. ஆனால் தவறை தவறு என்று சுட்டிக்காட்ட வேண்டும். தவறுகள் தொடராமல் முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். இல்லாவிட்டால் நோய் மேனியெங்கும் பரவி அழிவிற்கு ஆளாக நேரிடும்.

எனவே ஒருவர், தனிபரையோ அல்லது நிறுவனத்தையோ அல்லது தஃவா அமைப்பையோ உயர் பண்பாடுகளோடு இங்கிதமான முறையில் சரியான ஆதாரங்களோடு அறிவுபூர்வமான வகையில் விமர்சிக்கின்றார் என்றால் அதனை நாம் சாதகமாகப் பார்க்க வேண்டும். அவர் சமூக நலனுக்காகவே குரல் கொடுக்கின்றார் என்பதை புரிய வேண்டும். அந்த விமர்சனத்தை நம் எழுச்சிக்கான பயணத்தின் மீது விதை போல் விழுந்த கல்லாகவே நோக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2016 சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள்

2016-12-06 முதல் 17 ஆம் திகதி வரை நடைபெற்ற சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்துள்ள நிலையில், உயர் தரத்திற்கான தயாரிப்புகளில் மாணவர்களும் பெற்றோர்களும் ஈடுபட்டுள்ளனர். கடந்த ஆண்டில் சுமார் 7 இலட்சம் பரீட்சார்த்திகள் இப்பரீட்சையில் தோற்றினர். சமீபத்திய வரலாற்றில் மிக அதிகளவிலானோர் தோற்றிய பரீட்சை இதுவே. 5669 நிலையங்களில் இப்பரீட்சை நடைபெற்றது.

நாடளாவிய ரீதியில் பரீட்சைப் பெறுபேறுகள் முன்னைய ஆண்டை விட முன்னேற்றகரமானது என்றே கருதப்படுகின்றது. உயர் தரம் கற்பதற்குத் தகுதி பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 10,000 ஆல் அதிகரித்துள்ளது. முக்கிய பாடங்களில் விஷேட சித்தி பெற்ற மாணவர்களின் தொகையும் அதிகரித்துள்ளது. அந்த வகையில் 2015 இல் சாதாரண தரப் பரீட்சையில் தோற்றியோரில் 69.33 வீதமானோர் உயர் தரத்திற்குத் தகுதிபெற்றிருந்தனர். 2016 பரீட்சைக்குத் தோற்றியோரில் இந்த வீதாசாரம் 69.94 ஆக உயர்ந்துள்ளது. எண்ணிக்கை ரீதியில் 10,000 ஆல் அதிகரித்துள்ளது.

அனைத்துப் பாடங்களிலும் A சித்தி பெற்ற மாணவர்களின் தொகை இவ்வருடம் 8224 ஆகும். 2015 இல் அனைத்துப் பாடங்களிலும் A சித்தி பெற்றோர் தொகை 6103 ஆகும்.

ஒப்பீட்டு ரீதியில் 2016 இல் எல்லாப் பாடங்களிலும் A சித்தி பெற்றோர் வீதாசாரம் 32 ஆல் அதிகரித்துள்ளது.

கணிதம், வரலாறு ஆகிய பாடங்களில் சென்ற ஆண்டை விட சித்தியடைந்தோர் தொகை அதிகரித்துள்ளது. குறிப்பாக கணிதத்தில் A சித்தி பெற்றோர் தொகை 2015 உடன் ஒப்பிடும் போது 7 வீதத்தால் அதிகரித்துள்ளது. இம்முறை 62.8 வீதமான மாணவர்கள் கணிதத்திலும் 80.75 வீதமான மாணவர்கள் வரலாற்றுப் பாடத்திலும் சித்தியடைந்துள்ளனர்.

முஸ்லிம் பாடசாலைகளின் பெறுபேறுகள் சமநிலையற்ற போக்கைக் காண்பிக்கின்றன. 100 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருப்பின் 4 மாணவர்களுக்கு எல்லாப் பாடங்களிலும் A சித்தி கிடைக்கப் பெற்றிருப்பதோடு, ஏனைய அரைவாசி மாணவர்கள் உயர் தரத்திற்குத் தேவையான ஆகக் குறைந்த தகுதியைப் பெற்றுள்ளனர். அதேவேளை, அரைவாசிப் பேர் உயர் தரத்திற்குத் தகுதி பெறவில்லை. சில பாடசாலைகளில் உயர் தரத்திற்கு வெறும் 20 வீதமான மாணவர்களே தகுதி பெற்றுள்ளனர். கணிதம், ஆங்கிலம் போன்ற பாடங்களில் சித்தியடைந்தோர் தொகை குறைவாகும்.

முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட சில கல்வி வளயங்களில் பரீட்சைக்குத் தோற்றியோரில் 50 வீதத்திற்கும் அதிகமானவர்கள் கணிதப் பாடத்தில் சித்தியடையவில்லை என்பது 2015 இன் மதிப்பீடாகும். இவ்வாண்டிலும் இதனை ஒத்த ஓர் கணிப்பீட்டைப் பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

200 மாணவர்கள் தரம் ஒன்றில் சேர்த்துக் கொள்ளப்படும் எமது பாடசாலைகளில், உயர் தரத்திற்கு 30 அல்லது 40 மாணவர்கள் வந்து சேர்கின்றனர். மீதி மாணவர்களுக்கு என்ன நடக்கின்றது என்பது விரிவான ஆய்வுக்குரியது. சித்தியடைந்த மாணவர்கள் தமது ஆர்வம், இயலுமை மற்றும் கற்கைநெறிகளுக்கான தொழிற் சந்தை வாய்ப்புகள் என்பவற்றைக் கருத்திற் கொண்டே கற்கைப் புலங்களைத் தீர்மானிக்க வேண்டும்.

கலை, முகாமை என்பவற்றைக் கடந்து கணித விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பப் புலங்களை தெரிவு செய்வதற்கான வழிகாட்டல்கள் சரியாக வழங்கப்பட வேண்டும். கலைத் துறையில் அனைத்துப் பாடங்களையும் மென் தெரிவுகளாக மேற்கொள்ளக் கூடாது. அது பல்கலைக்கழக நுழைவு வாய்ப்பைத் தடுத்து விடும்.

இதுபோன்ற வழிகாட்டல்களை உரியவர்களிடம் பெற்று உயர் தர கற்கைப் புலத்தை மாணவர்கள் தெரிவுசெய்வது பொருத்தமானது.

# பிள்ளைகளை பிழையான சீராக்கத்திலிருந்து பாதுகாத்தல்



ஒரு பிள்ளை தாயின் கருவறையில் வாழ்ந்து, குடும்ப அங்கத்தவர்களிடமும் பாடசாலைச் சூழலிலும் சமூக சூழலிலும் தனது உளவியல் தேவைகளை நிறைவுசெய்கின்றது. இப்பிள்ளை பல்வேறு காரணங்களால் கல்வியில் மெய்த் திறன் மாணவனாகவும் சமநிலை மாணவனாகவும் விஷேட உதவி தேவைப்படும் மாணவனாகவும் மாறுகின்றது. விஷேட உதவி தேவைப்படும் மாணவர்களுள் பிழையான சீராக்கம் பெற்ற பிள்ளை உடற் குறைபாடுடைய பிள்ளை, மந்தபுத்தியுள்ள பிள்ளை, நெறிபிறழ்ந்த பிள்ளை என்பன உள்ளடங்குகின்றது.

இதில் பிழையான சீராக்கம் பெற்ற பிள்ளை என்பது பொருத்தப்பாடு அடையாத பிள்ளை எனலாம். இவர்கள் விஷேட உதவிகள் பெறும் உரித்துடையவர்கள். ஏனெனில், இவர்கள் சமூகத்துடன் பொருத்தப்பாடற்ற நடத்தைகளை வெளியிடுகின்றனர்.

அத்தகைய நடத்தைகள் பிள்ளைக்கும் சமூகத்திற்கும் தீங்கு விளைவிக்கின்றன. இவர்கள் அடிக்கடி சக மாணவர்களுடன் அல்லது பிள்ளைகளுடன் சச்சரவில் ஈடுபடுகின்றனர். சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கின்றனர். ஆசிரியர்களுக்கும் பெரியவர்களுக்கும் கீழ்ப்படியாது நடக்கின்றனர். கடும் சொற்களைப் பிரயோகிப்பர். கத்தி பிளேட் போன்ற சிறிய கருவிகளை வைத்திருப்பர். குற்றச் செயல்களிலும் ஈடுபடுவர். இவர்களை இனங்கண்டு உதவுவது ஆசிரியர்களதும் குடும்ப அங்கத்தவர்களதும் கடமையாகும்.

பிள்ளைகள் பிழையான சீராக்கம் பெற பல்வேறு காரணிகள் பங்களிக்கின்றன. பிள்ளையின் உளவியல் தேவைகள் கவனிக்கப்படாமை, பரம்பரைக் காரணிகள், சமூகக் காரணிகள், உடற் குறைபாடு, விரைவான சமூக மாற்றம் என்பன அவற்றுள் முக்கியமானவை. ஒரு பிள்ளையின் உளவியல் தேவைகளான அன்பு, கணிப்பு, பாதுகாப்பு என்பவை நிறைவுசெய்யப்படாவிட்டால் அப்பிள்ளை பிழையான சீராக்கம் பெற வாய்ப்புண்டு என உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

ஒருவருடைய தேவைகளை சமூகம் அங்கீகரித்த வழியில் பெற வாய்ப்பளிக்கப்படாவிட்டால் அத்தேவைகளை பிழையான வழிகளில் பெறுவதற்கு முயற்சிக்கப்படுகின்றது. Eyzesenck மற்றும் Shields ஆகிய உளவியலாளர்கள் பரம்பரைக் காரணிகளே பிழையான சீராக்கத்திற்குப் பிரதான காரணம் என்கின்றனர். தனிப்பிட்ட ஒருவர் தாழ்வுச் சிக்கலுக்கு உள்ளாகின்றபோது அதனை எதிர்கொள்வதற்கு மத்திய நரம்புத் தொகுதி பலம் வாய்ந்ததாக இருக்க வேண்டும். இம்மத்திய நரம்புத் தொகுதி பரம்பரைக் குறைபாட்டின் காரணமாக பலவீனமுற்றதாக இருப்பின் பிள்ளை பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கும். இந்நிலை பிள்ளையை மனமுரண்பாடான பிழையான சீராக்கத்திற்கு இட்டுச் செல்லும்.

சமூகக் காரணிகளில் பெற்றோர்களதும் குடும்ப அங்கத்தவர்களினதும் அன்பு கிடைக்காமையும் ஒன்றாகும். அன்பும் வழிகாட்டலும் கிடைக்காத பிள்ளைகள் பிழையான சீராக்கத்திற்கு உள்ளாகின்றனர். தண்டனைகளும் பாராபட்சங்களும் கூட இந்நிலைக்கு இட்டுச் செல்கின்றது.

அதேபோன்று வீட்டிலும் பாடசாலையிலும் வழங்கப்படும் அறநெறிப் பெறுமானங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாக அமையும்போது பிள்ளை பிழையான சீராக்கம் பெறுகின்றது. திருடுவது பிழையானதும் குற்றமானதுமான செயல் என பாடசாலையில் போதிக்கப்படும் அதேநேரம், பாடசாலைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய திருடுவது குற்றமில்லை என வீட்டில் போதிக்கப்படுகின்றது. இது பிள்ளைகளைப் பிழையான சீராக்கத்திற்கு உட்படுத்துகின்றது.

உடற் குறைபாடுடைய பிள்ளைகளின் குறைகள் சக மாணவர்களால் சுட்டிக்காட்டப்படும்போதும் ஏனைய மாணவர்கள் போன்று தம்மால் விளையாட முடியாது என்று கருதுகின்றபோதும் பிழையான சீராக்கம் ஏற்படுகின்றது.

தாய் தந்தையர் இருவரும் தொழிலுக்குச் செல்லல், கடும் வறுமை, குறைந்தளவிலான ஓய்வு போன்றவற்றால் பெற்றோரின் அன்பு, கணிப்பு, பாதுகாப்பு என்பவற்றை பிள்ளைகளால் பெற முடியாமல் போகின்றது. பாடசாலையின் ஒழுங்கற்ற நிர்வாகம், ஆசிரியரின் மாறுபட்ட மனப்பாங்கு என்பனவும் இதற்குப் பங்களிக்கின்றது. எனவே பெற்றோர், ஆசிரியர், பாடசாலை நிர்வாகம் அனைத்தும் தனது பங்களிப்பை முறையாகச் செய்வதன் மூலமே மாணவர்கள் பிழையாக சீராக்கம் பெறுவதை தவிர்க்கலாம்.

## இல்ஹாம் உமர்

### மினசோடா பிரதிநிதிகள் சபை உறுப்பினர்

இல்ஹாம் உமர் சோமாலியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தற்போது அமெரிக்கா வின் மினசோடா மாநிலத்தில் முதல் பெண் அரசியல்வாதி என்ற பெருமையைப் பெற்றவர். பெண்களின் வலையமைப்பொன்றில் பணிப்பாளராகப் பணியாற்றி வரும் இவர், 2016 ஜனநாயகத் தொழிலாளர் கட்சியில் இணைந்து மினசோடா தேர்தலில் வெற்றி பெற்றார்.

1982 இல் சோமாலியாவில் பிறந்த இவரது குடும்பத்தில் மொத்தம் 7 பேர். ஆக இளம் வயதான இவரது தந்தை நூர் உமர் முஹம்மத். அவர் ஒரு பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர். தாய் ஒரு யெமனியர். இல்ஹாம் உமர் குழந்தையாக இருந்த போதே அவரது தாய் மரணித்து விட்டார். தனது தந்தையும் பாட்டனாருமே அவரை வளர்த்தனர்.

அவரது பாட்டனார் அபூ பக்கர் சோமாலிய கப்பல் போக்குவரத்துத் துறையில் பணிப்பாளராகக் கடமையாற்றியவர். அவரது மாமனார் மற்றும் தாயின் சகோதரிகள் அரச சேவையில் பணியாற்றியவர்கள். சிலர் கல்வித் துறையிலும் பணியாற்றியுள்ளனர்.

1991 இல் சோமாலியாவில் சிவில் யுத்தம் மூண்டபோது இல்ஹாம் உமரின் குடும்பம் நாட்டை விட்டு வெளியேறி, கென்யாவுக்கு இடம் பெயர்ந்தது. நான்கு ஆண்டுகளை இல்ஹாம் அகதி முகாம்களில் கழித்தார். 1995 இல் ஐக்கிய அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்தது அவரது குடும்பம். தொடக்கத்தில் வேர்ஜினியா மாநிலத்திலுள்ள ஆலிங்டன் எனும் பகுதியில் குடியேறியது. அங்கிருந்து மினியாபொலிஸ் பகுதிக்கு இடம்பெயர்ந்தது. அங்குதான் இல்ஹாம் ஆங்கிலத்தை மிக வேகமாகவும், சரளமாகவும் கற்றுக் கொண்டார். 3 மாதங்களில் சோமாலிய, ஆங்கில மொழிபெயர்ப்பாளராக மாறினார். தனது 14 ஆவது வயதில் அவரது பாட்டனாரின் மொழி பெயர்ப்பாளராக அவர் செல்லுமிடங்களுக்கெல்லாம் அலைந்து திரிந்தார்.



எடிசன் உயர் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் பெற்ற இல் ஹாம், பின்னர் வடடக்கோடா அரச பல்கலைக்கழகத்தில் பயின்றார். அங்கு முஸ்லிம் மாணவர் சம்மேளனத்திலும் இணைந்தார். அரசியல் பீடத்தில் பயின்ற அவர், சர்வதேச உறவுகள் துறையையும் கற்றார். அப்பல்கலைக்கழகத்தில் சமுதாயப் போஷாக்கு விழிப்புணர்வாளராக தன் தொழிலை ஆரம்பித்தார்.

2012 இல் மினசோட்டா மாநிலத்தில் சட்ட சபைத் தேர்தல் நடைபெற்றபோது குறிப்பிட்ட கட்சியின் பிரச்சாரதராக மாறினார். ஜனநாயக தொழிலாளர் கட்சியின் வேட்பாளர் என்ரோஜோன்ஸனின் பிரச்சார முகாமையாளராகப் பணியாற்றியதன் விளை வாக, ஜோன்ஸின் வெற்றியீட்டியதன் பின்னர் அவரது சிரேஷ்ட கொள்கை வகுப்பாளராகச் செயல்பட்டார். இந்தக் காலம் அவர் தனது வாழ்வில் பல்வேறு நெருக்கடிகளை சந்திக்க நேர்ந்தது. கட்சி எதிரிகள் அவரைத் தாக்கினர்.

2015 இல் பெண்கள் வலையமைப்பில் பணிப்பாளராகத் தெரிவுசெய்யப்பட்டார். அமெரிக்காவில் வாழும் கிழக்காபிரிக்கப் பெண்களை அரசியல் விழிப்பூட்டுவதும் தலைமைத்துவப் பயிற்சியளிப்பதுமே இந்நிறுவனத்தின் பணியாகும். அரசியல், கல்வி, மனித உரிமைகள், வறுமை ஒழிப்பு, பொருளாதார வலுவூட்டல், சூழலியல் தொடர்பாக செறிந்த அனுபவங்களைப் பெற்ற இல்ஹாம் உமர், 2015 நவம்பரில் நடந்த மினசோட்டா மாநிலத்திற்கான பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றார்.

2017 ஜனவரி 03 இல் உத்தியோகபூர்வமாக பதவியேயற்ற அவர் பல்வேறு விருதுகளையும், வென்றுள்ளார். ஜனநாயகக் தொழிலாளர் கட்சி அவருக்கு 'வளரும் நட்சத்திரம்' என்ற விருதை வழங்கியுள்ளது. அமெரிக்காவிலுள்ள சோமாலிய சமூகத்தின் சமூகத் தலைமைத்துவ விருதும் அவருக்குக் கிடைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொசூல்... (09 ம் பக்கத் தொடர்)



ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்பது சுன்னி முஸ்லிம்களின் முக்கிய கோரிக்கையாகும். குறிப்பாக, சத்ர் படையணி, மஹ்தி படையணி என்பன ஈராக்கின் குழு மோதலை மோசமான பக்கங்களுக்கு இட்டுச் சென்றவை. இன்று இவற்றின் தலைவர்கள் தேசியத் தலைவர்களாகப் பார்க்கப்படுகிறார்கள்.

பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டம் ஈராக்கில் பயங்கரவாதத்திற்கு எதிரான சேவை என்ற பெயரில் அமுலில் உள்ளது. முன்னாள் பிரதமர் நூரி மாலிக்கி இந்தச் சட்டத்தின் கீழ் தனிப்பட்ட இராணுவப் படையொன்றை பராமரித்து வந்தார். ஐசிஸ் ஊடுருவலின் பின்னர் அது மீண்டும் இராணுவப் படையுடன் இணைக்கப் பட்டது.

CTS Counter Terrorism Service இற்கு இராணுவப் பயிற்சி வழங்கியது அமெரிக்கா. தற்போது ஐசிஸ் பயங்கரத்தை சாக்காய் வைத்து ட்ரம்பின் அரசாங்கம் மீண்டும் ஈராக்கிற்குள் ஊடுருவப் போகிறது. ஈரான், துருக்கி என்பன ஈராக்கின் தேசியப் பாதுகாப்பு மற்றும் ஸ்திரப்பாட்டை நிலை நிறுத்தும் வகையிலான ஓர் அரசியல் வகிபாகத்தை ஏற்க வேண்டியுள்ளது. தனிப்பிட்ட நலன்களில் மாத்திரம் இலக்கு வைத்து, சர்வதேச மற்றும் பிராந்திய நாடுகள் செயற்படுமானால், ஈராக்கை போரிலிருந்து மீட்பது இன்னும் சில தசாப்தங்களுக்குக் கடினமாகவே இருக்கும்.

(கலிபோர்னியா அரச பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறையில் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றும் இப்றாஹிம் அல் மராஷி அல் ஜஸீரா இணையத் தளத்தில் எழுதிய கட்டுரையைத் தழுவியது.)

## தான் செய்தது... (01 ம் பக்கத் தொடர்)



அரசாங்க திணைக்களங்களும் இந்த DCC இன் முடிவுக்கு கட்டுப்பட வேண்டும் என ஜனாதிபதி அறிவுறுத்தல் வழங்கியிருந்தார். அவரே இதனை மீறியுள்ளார். அதிலும் மார்ச் 27 ஆம் திகதி வரை காலக்கெடு விடுக்கப்பட்ட அறிவித்தல் தந்தாலும் இது தாடர்பான முறைப்பாடுகள் வைப்பதற்கு அவகாசம் வழங்காமல் மூன்று நாட்கள் முன்னதாகவே வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டு விட்டது.

முஸ்லிம்களின் காணிகள் பெறிக்கப்பட்டது தொடர்பில் பல சட்டவிரோத செயற்பாடுகள் நடந்திருக்கின்றன. இது தொடர்பாக நான் பல வழக்குகளைத் தொடுத்து நடவடிக்கை எடுத்து வருகின்றேன். இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதும் நான் ஜனாதிபதியுடன் கதைத்து நிலைமைகளை விளங்கப்படுத்தினேன். ஆனாலும் அவர் செய்த்து சரி என்ற நிலைப்பாட்டிலேயே அவர் இருக்கின்றார். இதனால் எல்லோருமாக இணைந்து இதற்கு அழுத்தம் கொடுத்தால் தான் இழந்த காணிகளை நாங்கள் மீளப் பெற முடியும்.

## போதைப் பொருளை... (01 ம் பக்கத் தொடர்)

சிலாவத்துறையில் அமைக்கப்பட்டுள்ள கடற்படை முகாம் தொடர்பில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் ஸல்மான் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

600 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட சிலாவத்துறையில் 450 ஏக்கர் நிலத்தில் வீடுகளும் விவசாய நிலங்களும் உள்ளன. 1990 ஆம் ஆண்டில் முஸ்லிம்கள் இங்கிருந்து வெளியேறியதன் பின்னர் 60 ஏக்கருக்கும் மேற்பட்ட தனியார் காணிகள் அபகரிக்கப்பட்டு கடற்படையினரால் முகாம் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் இந்தப் பிரதேச மக்களுக்குச் சொந்தமான கடைத் தொகுதிகள், வீடுகள், பாடசாலை, வைத்திய சாலை, பொதுநூலகம் அனைத்தும் படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளன. கடற்படையினரிடம் உள்ள இந்தக் காணிகள் விடுவிக்கப்படுமா என அவர் கேட்ட பிரதமர் பதிலளிக்கும் போது, இந்தப் பிரதேசத்திலிருந்து போதைப் பொருள் கடத்தப்படுவதாக படையினர் தெரிவித்துள்ளனர். போதைப் பொருள் கடத்தலை தடுப்பதற்கு இந்த முகாம் எமக்கு அத்தியாவசியமாகிறது. பாதுகாப்பு சமநிலையைப் பேணுவதற்கு இதனை நாங்கள் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

போதைப் பொருள் கடத்தப்படுவதாகக் கூறி முஸ்லிம்களின் காணிகளைத் தவிர எந்தக் காணியும் படையினரால் கையகப்படுத்தப்பட்டதாக தகவல்கள் வெளிவந்ததில்லை. நீர்கொழும்பு, சிலாபம் கடற்கரைப் பகுதிகளில் இருந்து போதைப் பொருள்கடத்தல் நடைபெறுவதாக செய்திகள் வெளிவந்தபோதும் இன்றுவரை இந்த இடங்களில் மக்களின் குடியிருப்புக் காணிகள் பறிக்கப்பட்டு முகாம்கள் அமைக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வில்பத்து... (10 ம் பக்கத் தொடர்)

அண்மையில் ஜனாதிபதியின் செயலாளர் பி.பி. அபேயகோன், மக்களின் குடியேற்றப் பிரதேசம் வர்த்தமானி அறிவித்தலில் சேர்க்கப்படவில்லை எனக் குறிப்பிட்டிருந்தார். இந்தப் பிரதேச மக்களின் பிரதான ஜீவனோபாயம் விவசாயமாகும். யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் இம்மக்கள் தமது காணிகளில் விவசாயம் செய்து வாழ முடியும் என்ற நம்பிக்கையில்தான் குடியேறினார்கள். தற்போது வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியில் இம்மக்களின் விவசாயக் காணிகள் மற்றும் இப்பிரதேசத்தின் தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் வியாயடிக்குளம் என்பன வில்பத்து சரணாலயத்திற்குள் உள்ளடக்கப்பட்டுள்ள நிலையில் முசலிப் பிரதேச மக்களை திட்டமிட்டு வெளியேற்றும் ஒரு நடவடிக்கையை அரசாங்கம் இரகசியமாக மேற்கொண்டு வருவதாகவே தோன்றுகிறது.

இந்தப் பிரச்சினை தொடர்பில் அரசாங்கம் குறிப்பாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க எத்தகைய எதிர்ப்பையும் வெளியிடாமல் அமைதி காப்பதும் ஆரோக்கியமானதல்ல. முசலிப் பிரதேச மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினையானது இந்த நாட்டு முஸ்லிம்களின் பொதுவான ஒரு பிரச்சினையாகும். எனவே, முஸ்லிம் அரசியல்வாதிகளும் முஸ்லிம் சிவில் அமைப்புக்களும் ஒன்றுபட்டு அரசாங்கத்துக்கு பாரிய அழுத்தத்தை கொடுக்காத வரை இம்மக்களுக்கு நியாயமான தீர்வு கிட்டப் போவதில்லை.

## நல்லாட்சி... (01 ம் பக்கத் தொடர்)



அவ்வாறே கடந்த 2017 மார்ச் 24 ஆம் திகதி ஜனாதிபதி அவர்களால் வெளியிடப் பட்ட வர்த்தமானி அறிவித்த லும் பிரதேச மக்களின் கருத்துக்களை முன்வைப்பதற்கு போதிய அவகாசம் வழங்கப்படாமலும் வெளிப்படைத்தன்மை இல்லாமலும் அவசரமாக மேறகொள்ளப்பட்டதாகும். இவ்வாறு தற்போதைய அரசாங்கம் செயற்படுவது தாம் கூறிக் கொள்ளும் நல்லாட்சி விழுமியங்களுக்கு முரணானதாகும்.

கடந்த அரசாங்கத்தைப் போன்றே தற்போதைய அரசாங்கமும் முசலிப் பிரதேச மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைகள் எதனையும் கருத்திற் கொள்ளாமலேயே தற்போதைய வர்த்தமானி அறிவித்தலை மேற்கொண்டுள்ளது.

எனவே முசலிப் பிரதேச மக்களுக்கு நீதி கிடைக்கத்தக்கதாகவும் அவர்களின் முறையான மீள்குடியேற்றத்துக்கு வழிவகுக்கத்தக்கதாகவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## பரம்பரை...
(05ம் பக்கத் தொடர்)

குருதிச் சோகை அதிகமாகக் காணப்படும் வறிய நாடுகளுக்கு அரிசியை உண்பதன் மூலமாகவே இரும்புச் சத்தையும் இணைத்துப் பெறக் கூடிய வாய்ப்பை இப்புதிய கண்டுபிடிப்பு சாத்தியப்படுத்தியுள்ளது.

அதேபோன்று பீறட்-கரோட்டி எனும் பதார்த்தத்தை அதிகமாகக் கொண்ட நெல்லினங்களும் இப்போது இம்முறையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இப்பதார்த்தம் சோற்றை உட்கொண்டதன் பின்னர் உடலினுள் விட்டமின் A ஆக மாற்றப்படுகின்றது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

ஆக வெறும் காபோஹைதரேட்டை மட்டும் வழங்கும் அரிசியிலிருந்து இரும்புச் சத்து மற்றும் புரதத்தையும் விட்டமின்களையும் வழங்கும் வகையில் விஞ்ஞானம் தாவர பரம்பரைப் பொறியியலை அறிமுகப்படுத்தியுள்ளது. (தொடரும்)

## பல முயற்சிகள்... (01 ம் பக்கத் தொடர்)



தயாராகி வருவதையும் தெரிவித்தார். இதன் போது முஸ்லிம்களது பிரச்சினைகளை செவிமடுப்பதற்காக ஜனாதிபதியின் செயலாளரை அவர் ஒதுக்கித் தந்தார். முஸ்லிம்களுக்கு அநீதி நடந்திருப்பதை அவர் இந்தச் சந்திப்பின் போது உணர்ந்து கொண்டார்.

இது தொடர்பில் என்ன சட்டநடவடிக்கை எடுக்கலாம் என நாங்கள் சம்பவம் நடந்த உடனேயே சட்டத்தரணிகளை அணுகினோம். சட்ட நடவடிக்கைகள் எப்படியும் தாமதமாகும் என்பதனால் உரிய இடங்களுக்கு அழுத்தங்களைக் கொடுப்பதற்கு நாங்கள் முயற்சி செய்தோம். சிவில் அமைப்புக்களை இணைத்துக் கொண்டு நாட்டின் தேசிய ஊடகங்களை அழைத்து ஊடக மாநாடு நடத்தி தெளிவுபடுத்தியுள்ளோம்.

எங்களது எதிர்ப்பினையும் வெளிப்படுத்தினோம். குத்பாக்களைப் பயன்படுத்தி இது தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டுவது தொடர்பில் ஜம்மிய்யதுல் உலமாவுக்கு தேவையான தகவல்களை வழங்கினோம். தற்போது இது தொடர்பிலான சட்ட நடவடிக்கைகளுக்கு தயாராகி வருகிறோம்.

## ஊடகங்கள்... (07 ம் பக்கத் தொடர்)



செல்ல வேண்டும் எனக் கூறினேன். முஸ்லிம்கள் தேசிய பத்திரிகைகளையே நடாத்த வேண்டும். தேசிய ஊடகங்களை வழிநடத்த வேண்டும். அதில் சகல விடயங்களையும் கட்டுப்பாட்டோடு பிரசுரமாக்க வேண்டும்.

இலங்கையில் ஷரீஆ முறையில் பத்திரிகைகளை நடாத்த முடியாது. முஸ்லிம் மீடியாக்கள் எனும்போது அது முஸ்லிம்களுக்குள்ளால் மாத்திரமே சுருங்கி விடும். எமது செய்திகள் அடுத்தவர்களிடம் போய் சேராது. முஸ்லிம் பத்திரிகைகள் முஸ்லிம்களுக்குள் ஓர் எழுச்சியை உருவாக்கலாம். ஆனால் தமிழர்களோ சிங்களவர்களோ அதனை வாங்க மாட்டார்கள்.

தேசிய பத்திரிகைகளிலோ அல்லது ஏனைய தேசிய ஊடகங்களிலோ முஸ்லிம்கள் பற்றிய விவகாரகங்கள் வரும்போது அதன் தாக்கம் அதிகமாக இருக்கும். முஸ்லிம்கள் அல்லாதவர் களோடு இணைந்து ஊடகங்களை உருவாக்கினால் அதுவே சிறப்பாக அமையும்.

## SAITM... (03ம் பக்கத் தொடர்)

SAITM சார்பாக குரல் கொடுக்கும் நிலைக்கு இன்று ஊழல் அரசியல் வேரூன்றியுள்ளது.

840 கோடி ரூபா நிதிப் புரள்வுடனான SAITM அமைப்பு தனது இருப்பைப் பாதுகாக்க பல கோடிகளை செலவு செய்யும். அதன் ஒரு வெளிப்பாடே அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு நாடகம். இந்த நிகழ்வானது SAITM ஊழல், மோசடி, அரசியல் செல்வாக்கு மற்றும் பாதாள உலக குழுக்களுடன் அதன் தொடர்பை ஊர்ஜிதம் செய்கிறது.

கல்வித் துறையில் தனியார் துறையின் பங்கேற்பு தவிர்க்க முடியாத ஒன்றாகும். இருப்பினும் வருடாந்தம் பாடசாலைக் கல்வியில் பிரவேசிக்கும் 3,50,000 மாணவர்களின் கல்வி உரிமைகளையும் சிறப்புரிமை கொண்ட ஒரு சில குடும்பங்களுக்கு மாத்திரம் தாரைவார்ப்பது அனுமதிக்கப்படக் கூடிய ஒரு விடயமல்ல. தகைமையின் அடிப்படையில் உயர் தரத்தில் சாதனை படைத்தவர்களுக்கு நிகராக அதிகாரத்தையும், பண பலத்தையும் கொண்டு 'மருத்துவர்களாக' முயற்சிக்கும் சமூக நீதிக்குப் புறம்பான அனைத்து வழிகளும் அடைக்கப்பட வேண்டும்.

உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று பல்கலைக்கழக அனுமதி கிடைக்கப் பெறாத 83% மாணவர்களுக்கும் அரச மற்றும் தனியார் துறை பங்கேற்புடன் உரிய தொழில் பயிற்சிகளும், பட்டப் படிப்புக்குமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால் அது மருத்துவத் துறையாக இருக்க வேண்டியதில்லை.

மருத்துவத் துறையானது இயல்பாகவே திறமையின் அடிப்படையில் பல தகுதிகாண் பரீட்சைகளிலும் சாதனை படைத்த உண்மையான சாதனையாளர்களுக்கு மாத்திரமே ஒதுக்கப்பட வேண்டும். அரசாங்கத்தின் ஏனைய செலவினங்களுடன் ஒப்பிடுகையில் வருடாந்தம் 2,000 வைத்தியர்களை உருவாக்குவதற்காக நிதி ஒதுக்கீடு செய்வது எந்தவகையிலும் ஒரு சவாலாக அமையாது.

வெளிநாடுகளில் மருத்துவப் பட்டம் பெற்றவர்களை அனுமதிக்கும் நாம் உள்நாட்டு மருத்துவப் பட்டதாரிகளையும் அங்கீகரித்தால் என்ன என பலர் SAITM ஐ நியாயப்படுத்த முயற்சிக்கின்றனர். அது எமது சட்ட ஏற்பாட்டில் உள்ள ஒரு சில குறைபாடுகளின் வெளிப்பாடாகும். ஆனால் அரசியல் ஊழல் மற்றும் உலக வங்கியின் அழுத்தம் காரணமாக அதனைச் சீர்செய்வதில் அரசாங்கம் தயக்கம் காட்டி வருகின்றது.

விவசாயியின் பிள்ளை போட்டிப் பரீட்சை அடிப்படையில் மருத்துவபீடத்துக்கு அனுமதிக்கப்படுவது ஒரு சமூக மாற்றத்தின் வெளிப்பாடாகும். ஆனால் ஒரு தனவந்தனின் அல்லது அரசியல்வாதியின் பிள்ளை கோடி ரூபா செலுத்தி மருத்துவக் கல்லூரியில் பட்டம் பெறுவது ஊழலின் மற்றொரு வடிமேயன்றி வேறில்லை. அதேநேரம், இலவசக் கல்வி மூலம் வைத்தியரான விவசாயின் மகன் தனது பிள்ளையை தகைமைக்குப் புறம்பாக பண பலத்தைக் கொண்டு எப்படியாவது வைத்தியராக்க செயற்படுவது பணவெறியேயன்றி வேறில்லை.

திறமையையும், ஆற்றலையும், அதிஷ்டத்தையும் இறைவன் நாடியவர்களுக்கு வழங்குவான். அதன் முலம் மாத்திரமே உலகில் சமூக நீதி நிலைத்திருக்கும். பண பலமும், அதிகாரமும் கொண்டவர்கள் தாம் விரும்பிய பட்டத்தைப் பெறலாம், தமது பிள்ளைகளை தாம் நினைத்த பதவியில் அமர்த்த முடியும் என்று நினைப்பது அவர்களது அறியாமை. உலக வரலாற்றில் சாதனை படைத்தவர்கள் தமது இயல்பான திறன்களால் உந்தப்பட்டவர்களேயன்றி பின்வழியால் நுழைந்தவர்கள் அல்ல என்பது பல சந்தர்ப்பங்களிலும் நிரூபிக்கப்பட்ட விடயமாகும்.

அறிவுத் திறனுடன் மூலதனத்தின் ஒன்றிணைவும் பல சாதனை படைத்த தொழில் முயற்சியாளர்களைத் தோற்றுவித்துள்ளது. உயர்தரக் கல்வித் தகைமைகளுடன் பல கோடி ரூபா முதலீடு செய்யும் ஆற்றல் மிக்கவர்களுக்காக சிறந்த வாய்ப்புக்கள் உள்நாட்டிலும் தாராளமாக உள்ளன. தமது தகைமைக்கும் ஆற்றலுக்கும் ஏற்ப தமது தொழில் நிலையை தெரிவு செய்யுமிடத்து அது வெற்றியளிக்கக் கூடியதாக அமையும்.

வெற்றிபெறுவதாயின் கட்டாயம் அது மருத்துவத் துறையாக மாத்திரம் இருக்க வேண்டும் என்ற நியதி எங்குமில்லை. இருப்பினும் தெளிவான அரச கொள்கைகளும் வழிகாட்டல்களும் இல்லாமையுடன் ஊழல் அரசியலும் SAITM பிரச்சினையை நீடிக்கச் செய்துள்ளது.

## க.பொ.த... (06 ம் பக்கத் தொடர்)

தெரிவு செய்வதில் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். கலைத் துறையில் கற்கின்ற மாணவர்களுக்கு சமூக விஞ்ஞானப் பாடங்கள், சமயம் சார்ந்த பாடங்கள், அழகியல் பாடங்கள், மொழி சார்ந்த பாடங்கள் ஆகிய 4 பிரிவுகளில் இருந்து பாடங்களைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இவற்றில் கூடுதலான Z புள்ளியைப் பெற்றுத் தரக்கூடிய பாடங்கள், ஒன்றோடொன்று தொடர்புபட்ட பாடங்கள் என்பவற்றைக் கருத்திற் கொண்டு மாணவர்கள் பாடங்களைத் தெரிவு செய்தால் கற்றல் செயற்பாடுகள் மற்றும் பல்கலைக்கழகத் தெரிவு என்பன இலகுவாக அமை யும்.

என்றாலும் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று குறித்த பாடங்களில் மாணவர்களின் விருப்பு, குறித்த பாடங்களைக் கற்றுக் கொள்வதற்கான வசதிகள் என்பவற்றையும் கவனத்திற் கொண்டே பாடத் தெரிவுகள் இடம்பெற வேண்டும்.

இங்கு மிகக் கவனமாகப் புரிந்து கொள்ள வேண்டிய விடயம், க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்பதே மாணவர்களின் முதல் இலக்காக இருக்க வேண்டும். அதற்காக தமக்கு விருப்பமான பாடம், குறித்த பாடங்களைக் கற்பதற்கான ஆற்றல், இயலுமை மற்றும் குறித்த பாடங்களை தமது பிரதேசத்தில் கற்பதற்கான வசதி வாய்ப்புக்கள் என்பவற்றைக் கவனத்திற் கொண்டு பொருத்தமான பாடங்களைத் தெரிவு செய்து கற்க வேண்டும்.

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் ஒரு மாணவர் சித்தியடைவாராக இருந்தால் அவர் தனது உயர் கல்வியைத் தொடர்வதற்கான பல வகையான வாய்ப்புக்களும் துறைகளும் எமது நாட்டில் காணப்படுகின்றன. அந்தவகையில், க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எழுதி சித்தியடைந்துள்ள மாணவர்கள் தமது வாழ்வின் தீர்க்கமான ஒரு கட்டத்தில் இருக்கின்றீர்கள். இந்தக் கட்டத்தில் பெற்றோர்கள், ஆசிரியர்களின் வழிகாட்டல்களோடு தமக்கு இயலுமான, விருப்பமான துறையை மிகக் கவனமாகத் தெரிவு செய்து தமது எதிர்காலத்துக்கான பாதையை செப்பனிட்டுக் கொள்வது மாணவர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

மீள்பார்வை உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | - ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | - 4000.00 | ஐக்கிய இராச்சியம் | - 5500.00 |
| 13 இதழ்கள் | - ரூபா 650.00 | தனிப் பிரதி | - ரூபா 100.00 | மலேசியா | - 4000.00 | அமெரிக்கா | - 6500.00 |
| 26 இதழ்கள் | - ரூபா 1300.00 | ஒரு வருடம் | - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | - 4000.00 | அவுஸ்திரேலியா | - 4700.00 |
| | | | | | | சீனா | - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:
MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0112 691258 People's Bank A/c: 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறியவர்களுக்கு வழிகாட்டுங்கள்



க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்திருக்கின்றன. ஒன்பது பாடங்களிலும் ஏ தர சித்திகளைப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை போன்றே அனைத்து பாடங்களிலும் சித்தியடையத் தவறிய மாணவர்களதும் எண்ணிக்கை காணப்படுகின்றது.

பரீட்சை எழுதிய மொத்த மாணவர்களில் சுமார் அரைப்பகுதியினர் உயர்தரம் கற்பதற்கான தகைமையைப் பெறவில்லை. இம்மாணவர்களது எதிர்காலம் எப்படி அமையப் போகின்றது என்பதை இப்போதே சிந்திக்க வேண்டும். சித்தியடைந்த மாணவர்களுக்கு தாம் எத்துறையை தெரிவுசெய்யப் போகின்றோம் என்பதை தீர்மானிப்பது அவ்வளவு சிரமமான தல்ல. ஆனால், சித்தியடையத் தவறிய மாணவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்?

அவர்களில் மீண்டுமொருமுறை பரீட்சைக்குத் தோற்றி, சித்தியடையும் எதிர்பார்ப்புள்ளவர்கள் இருக்கலாம், தொழில்நுட்ப கற்கை நெறிகளை தொடர விரும்புவர்கள் இருக்கலாம், தொழிற் துறைகளுக்கு செல்ல ஆர்வமுள்ளவர்கள் இருக்கலாம். என்ன செய்வதென்றே தெரியாதவர்களும் இருக்கலாம்.

இத்தகைய மாணவர்களை இனங்கண்டு, அவர்களுக்குப் பொருத்தமான துறைகளில் அவர்களை ஈடுபடுத்துவதற்கு ஆசிரியர் சமூகமும் பெற்றோரும் முன்வர வேண்டும். அப்போது நாட்டின் எதிர்கால தலைமுறை வெற்றிகரமான தலைமுறையாக காணப்படும்.

# அதிசயங்கள் ஏழு

அஸ்மா தரம் 5 வரை ஒரு கிராமப் புற பாடசாலையில் கல்வி கற்றாள். அவள் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து, நகர்ப்புற பாடசாலை ஒன்றுக்கு தெரிவு செய்யப் பட்டாள். அவள் அப்பாடசாலையில் தரம் ஆறில் இணைந்து கொண்டாள்.

முதல் நாள் பாடசாலைக்கு செல்வதற்காக அவள் மிகவும் மகிழ்ச்சியுடன் தயாரானாள். குறித்த நேரத்தில் பஸ் வண்டி வந்தது. அவள் ஆசையுடன் அதில் ஏறினாள். பாடசாலையை அடைந்தவுடன் அவள் ஏனைய மாணவர்களிடம் அவளது வகுப்பறையை கேட்டு தெரிந்து கொண்டாள்.

அவளது வகுப்பறையில் இருந்த மாணவர்கள் அவளது கிராமப்புற தோற்றம், ஆடை என்பவற்றைக் கொண்டு அவளை பரிகசித்தனர். இதனை அவதானித்த வகுப்பாசிரியர் அம்மாணவர்களை கண்டித்ததுடன், அவளுக்கு ஆறுதலும் சொன்னார்.

பின்னர் வகுப்பறையில் ஆசிரியை ஒரு பயிற்சியை வழங்கினார். உலகின் ஏழு அதிசயங்களை எழுதுங்கள் என்பதே வினாவாகும். அனைத்து மாணவர்களும் ஆர்வமாகவும் அவசரமாகவும் விடையெழுதினார்கள். அஸ்மா மாத்திரம் மிக மெதுவாக எழுதிக் கொண்டிருந்தாள். அவளிடம் சென்ற ஆசிரியை, நீங்கள் அவசரப்பட வேண்டாம். மற்றைய மாணவர்கள் நேற்றுத்தான் அந்தப் பாடத்தை படித்தார்கள். உங்களுக்கு தெரிந்ததை எழுதுங்கள் என்று தைரியப்படுத்தினார்.



தொகுப்பு: ஏ.ஸீ.எம். நதீர்

அனைத்து மாணவர்களும் எழுதி முடித்த பின்னர்தான் அஸ்மா எழுதி முடித்தாள்.

ஆசிரியை அனைவரது விடைகளையும் வாசித்தார். சீனப் பெருஞ்சுவர், பிரமிட், தாஜ்மஹால் என பட்டியல் தொடர்ந்தது.

இறுதியாக அஸ்மாவின் விடைகளை வாசித்தார் ஆசிரியை. ஏழு அதிசயங்களாவன: பார்க்க முடியுமாக இருத்தல், கேட்க முடியுமாக இருத்தல், உணர முடியுமாக இருத்தல், அன்பு செலுத்த முடியுமாக இருத்தல், சிரிக்க முடியுமாக இருத்தல், சிந்திக்க முடியுமாக இருத்தல்...

ஆசிரியையும் மாணவர்களும் வாயடைத்துப் போயினர்.

சிறிது நேரத்தில் ஆசிரியை கூறினார்: இன்று ஒரு கிராமத்தை சேர்ந்த சிறுமி எங்களுக்கு இறைவனால் வழங்கப்பட்ட அதிசயங்களை ஞாபகப்படுத்திச் சென்றார்.

# பெரும் பயணம்

## الرحلة الكبرى

## le Grand Voyage

சாளை பஷீர் ஆரிஃப்

பயணம் வழியாக வாழ்க்கையை அறிதல்; வாழ்க்கையையே ஒரு பயணமாக உணர்தல் என ஒன்றை ஒன்று பிரிக்க முடியாத கண்ணியின் தொடர் சுழற்சியை நிதானித்து கவனித்தால் ஒன்று புரியும். பயணம் என்கின்ற பெரிய சூழல் வளையம் சுருங்கிச் சுருங்கி இறுதியில் மறுமைப் பெருவெளியில் மூலப் புள்ளியில் போய் ஒடுங்கும் வரை முடிவடைவதே இல்லை என்ற பேருண்மை விளங்க வரும்.

இந்த சுழற்சியின் முடிவற்ற தன்மையை திரைப்படமாக பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. "LE GRAND VOYAGE" என்கின்ற ஃப்ரெஞ்ச் மொழிப்படம். இதன் பொருள் 'பெரும் பயணம்' 108 நிமிடங்கள் ஓடக்கூடிய இந்த படம், 2004 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இஸ்மாயில் ஃபரூக்கியின் எழுத்து - இயக்கத்தில் வெளியான ஆண்டே இந்தப் படம் தொராந்தோ, வெனீஸ் பன்னாட்டு திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டு பாராட்டுக்களை பெற்றது.

படத்தின் கதை இதுதான்!

தென் பிரான்ஸில் மொராக்கிய முஸ்லிம் குடும்பம் ஒன்று வாழ்ந்து வருகின்றது. குடும்பத் தலைவர் (முஹம்மத் மஜ்த்) வயதானவர். அவருக்கு மகள்களும் இரண்டு மகன்களும் உள்ளனர்.

அந்த வருடம் அவர் ஹஜ் பயணத்தை தனது காரின் மூலம் நிறைவேற்றத் தீர்மானிக்கின்றார். அவருக்கோ வண்டி ஓட்டத் தெரியாது. ஓட்டத் தெரிந்த மூத்த மகன் போதையில் போக்குவரத்து சமிக்ஞைகளை மீறியதால் அவரின் வண்டி உரிமம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இளைய மகன் ரிதாவை கார் ஓட்ட அழைக்கின்றார் தந்தை. வேண்டா வெறுப்பாக ரிதா உடன் செல்கின்றான்.

வாழ்வின் மாலைப்பொழுதில் இருக்கும் தந்தை - கட்டிளம் பருவத்தின் பொங்கு நுரையாக இருக்கும் மகன் ரிதாவிற்கும் இடையேயான முரண்கள் ஒவ்வொன்றாக பயணத்தில் மேலெழுந்து வருகின்றது.

தந்தை இஸ்லாமிய நடைமுறைகளைப் பேணி வாழும் முஸ்லிம். மகன் ரிதாவோ முழுக்க மேலைப் பண்பாட்டில் தோய்ந்தவன். பிரெஞ்ச் மொழியில் மட்டுமே உரையாடுவதை விரும்புபவன்.

பயணம் முழுக்க தந்தை அவனுடன் அரபி மொழியிலேயே பேசுகின்றார். ரிதாவோ பிரெஞ்ச் மொழியிலேயே உரையாடுகின்றான். வாழ்வின் அழுத்தத்தின் காரணமாக உலகின் எந்த மூலையில் வசிக்க வேண்டி வந்தாலும் தன்னுடைய மத, மொழி, பண்பாட்டு வேர்களை ஒருவன் இழந்து விடக்கூடாது என்ற தந்தையின் உறுதிப்பாடு முதல் பாடமாக எழுகின்றது.

தொடர் பயணத்தில் தூங்கி ஓய்வெடுக்காமல் வண்டியை மிக வேகமாக செலுத்துகின்றான் ரிதா. ஓய்வெடுத்து மெதுவாக செலுத்தும்படி கூறும் தந்தை ''வேகமாக சென்ற அனைவருமே இறந்துவிட்டார்கள்'' என அறிவுறுத்துகின்றார்.

''மெதுவாக சென்றால் எப்போது போய் சேர்வது?'' என பையன் கேட்கின்றான். தந்தையின் பேச்சை அவன் பொருட்படுத்தாமல் இருக்கவே அதிவேகத்தில் செல்லும் வண்டியின் பிரேக்கை அவர் சடாரெனப் போடுகின்றார். நிலைகுலையும் வண்டியால் அதிர்ச்சியடையும் மகனிடம் ''இங்கே நான்தான் தீர்மானிப்பவன்'' எனக் கூறுகின்றார்.

வண்டியின் வேகத்தை மரணத்துடன் ஒப்பிட்டு ஆட்சேபிக்கும் தந்தை மகனுடனான உறவில் தன்னுடைய இடத்தை நிலை நிறுத்துவதற்காக வண்டியை விபத்துக்குள்ளாக்கும் முறையில் நிறுத்தும் காட்சிகளின் வழியாக இரு முரண்களின் இயக்கத்தை காண முடிகின்றது .

இந்தக் காட்சியின் சொற்களை எப்படிப் புரிந்து கொள்வது? தன்னுடைய அதிகாரத்தை மறுஉறுதிப்படுத்திக் கொள்வது என்பதின் சிறு வடிவமா? அல்லது அதிரடி முடிவின் வழியாக மகனுக்கு புகட்டப்படும் போதனையா?

* * *

இத்தாலி, ஸ்லோவேனியா, குரேஷியா, ஸெர்பியா, பல்கேரியா, துருக்கி, சிரியா, ஜோர்தான் போன்ற நாடுகளின் வழியாக தந்தையும் மகனும் பயணிக்கின்றனர். வெவ்வேறு வகையான மொழி, பண்பாடு, கொட்டும் பனி, கொதிக்கும் பாலை போன்ற பல வகையான நிலப் பரப்புகளும் கால சூழ்நிலைகளும் மிக அழகான காட்சிகளாக மலர்கின்றன.

எளிதான வான் வழிப் பயணத்தை விட்டு விட்டு கடினமான இந்த கார் பயணத்தை நீங்கள் ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும்? என்ற மகனின் கேள்விக்கு ''நானாவது காரில் வருகின்றேன். ஆனால் எனது தந்தை அதுதான் உனது பாட்டனார் ஹஜ் பயணத்தை தோவேறு கழுதையில் மேற்கொண்டார். கடலில் உள்ள உப்பு நீரானது மேகங்களினால் எப்படி தூய்மைப்படுத்தப்படுகின்றதோ அதே போல ஒரு ஹாஜி ஹஜ் பயணத்திலிருந்து திரும்பும்போது பாவங்களிலிருந்து நீங்குகின்றார்'' என்கின்றார்.

தந்தையின் நேரம் தவறா தொழுகையும் குர்ஆன் ஓதுதலும் திக்ரும் நடைபெற பயணம் தொடர்கின்றது. ஒரு இடத்தில் வழிதவறி விடுகின்றனர். அப்போது ஒரு பெண்ணிடம் வழி கேட்க அவரோ இவர்களின் வண்டியில் ஏறிக் கொள்கின்றார். எதுவும் பேச மறுக்கும் அவர் வண்டியை விட்டு [illegible] மறுக்கிறார். பெருந்தன்மை[illegible]



பிட்ட தொலைவு வரை அந்த பெண்ணை வண்டியில் அனுமதிப்பதோடு அவருக்கு உணவும் வாங்கிக் கொடுக்கின்றனர்.

மொழிப் பிரச்சினை காரணமாக துருக்கி நாட்டின் சோதனைச் சாவடியை கடப்பதில் சிக்கல் ஏற்படுகின்றது. அப்போது முஸ்தஃபா என்ற துருக்கியர் உதவி செய்கின்றார். அப்படியே அது நட்பாக விரிகின்றது. முதல் பார்வையிலேயே தனது நிறைந்த பட்டறிவின் வழியாக முஸ்தஃபாவை எடை போடும் தந்தை அந்த நட்பை விரும்பவில்லை.

துருக்கியை சுற்றிப் பார்க்க விரும்பும் மகனைப் பார்த்து ''நாம் நெடுந் தொலைவு போக வேண்டியுள்ளது. இடையில் சுற்றிப் பார்க்க நேரமில்லை'' என மறுக்கின்றார் தந்தை.

மகன் ரிதாவிற்கு தன் வீட்டில் தேனீர் கொடுத்து விருந்தோம்ப அழைக்கின்றார் முஸ்தஃபா. தந்தையின் கட்டுப்பாடுகளில் இறுகிப் போயிருக்கும் ரிதா முஸ்தாஃபாவின் தோழமைக்கு தன்னை ஒப்புவிக்கின்றான்.

மதுக்குப்பியைக் காட்டி ரிதாவுக்குள் ஒளிந்திருக்கும் விருப்பங்களை மெல்ல திறந்து விடுகின்றார் முஸ்தஃபா. சிறிது தயங்கும் ரிதாவைப் பார்த்து ''சிறிய தண்ணீர் குவளையில் கொஞ்சம் மதுவை கலந்தால் குவளை முழுவதும் மதுவாகி விடும். ஆனால் அதே அளவு மதுவை கடலில் கலந்தால் ஒன்றும் ஆகி விடப் போவதில்லை'' என்ற சூஃபி ஞானியின் மேற்கோள் ஒன்றைக் கூறி அவனை மது அருந்த வைக்கின்றார்.

போதையில் மிதக்கும் ரிதாவை விடுதியில் விட்டு விட்டு செல்கின்றார் முஸ்தஃபா. மறுநாள் காலை கண் விழித்து பார்க்கும்போது ''பணத்தைக் காணவில்லை'' எனதந்தை பதறுகின்றார்.

முஸ்தஃபாவின் மீது ஐயப் பார்வை விழ காவல் நிலையத்திற்கு அவரை அழைத்து செல்லுகின்றனர். விசாரணையில் முஸ்தஃபா தான் குற்றமற்றவன் என வாதிடுகின்றார். முஸ்தஃபா பணம் திருடியதை தான் நேரடியாகக் காணாத போது குற்றச்சாட்டை மேற்கொண்டு வலியுறுத்த விரும்பவில்லை என ரிதாவின் தந்தை சொல்கின்றார்.

ஹஜ் பயணத்திலிருந்து திரும்பும் போது தேவைப்படும் பணத்தை வேறொரு உறையில் போட்டு வைத்தி[illegible] பிடுகின்றனர்.

முட்டையும் ரொட்டியும் தனக்கு போதாது, இறைச்சிதான் வேண்டும் என மகன் அடம்பிடிக்கின்றான். அவனுக்காக ஒரு ஆட்டை வாங்கி அறுக்க முனையும் போது ஆட்டை சரியாக பிடிக்கத் தெரியாமல் ரிதா தப்ப விடுகின்றான்.

இடைவழியில் யாசிக்கும் ஒரு ஏழைக்கு தர்மம் வழங்குகின்றார் தந்தை. அவரின் சிக்கன நடவடிக்கைகளினாலும் இறைச்சி தின்ன முடியாத எரிச்சலிலும் இருந்த ரிதா அந்த ஏழையின் கையிலிருந்த தர்மப் பணத்தை பிடுங்குகின்றான். கோபத்தில் மகனை அறைந்து விடுகின்றார் தந்தை.

இனி தன்னால் வண்டி ஓட்டி வர முடியாது என ரிதா மறுத்து விடுகின்றான். ஒன்றாக பயணித்து வந்த இரண்டு உறவுகளுக்கிடையில் உரசி வந்த இரு முரண்களும் திடீரென வலுத்து பிரிவிற்கான புள்ளியில் வந்து நிற்கின்றது. தந்தை மகனுக்கிடையேயான வலிமிக்க ஆழ்ந்த மௌனமானது

சுடும் பாலைமணலில் தீக்குழம்பு போல கொதித்து நிற்கின்றது.

ஒரு தீர்மானத்திற்கு வந்தவராய் சங்கடமிக்க அந்த மௌனத்தை கலைக்கின்றார் தந்தை. அடுத்த பெரிய ஊர் வரும் வரை காரை ஓட்டி வருமாறும் அங்கு அந்த வண்டியை விற்று கிடைக்கும் பணத்தில் ரிதாவை ஊருக்கு திரும்ப அனுப்பி வைத்து விட்டு, தான் மட்டும் தன்னந் தனியாக ஹஜ் பயணத்தை மேற்கொள்ளப் போவதாகவும் தெரிவிக்கின்றார்.

தந்தையின் சொற்களில் தோய்ந்திருந்த முதிர்வும் கனிவும் உறுதியும் அமைதியும் தீக்குழியின் மீது கொட்டும் மழை நீர் போல ரிதாவின் பிடிவாதத்தை அவிழ்த்து விடுகின்றது. ஒற்றை கணத்தில் மொத்தமாக மலரும் காடு போல தந்தை மீதான பாசம் ரிதாவுக்குள் மீண்டு விடுகின்றது.

மீளத் தொடங்கும் பயணத்தில் தந்தை மகன் உறவின் புதிய விரிசல்கள் ஒட்டு தல்கள், காணாமல் போன பணத்தினால் ஏற்பட்ட தட்டுப்பாட்டை சமாளிக்கும் விதம், ஹஜ் பயணத்தின்போது ஏற் படும் நிகழ்வுகள் என படம் மலரின் இதழ் போல மெல்ல அவிழ்கின்றது.

சூஃபி ஞானியின் நல்லதொரு மேற்கோளை தனது தவறான செயலுக்காக முஸ்தஃபா கையாளும் காட்சியின் வழியாக ஆன்மீக பரவச பட்டறிவின் உன்னத வெளிப்பாடுகளை மனிதர்களின் அற்ப சிந்தனை / வாழ்க்கைத் தரம் எப்படியெல்லாம் திரிக்க முடியும் என்பதற்கு நல்லதொரு எடுத்துக் காட்டாக இருக்கின்றது.

கடலிலிருந்து உப்பு நீரானது மேகங்களினால் எப்படி தூய்மைப்படுத்தப் படுகின்றதோ அதே போல ஒரு ஹாஜி ஹஜ் பயணத்திலிருந்து திரும்பும்போது பாவங்களிலிருந்து நீங்குகின்றார் என்ற முதிய தந்தையின் சொற்களை சூஃபி ஞானியின் மேற்கோளுடன் இணைத்து நோக்கும்போது எளிய வாசகனுக்கும் அவை புரியும் படியாக மாறுகின்றது.

விலகி நிற்கும் மெய்மைகளை இணைத்துக் காட்டி நேரடி பாடம் நடத்தும் வேலையை செய்யாமல் வாசகர்களின் சிந்தனைக்கு விட்டு விடும் இயக்குநரின் உத்தி பாராட்டிற்குரியது.

இரண்டு மேற்கோள் கதைகளிலிருந்து உணர முடிந்தது இதுதான்:

குவளை என்பது மனித உடல். அதில் நிரப்பப்பட்ட நீர் என்பது மனித மனமாகிய ஆன்மா. இந்த நீர் குவளைக்குள் கலக்கப்படும் மது என்பது இச்சைகள், தவறான தூண்டுதல்கள், பாவங்களின் குறியீடு.

மனித ஆன்மாக்களை பாவங்கள் எளிதில் கறைப்படுத்த இயலும். ஆனால் இறைவனின் விரிந்த மன்னிப்பு என்ற பெரு நீரில் அந்த பாவங்களைக் கொட்டும்போது பாவங்களின் தீய இயல்புகள் மனிதனில் மிகைக்க முடியாமல் வலிமை இழந்து விடும். அதன் பிறகு இறைவனின் எல்லையற்ற கருணை என்கின்ற வான் மேகத்தின் உறிஞ்சலில் மதுவின் சாரமாகிய பாவக் கசப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு மனித ஆன்மாவானது மழை நீர் போன்று அதன் தொடக்க தூய்மையை பெறுகின்றது.

* * *

ஹஜ்ஜுக்காக பயணப்படும் முதியவர் முஹம்மத் மஜ்த் மக்காவை சென்றடையும் முன்னரே சக மனிதர்களுடனான தனது அற நடத்தைகளினால் இறைவனை முன்னோக்கிய தனது பாதையின் கதவுகளை திறந்து கொண்டே செல்கின்றார்.

பாவத்தைத் தொலைக்கும் முயற்சியான ஹஜ் பயணம் நிறைவேற முன்னரேயே அதற்கான விளைவுகள் முதியவர் முஹம்மத் மஜ்தின் உள்ளத்திலும் உடலிலும் சுனை நீர் போல சுரந்து கொண்டே இருக்கின்றது. ஒவ்வொரு நாளும் குழந்தையாக தன்னை புதுப்பித்துக் கொண்டே இருக்கின்றார்.

தன்னுடைய சொல்லிலும், செயலிலும் நோக்கத்திலும் ஒரு ஒத்திசைவை தொடர்ந்து பராமரித்து வரும் முதியவரின் வாழ்வு வந்தடையும் இடம் என்ன என்பதை இயக்குநர் படத்தின் கடைசி காட்சிகளில் அற்புதமாக சித்தரித்துள்ளார்.

தன்னுடைய பிள்ளைகளின் வளர்ப்பின்போது தான் செலுத்தத் தவறிய கவனத்தை ஹஜ்ஜின்போது உணரும் முதியவருக்கு இந்தப் பயணம் என்ன திரும்பக் கொடுத்தது?

''இந்த பயணப் பாத இங்க முடியுதுண்டா மறுபக்கம் தொடங்குதுதானே?. அப்போ முடிவு எது தொடக்கம் எது?'' என இந்தக் கட்டுரையின் தொடக்கத்தில் எழுந்த கேள்விக்கான விடையை இந்த படத்தில் தேட முனையும் நேயருக்கு முன்னால், ஆன்ம தேடல் நிறைந்த ஒரு பயணக் கதையின் பெரும் பாதைக்குள் அழகிய மரமொன்றின் சிறியதும் பெரியதுமான வளைந்ததும் நேரானதுமான பல்வேறு கிளைகளைப் போல புதிய புதிய பயணங்கள் முளைத்து முளைத்து சென்று கொண்டே இருக்கின்றது.

யூ டியூபில் ஆங்கில துணைத் தலைப்புகளுடன் காணக்கிடைக்கும் "LE GRAND VOYAGE" படத்தைப் பார்ப்பதின் வாயிலாக இந்த தேடலில் வாசகர்கள் இணைந்து கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






அமெரிக்காவில் இடம்பெற்ற மியாமி ஓபன் டென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் உலகின் முன்னணி வீரர்களான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் மற்றும் ஸ்பெய்னின் ரபேல் நடால் ஆகியோர் மோதினர். இதில், 6-3, 6-4 என்ற நேர் செட் கணக்கில் ரோஜர் பெடரர் வெற்றி பெற்று 3வது முறையாக மியாமி ஓபனில் சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

முன்னதாக 2005, 2006ம் ஆண்டுகளிலும் இந்தத் தொடரில் அவர் பட்டம் வென்றுள்ளார். தற்போது 35 வயதாகும் பெடரர் இந்த வெற்றி மூலம் மியாமி ஓபனை மிக அதிக வயதில் வென்ற வீரர் என்ற சாதனையையும் படைத்தார். 2017 ஆம் ஆண்டில் இதுவரை 20

# மியாமி ஓபன் டென்னிஸ்: நடாலை வீழ்த்தி ரோஜர் பெடரர் சம்பியன்

போட்டிகளில் விளையாடியுள்ள ரோஜர் பெடரர், 19 போட்டிகளில் வெற்றியீட்டியுள்ளார். தொடர்ந்து சிறப்பாக விளையாடி வரும் ரோஜர் பெடரர் இந்த ஆண்டில் கைப்பற்றிய 3 ஆவது பட்டமாக மியாமி ஓபன் அமைந்தது. ஏற்கனவே கிராண்ட்ஸ்லாம் தொடரான அவுஸ்திரேலிய ஓபன், இந்தியன் வெல்ஸ் தொடர்களிலும் ரோஜர் பெடரர் மகுடம் சூடியிருந்தார். இந்த 2 தொடர்களிலும் கூட ரபேல் நடாலை அவர் வீழ்த்தியிருந்தார். மியாமி ஓபன் இறுதிப் போட்டியிலும் ரபேல் நடாலை வீழ்த்தியதன் மூலம் இந்த ஆண்டில் அவருக்கு எதிராக 3 ஆவது வெற்றியை ரோஜர் பெடரர் பதிவு செய்துள்ளார்.

தொடர் வெற்றிகளின் மூலம் தர வரிசையில் ரோஜர் பெடரர் 4 ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ரபேல் நடாலை பொறுத்தவரை 5 ஆவது முறையாக மியாமி ஓபன் இறுதிப் போட்டியில் தோல்வியை சந்தித்துள்ளார். இதுவரை ஒரு முறை கூட மியாமி ஓபனை அவர் வென்றதில்லை. அத்துடன் இந்த ஆண்டில் 3 ஆவது முறையாக ஒரு தொடரின் இறுதிப் போட்டியில் அவர் தோல்வியடைந்துள்ளார். முன்னதாக மியாமி ஓபனை வென்ற பிறகு சுமார் 2 மாதங்கள் ஓய்வு எடுக்கப் போவதாக ரோஜர் பெடரர் அறிவித்தார். அடுத்து மே மாத கடைசியில் நடைபெறவுள்ள கிராண்ட்ஸ்லாம் தொடரான பிரெஞ்ச் ஓபனில்தான் அவர் விளையாடுவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

# இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களை ஜனாதிபதி சந்தித்தார்



இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் மற்றும் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரிகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்தித்து கடந்த ஞாயிற்றுக்கிழமை கலந்துரையாடியுள்ளார். இதன்போது இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் திலங்க சுமதிபால, விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர, தெரிவுக்குழுவின் தலைவர் சனத் ஜயசூரிய, இலங்கை அணியின் முன்னாள் வீரர் களுவிதரண, இலங்கை அணியின் பிரதம பயிற்றுவிப்பாளர் கிரஹம் போர்ட் மற்றும் இலங்கை அணி வீரர்கள் கலந்துகொண்டனர்.

# பாகிஸ்தானுக்கு தொடர் வெற்றி

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான கடைசி டி20 கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியது. பாகிஸ்தான் மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான 4 ஆவது மற்றும் கடைசி டி20 போட்டி போர்ட் ஒப் ஸ்பெயினில் இடம்பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி 4 போட்டிகள் கொண்ட டி20 போட்டித் தொடரை 3-1 என்ற கணக்கில் வென்றது. தொடரை வென்றதன் மூலம் பாகிஸ்தான் அணி தரவரிசையில் 2 இடங்கள் முன்னேறி 4 ஆவது இடத்தைப் பிடித்தது.

இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் வீரர் சொஹைப் மாலிக் 6 ஓட்டங்களை எட்டிய போது சக வீரர் முஹம்மட் ஹபீசை (78 போட்டிகளில் 1,619 ரன்கள்)




பின்தள்ளி 20 ஓவர் போட்டியில் அதிக ஓட்டங்கள் குவித்த 2வது பாகிஸ்தான் வீரராகவும், 9வது சர்வதேச வீரராகவும் மாறினார். அவர் 86 போட்டியில் ஆடி 1,625 ஓட்டங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. சர்வதேச அளவில் நியூஸிலாந்தை சேர்ந்த பிரண்டன் மெக்கலம் 2,140 ஓட்டங்களை (71 போட்டியில்) குவித்து முதலிடத்தில் உள்ளார்.

# சாதனை படைத்த மேர்சி கல்வி வளாகம்




புத்தளம் மாவட்டம், மதுரங்குளியில் ஆங்கில மொழி மூலம் கல்வி வழங்கும் ஒரு தனித்துவமான நிறுவனமான மேர்சி கல்வி வளாகம், 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு முதன் முறையாக மாணவர்களைத் தோற்றுவித்து சாதனை படைத்துள்ளது. க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய 65 மாணவர்களில் 88% ஆனோர் உயர் தரம் கற்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

இவர்களுள் 42 பேர் (65%) விஞ்ஞான, கணிதப் பிரிவிற்கும், 15 பேர் (23%) ஏனைய துறைகளுக்கும் தகைமை பெற்றுள்ளனர். உயர் தரத்திற்கு தகுதி பெறாத மாணவர்கள் தொழிற் பயிற்சியை பெறுவதற்கு இந்நிறுவனத்திலேயே ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இச்சாதனைக்குப் பங்களிப்புச் செய்த மாணவர்கள், ஆசிரியர்கள், வளாக பணியாட்கள் மற்றும் பெற்றோர்கள் அனைவரையும் நிருவாகம் மனமாற பாராட்டுகின்றது.

# நாடளாவிய ரீதியில் MFCDயின் தொடர்ச்சியான டெங்கு ஒழிப்பு செயற்திட்டம்




நாட்டின் பல பாகங்களிலும் டெங்கு உயிர் கொல்லி நோயினால் அவதியுறும் மக்களுக்கு உதவும் நோக்கில் கடந்த சில வாரங்களாக MFCD நிறுவனம் டெங்கு ஒழிப்பு செயற்திட்டத்தினை மேற்கொண்டு வருகின்றது. அதன் ஒரு செயற்திட்டமாக கடந்த 2017-04-01/02 சனி, ஞாயிறு தினங்களில் திருகோணமலை மாவட்ட கிண்ணியா, முள்ளிப்பொத்தானை மற்றும் தோப்பூர் மக்களுக்கான இலவச இரத்தப் பரிசோதனை மற்றும் நடமாடும் மருத்துவ சேவைகளை மேற்கொண்டது. இதில் டெங்கு நோய் தாக்கத்திற்கு உட்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படும் சுமார் 240 பேர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் 880 நோயாளிகளுக்கு இலவச மருத்துவ சிகிச்சையும் வழங்கப்பட்டது.

இப்பரிசோதனை முகாம் பிரதேச வைத்திய அதிகாரிகளின் வழிகாட்டலின் கீழ் இடம்பெற்றதோடு, மேர்சி லங்கா (Mercy Lanka) மற்றும் குவைட் நாட்டில் வாழும் இலங்கை முஸ்லிம் சகோதர்கள் குவைட் - IIC (Sri Lankan Muslim Community in Kuwait & Iqra) ஆகிய நிறுவனங்கள் இதற்கான நிதிப்பங்களிப்புக்களை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# GET TOGETHER AND AWARDING CEREMONY



OMSED Sri Lanka அமைப்பின் அங்கத்துவ நிறுவனங்களின் பொறுப்பாளர்களுக்கான ஒன்றுகூடல் மற்றும் 2016 ஆம் ஆண்டிற்கான தெரிவுசெய்யப்பட்ட சிறந்த இளைஞர் செயற்பாட்டாளர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வுகள் கடந்த 26.03.2017 ஞாயிற்றுக் கிழமை வரகாபொல Lakma Holidays Resort இல் இடம்பெற்றது. இதன்போது நாடு முழுவதும் இருந்து OMSED அமைப்பில் தங்களை அங்கத்துவ நிறுவனங்களாக இணைத்துக் கொண்டுள்ள சுமார் 40 பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர் செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர். வித்தியாசமான முறையில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த இந்நிகழ்ச்சியின் இறுதிப் பகுதியில் 2016 ஆம் ஆண்டு நிகழ்வுகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட மிகச் சிறந்த நான்கு பொறுப்பாளர்களுக்கு நினைவுச் சின்னம் மற்றும் அவர்களுடைய இளைஞர் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இவ்விறுதி நிகழ்வுகளில் சிறப்பு விருந்தினராக இலங்கை ஜமாஅதுஸ் ஸலாமாவின் தலைவர் உஸ்தாத் அஷ்ஷெய்க் ஆஸாத் அப்துல் முஈத் அவர்கள் கலந்துகொண்டார்.

தெரிவுசெய்யப்பட்ட நான்கு பொறுப்பாளர்கள்: 1. [illegible] - Kinniya 2. A.M.M Mafail - Kalkudah 3. M.L.M. Imthiyas - Eravur 4. Dr.Rajees - Akkaraipatru

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.